விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 11 வெள்ளிக்கிழமை (25.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 157

# ஞானசார தேரர் குற்றவாளி

# ஹோமாகம நீதிமன்றம் தீர்ப்பு



**(கொழும்பு) கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவை, ஹோமாகம நீதவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து அச்சுறுத்தியமை தொடர்பில் பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை குற்றவாளி என ஹோமாகம நீதவான் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.**

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளரும், கேலிச் சித்திரக் கலைஞருமான பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவுக்கு ஹோமாகம நீதிமன்ற வளாகத்தில் வைத்து பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அச்சுறுத்தல் விடுத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக சந்தியா எக்னெலிகொட வழங்கிய 23☛

முன்னாள் போராளியை

## பயங்கரவாத தடுப்பு பிரிவு விசாரணைக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் போராளியும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான க.ஜெயக்குமாரை எதிர்வரும் 28ஆம் திகதி பயங்கரவாத 24☛

## போதனாசிரியர்களை பணியிலிருந்து நிறுத்த

யாழ்.மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய தையல் போதனாசிரி 23☛

சட்டவிரோதமாக வழங்கப்படும்

## கேபிள் ரீவி இணைப்பை துண்டிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் சட்டவிரோதமாக வழங்கப்படும் கேபிள் ரீவி இணைப்புகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க தொலைத்தொடர்புகள் 23☛

## மின்னல் தாக்கத்திலிருந்து அவதானமாக இருக்குமாறு

வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

வங்காளவிரிகுடாவில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் தாழமுக்கமாக மாறும் பட்சத்தில் நாட்டின்பல பாகங்களில் தொடர்ந்தும் இடி, மின்னலுடன் கூடிய அடைமழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் 24☛

வவுனியா பேருந்து நிலையத்தில்

## கேரளக் கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் நேற்று காலை புதிய பேருந்து நிலையத்தில் 4 கிலோ கேரளக் கஞ்சாவுடன் பெண் ஒருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நேற்று காலை 23☛

## யாழில் இரு வாரங்களுக்குள் 10 பேருக்கு பன்றிக் காய்ச்சல்

எச்சரிக்கையாக இருக்குமாறு சுகாதாரத்துறை மக்களுக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இரு வாரங்களுக்குள் பன்றிக் காய்ச்சல் (இன்புளுவன்ஸா வைரஸ்) தொற்று ஏற்பட்டுள்ளதாக இதுவரை 10 பேர் இனங்காணப்பட்டுள்ளதாகவும், இந்த நோய்த் தொற்றில் இருந்து தம்மை பாதுகாக்க பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும் என சுகாதார துறையினர் எச்சரித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் கடந்த 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளுக்கு பிறகு குறித்த நோய் தாக்கம் இனங்காணப்பட்டிருந்தது. பின்னர் கட்டுப்பாட்டுக்குள் 23☛

## வடக்கு மாகாண பிரதம செயலாளரால் விடுத்த விண்ணப்பம் சட்டவிரோதமானது

யாழ்.மேல் நீதிமன்றில் மனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்மற்றும்வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்காக வடக்கு மாகாண பிரதம செயலாளரால் விடுக்கப்பட்ட விண்ணப்பங்கோரலினை இரத்து செய்ய உத்தரவிடுமாறு 23☛

முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான் பிரதேசத்தில்

## இராணுவத்தின் காணி சுவீகரிப்பு முயற்சி பொதுமக்களால் முறியடிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் பொதுமக்களின் காணிகள் மற்றும் அரச காணிகள் அடங்கலாக சுமார் 300 ஏக்கர் காணி சுவீகரிப்பு முயற்சி பொதுமக்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில்சுமார் 50 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை சுவீகரித்து பாரிய இராணுவ முகாம் ஒன்றை அமைத்துள்ள இராணுவம் தற்போது அந்த இடத்துக்கு மேலதிகமாக பொதுமக்களின் காணிகள் மற்றும் அரச காணிகள் அடங்கலாக சுமார் 300 ஏக்கர் காணி சுவீகரிப்பு நடவடிக் 23☛

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்த

## வங்கி உதவி முகாமையாளர், ஊழியர் பணி நீக்கப்பட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட ஈழத்தமிழர்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றிய வங்கியின் உதவி முகாமையாளரும் ஓர் ஊழியரும் பணி நீக்கம் செய் 23☛

## மகிந்தவின் ஆசீர்வாதம் பெற்றால் மைத்திரி

மீண்டும் ஜனாதிபதியாகலாம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாயின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும் எனவும், அவ்வாறு பெற்றாலேயே அவரால் வெற்றி பெறமுடியும் எனவும் அரசாங்கத்திலிருந்து விலகிய 16 பேர் கொண்ட குழுவின் உறுப்பினரான டிலான் பெரேரா 23☛

## மோட்டார் சைக்கிள் மீது ஹன்டர் வாகனம் மோதி

குடும்பஸ்தர் பலி; கோப்பாயில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைப்பாறிய அரச உத்தியோகத்தரை பின்னால் வந்த ஹன்டர் வாகனம் மோதியதில் குறித்த நபர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

கோண்டாவில் மேற்கை 24☛

சீரற்ற காலநிலை காரணமாக

## ஓர் இலட்சத்து 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக 19 மாவட்டங்களை சேர்ந்த ஓர் இலட்சத்து 25 ஆயிரத்து 954 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இதனை தெரிவித்துள்ளது.

மழையுடன் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக 13 பேர் மரணித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் பல மாகாணங்களிலும் இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தங்கம் கடத்திய இந்தியப் பிரஜை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் தங்கம் கடத்தி வர முற்பட்ட இந்தியப் பிரஜையொருவர் சுங்கத்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து நேரடியாக இலங்கை வந்திருந்த குறித்த பயணியின் நடத்தையில் சந்தேகம் கொண்ட சுங்கத்துறையினர் அவரைப் பரிசோதித்த போது அவர் தங்கம் மறைத்து வைத்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

தலா நூறு கிராம் கொண்ட ஐந்து தங்கக் கட்டிகளை அவர் அவ்வாறு மறைத்து வைத்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் கொண்டு வர முயற்சித்துள்ளார்.

அவற்றின் பெறுமதி 33 இலட்சம் ரூபாய் என்றும் சுங்கத்துறையினர் கூறியுள்ளனர்.

இதேவேளை, தங்கத்தைப் பறிமுதல் செய்த சுங்கத்துறையினர் சந்தேகநபரை கைது செய்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(ம)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-2692)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
வட மாகாண ஆசிரியர் தெரிவு
சனி 26.5, ஞாயிறு 27.5, செவ் 29.5, சனி 02.6, ஞாயிறு 3.6
09.30-02.30 மணிவரை
கணக்காய்வாளர்
சனி, ஞாயிறு
09.30-03.30 மணிவரை
SLEAS மற்றும் SLAS
பயிற்சி வகுப்புக்கள் பிரதி ஞாயிறு
09.00-03.00
0766883394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்சல் வங்கியருகில்)

## மரண அறிவித்தல்

### சுரெந்திரன் நந்தினி

பிறப்பு 10 - 10 - 1963



இறப்பு 24 - 05 - 2018

ஏழாலையை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் LIMOGES வசிப்பிடமாகவும் கொண்ட சுரெந்திரன் நந்தினி நேற்று (24.05.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை-பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், பரராஜசிங்கம்-சிவஞானம் தம்பதிகளின் அன்பு மருமகளும், சுரேன், சுரெனிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திரன், இந்திரன், ரூபன், ரூபினி, கலா, பரமேஸ்வரன், காலஞ்சென்றவர்களான மாலினி, மோகன், கிருபன் ஆகியோரின் சகோதரியும், காந்திமதி, மோகனா, லிங்கம், விஜித், ரேகா, ஜாமினி, ராசமலர், விசயா, மகாலிங்கம், சுந்தர், வாணி, சுந்தரி, வாசன், செந்தில் ஆகியோரின் மச்சாளும், மயூரா-கண்ணன், றதன்-தர்சி, கரன், வரன், சுஜிதரன், கமல், றஜீவன், றஜீதா, றஜீனா ஆகியோரின் அன்புச் சிறியதாயும், கஜா-சிவா, கஜீவன்-சுஜேனி, றிசாந் (றாகுல்), ரூபிஷா, கஜரூபன் ஆகியோரின் மாமியாரும், டிலக்சன், சுலக்சன், பரணிதன், நிலாஜினி, ஹாகுசன், ஹரிஸ், டிவன்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பிரான்ஸில் 30.05.2018 புதன்கிழமை LIMOGES நகரில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சுரெந்திரன் (கணவர்-பிரான்ஸ்) 0033662220326
றதன் (பெறாமகன், ஏழாலை)-0772850264

தகவல்:- குடும்பத்தினர் (சி-2712)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி
### குயினி ஜோன்பிள்ளை



Jupiter Trading CO.LTD, Acorn Services (PVT) Ltd நிறுவனங்களின் தலைவர் V.தர்மலிங்கம் அவர்களின் மூத்த சகோதரி திருமதி குயினி ஜோன்பிள்ளை அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வலம்புரி
நிர்வாகம்

(இ)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்கள்

மயில்வாகனம் ஜெகநாதன் — ஜெகநாதன் சஞ்சீவன்

மலர்வு 04 - 02 - 1960



மறைவு 23 - 05 - 2018



மலர்வு 25 - 12 - 1986

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்க தலைவரும், யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாச உபதலைவரும், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் முன்னாள் பணிப்பாளருமாகிய அமரர் ம.ஜெகநாதன் அவர்கள் தமிழ் மண்ணையும், தமிழ்மொழியையும் தம்மிரு கண்ணெனப் போற்றி வாழ்ந்தவர், எம்மக்களை நேசித்தவர், கூட்டுறவின் குரலாய், கூட்டுறவின் தலைவனாய், தலைசிறந்த உண்மையான, உன்னதமான கூட்டுறவாளனாய் சமூகத்துடன் கூடி வாழ்ந்தவர்.

அவரதும் அவர்தம் அருமையான மைந்தரதும் மறைவுச் செய்தி கேட்டு உலகம் அதிர்ந்தது.

மலையெனப் பண்பால் மனங்களில் பதிந்தவர் விலையிலா உயிரை இழந்தமை பாவிகள் நாங்கள் பார்ப்பதாயிற்றே. பிறப்பையும் இறப்பையும் எமக்களித்த இறைவா! அமரர்கள் அவலம் அகற்றி அடியினில் வைப்பாய். அமரர்களின் குடும்பத்தாருக்கு கூட்டுறவாளர்களின் அனுதாபங்களை தெரிவித்தோடு அமரர்களின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்போமாக!!!

ஓம் சாந்தி!!!


தலைவர், பணிப்பாளர், பணியாளர், கூட்டுறவாளர்கள்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை

(சி-2704)

## கண்ணீர் அஞ்சலி


### ம.ஜெகநாதன்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்
மூத்த உறுப்பினர்,
தலைவர் கட்.நெல்.ப.நோ.கூ.சங்கம்



### ஜெ.சஞ்சீவன்

பட்டதாரி-
யாழ்.பல்கலைக்கழகம்
(வவுனியா வளாகம்)



மண்ணில் 04.02.1960 — விண்ணில் 23.05.2018 — மண்ணில் 25.12.1986

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின்
தீவிர ஆதரவாளரும் உறுதியான
தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளரும்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்
மூத்த உறுப்பினருமான
மயில்வாகனம் ஜெகநாதன் அவர்களுக்கும்
மற்றும் அவரது மகன் ஜெகநாதன் சஞ்சீவன்
அவர்களுக்கும் எமது கண்ணீரை
காணிக்கையாக்குகின்றோம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

(பு-197)

# யாழில் மீண்டும் தலைதூக்கியுள்ள சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்



## அரச அதிபர் வேதநாயகன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீண்டும் தலைதூக்கியுள்ள சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பாக பொலிஸாரே உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ள யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், இவ்விடயத்தில் பக்கச்சார்புடன் நடந்துகொண்டால் எதிர்காலத்தில் எமது சமூகம் பாரிய விளைவை எதிர்கொள்ள நேரிடும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்மாவட்ட அரசஅதிபரின் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் தற்போது அதிகளவான போதைப் பொருட்கள் விற்பனை இடம்பெறுவதாக அடிக்கடி எமக்கு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன. எமக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு அறிவித்து வருகிறோம்.

இருப்பினும் தற்போது கூடுதலான அளவு போதைப் பொருட்கள் யாழ்.குடாநாட்டுக்குள் கொண்டுவரப்படுவதனை செய்திகள் மூலம் அவதானிக்க முடிகிறது. அத்துடன் சட்டவிராத செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுகிறது.

இந்த நிலை தொடராமல் இருப்பதற்கு பொதுமக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். அத்துடன் மிக முக்கியமாக பொலிஸார் தமது கடமையை உரிய முறையில் செய்ய வேண்டும் என்பதுடன் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தமது கடமைகளை சரியான முறையில் செய்தால் அதிகளவான பிரச்சினைகளை இலகுவாக தவிர்த்துக் கொள்ள முடியும். ஆனால் அதை செய்வதற்கு பலர் தயங்கி நிற்பதால் பாரிய விளைவுகள் ஏற்படுகிறது. சமூகம் சீரழிகிறது.

மேலும் பொலிஸார், பொது மக்கள், அதிகாரிகள் இணைந்து இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டும். இதனை கட்டுப்படுத்துவதற்கு வருங்காலத்தில் கடுமையான நடவடிக்கைகள் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

இந்த நிலை தொடர்ந்தால் எமது சமூகம் பாரிய விளைவை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# தூத்துக்குடியில் துப்பாக்கிச்சூடு

## தமிழர்கள் படுகொலையைக் கண்டித்து நல்லூரில் இன்று கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு தூத்துக்குடியில் இடம்பெற்ற படுகொலையைக் கண்டித்து நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில்கவனயீர்ப்பு போராட்டம்ஒன்று இன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த போராட்டம் முற்பகல் 10 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளதுடன், இதனைத் தொடர்ந்து யாழ். இந்திய துணைத் தூதுவரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

இப் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு முடிந்தவரை உதவுங்கள்

## அமைச்சர் றிசாத் கோரிக்கை

(கொழும்பு)



வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முடிந்தவரை உதவி செய்யுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள், தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்களிடம் அமைச்சர் றிசாத் பதியுதீன் உருக்கமான வேண்டு கோள் ஒன்றை முன்வைத்துள்ளார்.

கடந்த சில நாட்களாக பெய்துவரும் மழை, வெள்ள அனர்த்தம் மற்றும் சீரற்ற காலநிலையினால் நாட்டின் பல பாகங்களிலும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டும் ஆயிரக்கணக்கானோர் வீடு வாசல்களை இழந்தும் பரிதவிக்கின்றனர்.

இவர்களுக்கு முடிந்தவரை தனவந்தர்களும் வசதி படைத்தவர்களும் உதவிக்கரம் நீட்டுமாறு அவர் வேண்டியுள்ளார்.

பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் புனித ரம்ழான் மாதத்தில் நோன்புக் கடமைக்கான வசதிகளை மேற்கொள்ளுமாறும் தங்களால் இயன்றவரை எந்தவிதமான பாகுபாடுமின்றி அனைத்து இனங்களுக்கும் உதவி செய்யுமாறு அமைச்சர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

# சபையில் தனி எதிர்க்கட்சியாக செயற்பட மகிந்த இணக்கம்

## ரி.பீ.ஏக்கநாயக்க தகவல்



(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேரும் பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தனியான ஒரு குழுவாக செயற்படும் எனவும், இதன்படி பாராளுமன்ற அமர்வின் போது குழுக்களின் தலைவர்களுக்கான பதவியில் ஒருவரை நியமிக்கவுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட ரி.பீ. ஏக்கநாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியுடன் சேர்ந்து செயற்படுவதோடு, பாராளுமன்றத்தில் தனியான ஒரு எதிரணிக் குழுவாகவும் செயற்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# டெங்கு நோய்த்தாக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் டெங்கு நோய்ப்பரவல் மீண்டும் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலை காணப்படுவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பொது வைத்திய நிபுணர் ப்ரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார். வாரமொன்றில் 200 டெங்கு நோயாளர்கள் பதிவாகுவதாக அவர் தெரிவித்தார்.

மேல், வடமேல், சப்ரகமுவ மாகாணங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகுவதாக பொதுவைத்திய நிபுணர் ப்ரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயினால் 16 பேர் உயிரிழந்துள்ளதுடன், 18,000 பேர் வரையில் நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நின்ற டிப்பருடன் வந்த டிப்பர் மோதியது

## ஏ-9 வீதியில் நேற்று அதிகாலை சம்பவம்





(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியில் மீசாலை - ஐயா கடைச் சந்திப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்ற டிப்பர் வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை ஐயா கடைச் சந்தியில் வீதியின் ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பருடன் கொடிகாமம் பகுதியில் இருந்து வந்த பிறிதொரு டிப்பர் பின்பக்கமாக மோதியதிலேயே இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனம் தடம்புரண்டதோடு மோதிய டிப்பர் ரயில் தண்டவாளத்திற்கு குறுக்காக பாய்ந்து மீட்க முடியாதவாறு நின்றது.

இதில் கொடிகாமம் பகுதியில் இருந்து வந்த டிப்பரின் சாரதியான தம்பிணைக்குளம் மடு வீதி மன்னாரைச் சேர்ந்த 27 வயது லோகநாதன் சர்மிலன் என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவத்தினால் புகையிரதப் பாதையில் தடை ஏற்பட்டதனால் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் தாமதித்தே புகையிரதங்கள் பயணத்தை தொடர்ந்தன.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-9-89)

# சின்னம்மை நோய் காரணமாக ரஜரட்டைப் பல்கலை பீடம் மூடல்

(கொழும்பு)

மாணவர்கள் மத்தியில் தீவிரமாகப் பரவத் தொடங்கிய சின்னம்மை நோய் காரணமாக ரஜரட்டைப் பல்கலைக் கழகத்தின் விவசாய பீடம் மூடப்பட்டுள்ளது.


ரஜரட்டைப் பல்கலைக் கழகத்தின் விவசாய பீட மாணவர்கள் மத்தியில் கடந்த சில நாட்களாக சின்னம்மை நோய்த் தொற்று தீவிரமாக பரவி வருகின்றது.

இந்நிலையில் இந்நோய் பல்கலைக்கழகத்தின் ஏனைய பீட மாணவர்களையும் தாக்கக் கூடும் என்ற அச்சம் காரணமாக விவசாய பீடம் இரண்டு வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளது.

இதனையடுத்து விவசாய பீடத்தின் மாணவர்கள் நேற்று முன்தினம் மாலை தங்கள் விடுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதுடன், அனைவரும் சொந்த ஊர்களுக்குத் திரும்பிச் செல்லத் தொடங்கியிருப்பதாக தெரிய வந்துள்ளது. (இ-7)

# இறுதியில் யார்?

## தகுதிச்சுற்று இரண்டில் கொல்கத்தா - ஹைதராபாத் இன்று மோதல்



ஐ.பி.எல்., தொடரில் இன்று நடக்கவுள்ள இரண்டாவது தகுதிச் சுற்றில் கொல்கத்தா - ஹைதராபாத் அணிகள் மோதுகின்றன.

இந்தியாவில் நடக்கும் 11ஆவது ஐ.பி.எல்., சீசன் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இதன் இறுதிக்கு ஏலவே சென்னை அணி முன்னேறியது.

இந்நிலையில் கொல்கத்தா ஈடன் கார்டன்ஸில் இன்று நடக்கவுள்ள இரண்டாவது தகுதிச் சுற்றுப் போட்டியில் தினேஷ் கார்த்திக் தலைமையிலான கொல்கத்தா, கேன் வில்லியம்சனின் ஹைதராபாத்தை எதிர்கொள்கிறது.

இதில் வெற்றி பெறும் அணி, வரும் 27ல் மும்பையில் நடக்கவுள்ள இறுதியில் சென்னை அணியை சந்திக்கும்.

**கார்த்திக் நம்பிக்கை**

இரண்டு முறை கிண்ணம் வென்றுள்ள கொல்கத்தா, லீக் சுற்றில் 8 வெற்றி, 6 தோல்வி என, 16 புள்ளிகளுடன் 3ஆவது இடம்பிடித்தது. பின், கொல்கத்தாவில் நடந்த 'எலிமினேட்டர்' போட்டியில் ராஜஸ்தான் அணியை 25 ஓட்டங்களால் வீழ்த்தி, இரண்டாவது தகுதிச்சுற்றில் விளையாட தகுதி பெற்றது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் தினேஷ் கார்த்திக் (490 ஓட்.,), கிறிஸ் லின் (443) நம்பிக்கை அளிக்கின்றனர். ராஜஸ்தானுக்கு எதிரான 'எலிமினேட்டர்' போட்டியில் சோபிக்காத சுனில் நரைன் எழுச்சி கண்டால் நல்ல ஆரம்பம் கிடைக்கும். 'ரொப் ஓர்டரில்' ரொபின் உத்தப்பா (349 ஓட்.,), நிதிஷ் ராணா (282) கைகொடுக்கும் பட்சத்தில் இமாலய ஓட்டஎண்ணிக்கையை பெறலாம். ராஜஸ்தானுக்கு எதிராக 25 பந்துகளில் 49 ஓட்., விளாசிய அன்ட்ரோ ரசல் மீண்டும் அதிரடி காட்டலாம்.

வேகப்பந்துவீச்சில் அன்ட்ரோ ரசல் (13 விக்கெட்), பிரசித் கிருஷ்ணா (10) கை கொடுக்கின்றனர். 'சுழலில்' சுனில் நரைன் (16 விக்கெட்), குல்தீப் யாதவ் (15), பியுஸ் சாவ்லா (13) இருப்பது பலம். கொல்கத்தா, சொந்த மண்ணில் உள்ளூர் ரசிகர்கள் முன்னிலையில் விளையாட இருப்பது சாதகமான விஷயம்.

**வில்லியம்சன் பலம்**

ஒரே ஒருமுறை சம்பியன் பட்டத்தை கைப்பற்றி உள்ள ஹைதராபாத் அணி, லீக் சுற்றில் 9 வெற்றி, 5 தோல்வி என, 18 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து, முதல் அணியாக 'பிளே-ஒப்' சுற்றுக்கு முன்னேறியது.

ஆனால், மும்பையில் நடந்த சென்னை அணிக்கு எதிரான முதலாவது தகுதிச் சுற்றில், 2 விக்கெட்டுக்களால் தோல்வியடைந்து நேரடியாக இறுதிக்கு முன்னேற தவறியது. ஹைதராபாத் அணி, கடைசியாக விளையாடிய 4 போட்டிகளிலும் (3 லீக், ஒரு 'பிளே-ஒப்' போட்டி) தோல்வியடைந்திருப்பது பாதகமான விடயம்.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் வில்லியம்சன் பலம் சேர்க்கிறார். அதிக ஓட்டங்கள் (685) குவித்த வீரர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ள இவரது ஓட்ட வேட்டை இன்றும் தொடரலாம். ஷிகர் தவான் (437 ஓட்.,), மணிஷ் பாண்டே (284), யூசுப் பதான் (212), சகிப் அல் ஹசன் (188) உள்ளிட்டோர் ஒத்துழைப்பு கொடுத்தால் நல்ல ஓட்டஎண்ணிக்கையை பதிவு செய்யலாம்.

வேகப்பந்துவீச்சில் சித்தார்த் கவுல் (19 விக்கெட்) அசத்துகிறார். புவனேஷ்வர் குமார் (9 விக்.,) பெரிய அளவில் சோபிக்காதது ஏமாற்றம். சென்னைக்கு எதிராக 18ஆவது ஓவரில், 20 ஓட்டங்கள் வழங்கிய பிராத்வைட், கட்டுக்கோப்பாக பந்துவீசினால் நல்லது. 'சுழலில்' ரஷிட் கான் (18 விக்கெட்), சகிப் அல் ஹசன் (13) கைகொடுக்கின்றனர். இன்று ஹைதராபாத் பந்துவீச்சாளர்கள் எழுச்சி கண்டால், இறுதிக்கு சுலபமாக முன்னேறலாம்.

**இதுவரை...**

ஐ.பி.எல்., அரங்கில் கொல்கத்தா - ஹைதராபாத் அணிகள் இதுவரை 14 போட்டிகளில் மோதியுள்ளன. இதில் கொல்கத்தா 9, ஹைதராபாத் 5ல் வெற்றி பெற்றன.

இந்த சீசனில் மோதிய 2 லீக் போட்டியில், இரு அணிகளும் தலா ஒரு வெற்றியை பதிவு செய்தன.

கடந்த 2013ல் கொல்கத்தாவில் நடந்த ஐ.பி.எல்., போட்டியில் 180/4 ஓட்டங்கள் (20 ஓவர்) எடுத்த கொல்கத்தா அணி, ஹைதராபாத் அணிக்கு எதிராக அதிகபட்ச ஓட்டஎண்ணிக்கையைப் பெற்றது.

கடந்த ஆண்டு ஹைதராபாத்தில் நடந்த ஐ.பி.எல்., போட்டியில் 209/3 ஓட்., (20 ஓவர்) குவித்த ஹைதராபாத் அணி, கொல்கத்தாவுக்கு எதிராக சிறந்த ஓட்டஎண்ணிக்கையைப் பதிவு செய்தது.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 09 • 06 • 1938

உதிர்வு 05 • 06 • 2017

திருமதி

**குணபாலசிங்கம் நித்தியலட்சுமி**

"ஓடி உருண்டது
உமைப்பிரிந்து ஓராண்டு
வாடி வதங்குகின்றோம்
உமைப்பிரிந்து எண்ணி நிதம்
ஓராண்டென்ன ஓராயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சமதில் உங்கள்
நினைவுகள்
நிலைத்திருக்கும்"

குடும்பத்தினர்
958/31, தலையாளி லேன்,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

---

## INVITATION FOR BID (IFB)

### Department of Agrarian Development, Jaffna District

1. The Assistant Commissioner of Department of Agrarian Development, Jaffna invites sealed bids from eligible and qualified bidders for renovation of minor tanks as described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been black-listed and shall meet the CIDA/ICTAD registration and qualification requirements listed below. Additional details are provided in the Bidding Documents.
4. Interested eligible bidders may obtain further information and inspect the Bidding Documents at the Department of Agrarian Development, Pointpedro Road, Nallur, Jaffna during office hours.
5. A complete set of Bidding Documents in English language should be purchased by interested bidders on the submission of a written application to the Assistant Commissioner, Department of Agrarian Development, Pointpedro Road, Nallur, Jaffna from 25.05.2018 to 14.06.2018 from09:00 hrs to 15:00 hrs, upon payment of a nonrefundable fee ofRs.2000.00for each set. The method of payment will be by cash.
6. Bids shall be delivered in duplicate to the Chairman, District Procurement Committee, Department of Agrarian Development, Point Pedro Road, Nallur, Jaffna on or before 15:00 hrs on 15.06.2018 Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid up to 60 Days after the deadline for bid submission.
8. All bids shall be accompanied by a bid security Issued by a commercial bank operating in Sri Lanka approved by the Central Bank of Sri Lanka using the form of Bid Security included in Section – 9. The amount of Bid Security shall be as per details given below and shall be valid to 90 Days from the date of Bid opening.
9. Pre-bid meeting will be held at Department of Agrarian Development, Point Pedro Road, Nallur, Jaffna commencing at 10.00 a.m. on 08.06.2018
10. The Table referred to above is:

| No. | Contract No & Title of contract | Proposed contract Price (MnRs.) | Bid Security Amount (Rs) | Renovation Period | Required ICTAD Registration in Irrigation |
|---|---|---|---|---|---|
| 1 | DAD/JF/MI/ONUR/2018/22 Renovation of Ilvaraisinnak kulam in Kalvayal, Chavakachcheri | 3.87 | 39,000.00 | 3 Months | C8 |
| 2 | DAD/JF/MI/ONUR/2018/23 Renovation of Ilvaraiperiyakulam bund and inlet channel in Kalvayal, Chavakachcheri | 3.84 | 39,000.00 | 3 Months | C8 |

Date: 24.05.2018

Assistant Commissioner,
Department of Agrarian Development,
Jaffna District
T.P No - 021 222 2395
Fax – 021 222 4058

---

# மரண அறிவித்தல்



பிறப்பு 18 • 10 • 1953

இறப்பு 24 • 05 • 2018

## சின்னத்துரை இராசரத்தினம்

கல்லூரி வீதி, காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் நவரட்ணராஜா வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராசரத்தினம் நேற்று (24.05.2018) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - அருமைநாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலாயுதம் - மங்கயற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தினியின் அன்புக் கணவரும் உமாராஜி, பாலஜீவன் (இ.போ.ச) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதாகரன் (ஆசிரியர் - யா/இணுவில் மத்திய கல்லூரி), ஜெயவாணி ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற கனகரத்தினம் அழகரத்தினம், வசந்தாதேவி (ஜேர்மனி), பரமநாயகம், சுசிலாதேவி, கமலாதேவி, விமலாதேவி (சுவிஸ்), ரவிச்சந்திரன் (ஜேர்மனி), நிர்மலாதேவி (சுவிஸ்), விஜயநிர்மலாதேவி (சுவிஸ்), சோதிராசா (நோர்வே), சீதாதேவி (ஆசிரியை - யா/கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சாருஞ்சனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 12.30 மணிக்கு காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-2714)

நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில் மேற்கு.

தகவல்:- குடும்பத்தினர்
077 2806 186

# முஸ்லிம் மகா வித்தியாலயம் மீது மகிந்த ராஜபக்ஷ தலையீடு!

(கொழும்பு)

உலக வங்கியின் ஒரு கோடி 80 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட உக்குவளை குரீவெல ஹமீதியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் இரண்டு மாடிக் கட்டட நிர்மாணப் பணிகள் அருகில் உள்ள மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தின் தலையீட்டால் நின்றுபோயுள்ளதோடு, இவ் விடயம் குறித்து முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளின் கவனத்துக்கு கொண்டுவந்தும் தீர்க்கப்படாத நிலை தொடர்கின்றது.

ஒரே எல்லையில் அமைந்துள்ள ஹமீதியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் காணி மற்றும் புதிய கட்டடத்தை மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் ஆக்கிரமித்துக்கொள்ளும் மறைமுகமான திட்டம் நடைபெற்று வருவதாக பாடசாலை நிர்வாகம் மற்றும் அபிவிருத்திச் சங்கத்தினரிடையே சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக தீர்வின்றி இழுபறி நிலையில் தொடரும் இப்பிரச்சினை குறித்து ஹமீதியா முஸ்லிம் மகா வித்தியாலய நிர்வாகம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கடந்த 6 மாதங்களுக்குள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜனாதிபதியிடம் சொல்லுங்கள் என்ற சேவையினூடாக அறிவித்துள்ளதோடு, முஸ்லிம் அமைச்சர்கள், அரசியல் தலைமைகளைச் சந்தித்து உரிய ஆவணங்களுடன் விடயத்தை எடுத்துக்கூறியும் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படாத நிலை தொடர்வதாக பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர் எம்.ஏ.எம்.சலீம் தெரிவித்தார்.

பாடசாலைக் காணி மற்றும் கட்டடத்துடன் தொடர்புடைய ஆவணங்களுடன் முஸ்லிம் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன், பைஸர் முஸ்தபா, எம்.எச்.ஏ.ஹலீம் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதா கிருஷ்ணன், விவசாய இராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிகார, பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார மற்றும் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகியோரிடம் முறையிடப்பட்டுள்ளது.

அயலில் உள்ள மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தின் பாடசாலை நிர்வாகம் மற்றும் அபிவிருத்திச் சங்கத்தின் அழுத்தத்தின் காரணமாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவால் இதற்கான தீர்வைப் பெற்றுத் தரமுடியாத நிலை தொடர்வதாகவும், முஸ்லிம் அரசியல்வாதிகள் இவ்விடயத்தில் தலையிட்டு நீதிநிலைநாட்டப்பட வேண்டும் என்றும் ஹமீதியா முஸ்லிம் மகா வித்தியாலய நிர்வாகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஊர் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-7)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**ஜெயச்சந்திரன் தணிகாசலம்**

தோற்றம்
1972 - 01 - 31

மறைவு
2017 - 06 - 04

வாழ்க்கை என்னும்
பாதையில்
எம்மோடு பயணித்த
எம் உடன் பிறப்பே
இன்றுடன் ஓராண்டு
முடிந்தாலும்
உன் நினைவுகள்
எம்மை விட்டு
மறையாது
அன்புச்சகோதரனே.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
மனைவி, பிள்ளைகளுடன்
பிரார்த்திக்கின்றோம்



திதி.25.05.2018
(வைகாசி ஏகாதசி)

கற்கோவளம்
பருத்தித்துறை.

(சி-2701)

தகவல்:
பாசமிகு சகோதரன்
த.ஜெயக்குமார் குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு: 1960.02.04

பிறப்பு: 1986.12.25

இறப்பு:
2018 - 05 - 23



மயில்வாகனம் ஜெகநாதன்
தலைவர், கட்.நெல்.ப.நோ.கூ.சங்கம்



ஜெகநாதன் சஞ்சீவன்
பட்டதாரி-யாழ். பல்கலைக்கழகம்

அன்பும் பணிவும் கனிவும் பண்பும்
அடக்கமே கொண்ட எம் சங்கத்தலைவரும்
அவர்தம் புத்திரனும் காலம் செய்த சதியால்
காலையில் ஏற்பட்ட மின்விபத்தில்
அகால மரணமடைந்த நிகழ்வு எமக்கு
பேரதிர்ச்சியையும் மனவருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது
அன்னாரது இழப்பு எமது சங்கத்திற்கும்
அவர்தம் குடும்பத்திற்கும் பேரிழப்பாகும்.
அவரது இழப்பால் துயருற்றிருக்கும்
அவர்தம் குடும்பத்தவர்க்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம், கரவெட்டி

(C-2705)


# சனாத் நிஷாந்த எம்.பியின் விளக்கமறியல் மீள நீடிப்பு

(கொழும்பு)

மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சனாத் நிஷாந்த மற்றும் அவரது சகோதரர் ஜகத் சமந்த பெரேரா ஆகியோரின் விளக்கமறியல் அடுத்த மாதம் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆராச்சிகட்டுவ பிரதேச சபை உறுப்பினரை தாக்கிய குற்றச்சாட்டில் சகோதரர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந் நிலையில் குறித்த இருவரும் பிணை கோரி மனுத் தாக்கல் செய்து பிணையில் வெளியில் வந்த போதும் பிணை விதிமுறைகளை கடைப்பிடிக்காத காரணத்தினால் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

விளக்கமறியல் காலம் முடிவடைந்த நிலையில் குறித்த இருவரையும் நேற்று சிலாபம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்திய போதே சிலாபம் நீதவான் விளக்கமறியலை நீடித்து உத்தர விட்டார். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
1960 - 02 - 04



இறப்பு
2018 - 05 - 23



பிறப்பு
1986 - 12 - 25

அமரர் ம.ஜெகநாதன்

அமரர் ஜெ.சஞ்சீவன்

எமது யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சாமச உப தலைவரும் அவர்தம் சிரேஷ்ட புதல்வரும் அகால மரணமடைந்த செய்தி கேட்டு ஆற்றொணா துயர் அடைவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

(சி-2703)

யா.மா.கூட்டுறவு கிராமிய
வங்கிகளின் சாமாசம்

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்


## இராசி பலன்

**மீனம்** — உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மேடம்** — இலாபநோக்கோடு பழகியவர்களை இனங்காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்** — காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், கனவுகள் நனவாக சுந்தனை வழிபட வேண்டிய நாள், பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**மிதுனம்** — நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், விருந்தினர்களின் வருகையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கும்பம்** — வேலைகள் உடனுக்குடன் முடிக்காமல் தாமதமாகலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.

**கடகம்** — வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்** — வருமானம் பெருக வழிபாடுகளை மேற்கொள்வீர்கள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** — உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**இராசி பலன்**
கிரகநிலை
சந்திராஸ்டமம்

| | | | |
|---|---|---|---|
| | | சூரி. புத | சுக் |
| | | | |
| செவ். கேது | | | |
| சனி | | குரு | |

**25.05.2018**
வைகாசி 11, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
ஏகாதசி முன்னிரவு 7.58 மணிவரை
அத்தம் முற்பகல் 10.01 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை
ஏகாதசி விரதம், அமிர்தசித்தம்
வளவன்

**தனுசு** — குடும்ப ஒற்றுமை கூடும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும்.

**விருச்சிகம்** — வீட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** — நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கன்னி** — ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், போசன சுகமுண்டு, முன்னேற்றத்திற்கு உதவிய சிலரை சந்திக்கும் வாய்ப்புண்டு.



"ஆரோக்கியத்தில் திருமந்திரம்" நூல் வெளியீடு அண்மையில் இணுவில் அறிவாலயத்தில் சுகவாழ்க்கைப் பேரவைத் தலைவர் க.செல்லத்துரை தலைமையில் இடம்பெற்றது.

# வற்றாப்பளை ஆலயத்திற்கு விசேட பேருந்துச் சேவைகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 28.05.2018ஆம் திகதி வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் விசேட உற்சவத்தை முன்னிட்டு பருத்தித்துறைச் சாலையிலிருந்து காலை 05.15 மணிமுதல் பயணிகளின் வருகைக்கேற்ப விசேட பேருந்துச் சேவைகள் நடைபெறும். ஆசனப்பதிவுகளை 25.05.2018ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் பக்தர்கள் மேற்கொள்ளலாம் என இலங்கைப் போக்குவரத்துச் சபை (வடக்கு) பருத்தித்துறை முகாமையாளர் க.கந்தசாமி அறிவித்துள்ளார். (இ

# தூத்துக்குடியில் தமிழர் படுகொலை த.தே.ம. முன்னணி கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழகம், தூத்துக்குடியில் சூழலை மாசுபடுத்தும் வகையில் செயற்பட்டுவந்த வேதாந்தா ஸ்ரெர்லயிட் (Vedanta Sterlite) நிறுவனத்தின் தொழிற்சாலையை மூடுமாறு கோரி அமைதிவழியில் தமிழக மக்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

இப்போராட்டத்தின் நூறாவது நாளான கடந்த 22ஆம் திகதி (22 மே 2018) பெருமளவிலான மக்கள் அப்பகுதியில் திரண்டிருந்த நிலையில், தமிழக அரசின் பொலிஸார் அவர்கள் மீது பொறுப்பற்ற முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் பன்னிரண்டுபேர் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுகளால் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதனை சுட்டிக்காட்டிய பொது மக்களதும், பொது அமைப்புக்களதும் கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்காத நிலையில் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கூடி ஜனநாயக வழியில் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

அவ்வாறு அமைதிவழியில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வன்முறையில் ஈடுபடுவது போன்ற சூழலை திட்டமிட்டு உருவாக்கி கலவரத்தை அடக்குதல் என்ற பெயரில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சகட்டு மேனிக்கு நடந்த தாக்குதல்களாக இல்லாமல், கலவரத்தை அடக்குகிறோம் என்ற போர்வையில் இப் போராட்டங்களை ஒழுங்கு செய்த போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மீது பொலிஸார் குறிசூட்டுத்தாக்குதல் நடத்தியதன் மூலம் அவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

வன்முறையில் ஈடுபடாமல், அமைதிவழியில் போராட்டத்தை நடத்தியவர்கள் மீது இலக்கு வைத்து தாக்குதல் நடத்திய தமிழக பொலிஸாரின் செயலை வன்மையாகக் கண்டிப்பதுடன், இவ் விடயத்தில் பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடத்தி குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டிக்கொள்கிறது.

கொல்லப்பட்ட தமிழக உறவுகளின் குடும்பத்தினருக்கு எமது இரங்கலை தெரிவித்துக்கொள்வதுடன், தமிழக மக்களின் நியாயமான போராட்டங்களுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடர்ந்தும் தோழமை உணர்வுடன் தனது தார்மீக ஆதரவை வழங்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறது என அக்கட்சியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார். (இ-7)

## 70வது பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் (யாழ். கிளை) 70ஆவது பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நாவலர் மண்டபத்தில் தலைவர் ரி.யசிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழில் சங்க பிரதி ஆணையாளர், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவு சங்கங்களின் தலைவர் ஆ.உதயசங்கர், கௌரவ விருந்தினராக சமாசப் பொருளாளர் சி.அருட்செல்வம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். எனவே அன்றைய தினம் யாழ். கிளைக்கு உட்பட்ட பிரதேசத்திலுள்ள அனைத்து சிகை ஒப்பனையாளர் நிலையங்களையும் மூடி அனைத்து அங்கத்தவர்களும் முதலாளி, தொழிலாளி வேறுபாடு இன்றி பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (இ

# மகா கும்பாபிஷேக பெரும்சாந்தி விழா

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி இடைக்காடு கொட்டடி ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான புனருத்தாரண திவ்விய பஞ்சகுண்ட மகாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். நாளை காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (இ

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், இருபாலை தென்கோவை கற்பகப்பிள்ளையார் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 14 நாட்கள் திருவிழா இடம்பெற்று எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ

# இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

(கரணவாய்)

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவும் இணைந்து கண் பரிசோதனையுடன் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி காலை 9 மணியளவில் கரவெட்டி பிரதேச வைத்தியசாலையில் இடம்பெறும். இந்நிகழ்வில் படுக்கையில் உள்ள நோயாளர்களில் படுக்கைத்தொற்று ஏற்படாத வகையில் அதற்குரிய மெத்தையும் வழங்கப்படும். வறுமைக்கோட்டின் கீழ் உள்ளோர் கரவெட்டி பிரதேச வைத்தியசாலையில் இதற்குரிய பதிவை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ



கருவி மாற்றுத்திறனாளிகள் அமைப்பில் இருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" திட்டத்தின் கீழ் பெற்றோரை இழந்து, கால்களகள் இயங்காத நிலையில் வாழ்ந்து வரும் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு ரூபா 15,000/= பெறுமதியான சக்கர நாற்காலி நேற்று வழங்கப்பட்டது.

## பகிரங்க அறிவித்தல்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள சான்றுப்பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றது.

எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 02 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரியகோரிக்கையை நிலைநாட்டும் படி குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையின் 431(2)ன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

தொ.இல.1, வழ.இல:- MC/3445/MT/76, மறுதவணை:- 02.08.2018, சான்றுப்பொருள் இல:- PR/152/13, சான்றுப்பொருள் விபரம்:- 202-8549 இலக்க முச்சக்கர வண்டி

ஆ மன்றின் கட்டளைப்படி பதிவாளர் அறிவித்துள்ளார். (இ



விசேட பொலிஸ் நடமாடும் சேவை கரவெட்டி இராஜகிராமம் சனசமூக நிலையத்தில் ஜே/363 கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது. பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் வேண்டுகோளுக்கு இணங்க காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி டி.பி.பியந்த ஆரம்பித்து வைத்தார். இந் நடமாடும் சேவையானது நெல்லியடி உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி ஐ.பி.விமலவீர தலைமையில் நடைபெற்றது. (படம்:-மகாலிங்கம்)

# வரணியில் குரங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் கோரிக்கை

(வரணி)

வரணியில் உள்ள பலகிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அண்மைக் காலமாக குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். குறிப்பாக இடைக்குறிச்சி, மாசேரி போன்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் குரங்குகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மக்கள் விவசாயம் செய்ய முடியாதுள்ளதாகவும் உணவுப் பயிர்களை அழைப்பதாகவும் வீட்டுக்கூரைகளை சேதப்படுத்துவதாகவும் பாடசாலை செல்லும் மாணவர்களை கடிப்பதற்கு துரத்துவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். அது மட்டுமன்றி வீடுகளுக்குள் புகுந்து உணவுப் பொருட்களையும் மரக்கறிகளையும் உண்பதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக கடந்த காலங்களில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியமையால் குரங்குகளைப் பிடிப்பதற்காக கூண்டுகள் வழங்கப்பட்டன. பின்பு அவற்றை விடுவதற்கான ஒழுங்குகளில் பிரச்சினைகள் ஏற்பட்டன. இதனால் கூடுகள் மீளவும் பெறப்பட்டன. இதனால் குரங்குகளின் பெருக்கம் அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளது. எனவே இக்குரங்குத் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் மீளவும் நடவடிக்கையெடுக்க வேண்டும் என கிராமமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)

# பட்டக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி பட்டக்கற்கைநெறி (BA in Social Science), சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கைநெறி (Certificate in Social Science) மற்றும் இளையோர் அபிவிருத்தியில் டிப்ளோமா (Diploma in Youth Development) கற்கை நெறி ஆகியவற்றுக்கான 2017/2018 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகளுக்கான விண்ணப்பத் திகதியானது 22.05.2018 ஆக இருந்த போதிலும் விண்ணப்பதாரிகளின் நன்மைகருதி யூன் முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களை யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ

# இரு பொம்மலாட்ட நாடகங்கள் இன்று மேடையேற்றப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொது நூலகம், செயற்றிறன் அரங்க இயக்கம் இணைந்து வழங்கும் மாதாந்த சிறுவர் நாடக தொடரில் இரண்டு பொம்மலாட்ட நாடகங்கள் அரங்கேற்றப்படவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் தே.தேவானந்தின் நெறியாள்கையில் உருவான "பாட்டி", "நாங்கள் காற்று" ஆகிய நாடகங்கள் மேடையேறவுள்ளன. (இ-7)

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் சபைநிதி-2018

01.தவிசாளர், பெறுகைக்குழு.வலிகாமம் தெற்கு பிரதேச சபை.சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்புட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02.பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வட மாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள் ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமானதரத்தில் இக்ராட் பதிவுள்ளவராகவும் (வீதி / கட்டடம்), கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03.தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04.ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கிலமொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 25.05.2018 தொடக்கம் 07.06.2018 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/-செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். .

05.பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து 07.06.2018ம் திகதி 14:30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு. வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

06.பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 31.05.2018ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்

07.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை வைப்பு செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாரியப்புலம் வீதி ,தாவடி | 1.19 | 2 மாதம் | C9 | 12000 | 09.08.2018 |
| 2 | ஊரெழு வடக்கு முத்துமாரி அம்மன் வீதி | 3.39 | 3 மாதம் | C8 | 34000 | 09.08.2018 |
| 3 | பூவோடை மயான விவசாய வீதி. இணுவில் | 2.84 | 2 மாதம் | C8 | 29000 | 09.08.2018 |
| 4 | தம்பிமுத்து உபாத்தியார் வீதி. கந்தரோடை | 2.68 | 2 மாதம் | C8 | 27000 | 09.08.2018 |
| 5 | கருமாரி அம்மன் வீதி ,ஈவினை | 0.99 | 1½ மாதம் | C9 | 10000 | 09.08.2018 |
| 6 | விழிசிட்டி சூறாவத்தை வீதி.ஏழாலை | 1.77 | 2 மாதம் | C9 | 18000 | 09.08.2018 |
| 7 | காளிகோவில் வீதி ,சுன்னாகம் | 1.54 | 2 மாதம் | C9 | 16000 | 09.08.2018 |
| 8 | கிறிஸ்தவ மயான வீதி ,ஏழாலை | 0.90 | 1½ மாதம் | C9 | 9000 | 09.08.2018 |
| 9 | களவியாவத்தை வீதி , உடுவில் | 2.19 | 2 மாதம் | C8 | 22000 | 09.08.2018 |
| 10 | சுன்னாகம் பொதுநூலக கட்டட விஸ்தரிப்பு - கட்டம் II | 4.14 | 3 மாதம் | C8 | 42000 | 09.08.2018 |
| 11 | வீதி விளக்கு வழங்குதல்- 500 Nos | | | | | |

தவிசாளர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(2702)

அன்பு வாசகர்களே!
நாளை முதல் உங்கள் அபிமான
வலம்புரியில்...
புகழ்பூத்த எண்கணித ஜோதிடர்
விநாயகராமன் எழுதும்
பிறந்த எண்களின்
அதிர்ஷ்ட இரகசியம்
வாசிக்கத் தவறாதீர்கள்

## தூத்துக்குடியில் உயிரிழந்தோருக்கு பருத்தித்துறை கடற்கரையில் அஞ்சலி

(கரணவாய்)



தமிழ்நாடு தூத்துக்குடியில் போராட்டம் நடத்திய அப்பாவி மக்கள் மீது தமிழகப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழுந்தோருக்கு பருத்தித்துறை மூர்க்கம் கடற்கரையில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆலை ஒன்று அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தி வந்த மக்கள் 100 ஆவது நாளான கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனுக் கொடுக்கச் சென்ற போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் பலியாகினர்.

இந்நிலையில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தியும் அவர்களின் போரட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதை கண்டித்தும் பருத்தித்துறை நகரசபையில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் மூர்க்கம் கடற்கரையில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (இ-60)

## மருத்துவ முகாம்

விரியும் சிறகுகள் அறக்கொடை நிறுவனத்தின் ஏற்பாட்டில் விண்மீன்கள் அமைப்பினூடாக பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் சிறப்பு பயிற்சி பெற்ற வைத்திய குழாமினால் நடத்தப்படும் இலவச பிசியோதெரப்பி மற்றும் அனைத்து வயதினருக்குமான உடல் வலுவூட்டல் மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெறும். (இ)

## ஏல விற்பனை

எமது கல்லூரியில் வருடாந்த பொருட் கணக்கெடுப்பின் போது விற்பனைக்கு அனுமதிக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 05.06.2018 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு தென் பகுதி பழைய நூலகக் கட்டடத்தில் ஏலம் விட தீர்மானித்திருப்பதால் பொருட்களைப் பெற விரும்புவோர் குறித்த நேரத்தில் சமுகமளித்து ஏலத்தில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

ஏல விற்பனைக்கு விடப்படும் பொருட்கள்

Benches Dual-10 Computer Table- 01
Dual Desk-06 Metal Chairs- 55
Computer Chairs-03

(4196) அதிபர்

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1ம்பாதம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L அரச தொழில்<br>தொ.இ: B/7706 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3ஆம்பாதம்<br>கி.பா: 24 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:A/L CBF அரச வங்கியாளர்<br>தொ.இ: G/7865 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2ஆம்பாதம்<br>கி.பா: 16 செவ் 4 இல்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்:BSC MSC லண்டன் PR<br>தொ.இ: B/7708 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 16<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BA அரச ஆசிரியர்<br>தொ.இ: G/7869 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4ஆம்பாதம்<br>கி.பா: 34<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: குடிசார் பொறியியலாளர் அரச தொழில்<br>தொ.இ: B/7712 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2ஆம்பாதம்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:BFA அரச தொழில்<br>தொ.இ: G/7870 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2ஆம்பாதம்<br>கி.பா: 48<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: உயர் கல்லூரி கனடா PR<br>தொ.இ: B/7717 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4ஆம் பாதம்<br>கி.பா: 14 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSC அரசதொழில்<br>தொ.இ: G/7873 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இலங்கைக்கும் பாதிப்பு ஏற்படும்

## தூத்துக்குடி துப்பாக்கி சூட்டை கண்டித்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஆர்ப்பாட்டம்





(கிளிநொச்சி)

தமிழகம் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களின் துப்பாக்கி சூட்டுப் படுகொலையைக் கண்டித்து கிளிநொச்சியில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இடம்பெற்றது. இதன் போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் இந்திய அரசின் செயற்பாடுகளை கண்டித்து கோசங்கள் எழுப்பினர்.

இதேவேளை குறித்த செயற்றிட்டத்தின் காரணமாக இலங்கைக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதை உணர்ந்து இலங்கை அரசும் அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் உறவுகள் கருத்து தெரிவித்தனர். (2-315)

## இலவச சட்ட ஆலோசனை சேவை காலநிலை மாற்றத்தால் பிற்போடல்

(கொழும்பு)

தேசிய நீதி வாரத்தை முன்னிட்டு எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலவச சட்ட ஆலோசனை சேவை காலநிலை மாற்றத்தைக் கருத்திற்கொண்டு பிற்போடப்பட்டுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான யு.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போது நிலவிவரும் மோசமான காலநிலையின் காரணமாக இருநாட்கள் நடத்துவதற்குத் தீர்மானித்திருந்த இலவச சட்ட ஆலோசனை சேவைகள் பிற்போடப்பட்டுள்ளன. சட்டப்பிரச்சினைகள் தொடர்பான ஆலோசனை என்பது மக்களுக்கு அவசியமானதாகும். எனவே தற்போதைய மழை மற்றும் வெள்ளம் என்பவற்றுக்கு மத்தியில் மக்களால் ஆலோசனை சேவையைப் பெறுவதற்கு வருவது முடியாத காரியமாகும். ஆகையாலேயே இச்சேவையைப் ஜூன் மாதமளவில் முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

வெள்ளம் காரணமாக அநேகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். அவர்களின் சொத்துக்கள், உடைமைகள் சேதமடைந்துள்ளன. வீட்டுறுதிப்பத்திரம், காணி உறுதிப்பத்திரம் போன்ற முக்கிய ஆவணங்கள் வெள்ளம் காரணமாக அழிவுற்றிருக்கக்கூடும். எனவே அவற்றை மீளப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான ஆலோசனைகளையும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேசிய நீதி வாரத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டம் தொடர்பில் மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், பாடசாலை மாணவர்களுக்கான விவாத போட்டிகள் போன்ற செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறும்.

மேலும் தாம் வாழும் பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் முறையாக மேற்கொள்ளப்படாதிருப்பின் அவை தொடர்பிலும் மக்கள் சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள முடியும். மேற்படி விவகாரங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்தல் மற்றும் உரிய நடவடிக்கையை மேற்கொள்வதற்கான வழிமுறை என்பவற்றை எம்மால் வழங்க முடியும். தேசிய நீதி வாரத்தினை முன்னிட்டு இவ்வாறான செயற்பாடுகளை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதன் மூலம் மக்களுக்கு சட்டம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடிவதுடன், சட்டத் துறையில் மக்களின் ஈடுபாட்டை அதிகரிக்க முடியும் என்றார். (2-7)

## கைத்தொலைபேசிகளூடாக பணப்பரிமாற்றச் சேவை



(சாவகச்சேரி)

வாடிக்கையாளர்களின் வங்கிச் செயற்பாடுகளை தற்போதைய கால வோட்டத்திற்கேற்ப நவீனமயப்படுத்தி இலகுவான பணப் பரிமாற்றத்திற்கு உதவ வேண்டியது வங்கிகளின் கடமையாகும். எனவேதான் மக்கள்வங்கி யாழ்.மாவட்டத்தில் 7 ஆவதாக சாவகச்சேரி கிளையில் துரித வங்கிச் சேவையை ஆரம்பித்துள்ளோம்.

அண்மையில் மக்கள் வங்கி சாவகச்சேரி கிளையில் நடைபெற்ற துரிதவங்கிச் சேவை ஆரம்ப விழாவிற்கு தலைமைதாங்கி உரையாற்றிய யாழ்.பிராந்திய பணிமனை உத்தியோகத்தர் க.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

வங்கிக்குச் செல்லாமலே மேம்படுத்தப்பட்ட கைத்தொலைபேசிகளூடாக பணப்பரிமாற்றத்தை இக் கணக்கினூடாக வாடிக்கையாளர்கள் மேற்கொள்ளலாம். அத்துடன் பல வசதிகளையும் இக்கணக்கினூடாக செயற்படுத்தலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் வங்கி உயர் அதிகாரிகள், சாவகச்சேரி நகராட்சிமன்ற கணக்காளர், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

புதிதாக கணக்கில் இணைந்தவர்களுக்கான நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (2-29)



திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் பெற்று செல்லவுள்ள யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனை இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராட்சி மரியாதை நிமித்தம் சந்தித்து கலந்துரையாடினார். நேற்று யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள நீதிபதியின் அலுவலகத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் கட்டளைத் தளபதி நீதிபதியின் சேவைகளைப் பாராட்டியதுடன், மரத்தில் வடிவமைக்கப்பட்ட யானை ஒன்றினை அவருக்கு நினைவுச் சின்னமாக வழங்கி வைத்தார். (2-9)

## கனரக வாகனங்களை நிறுத்துவதற்கு பொலிஸார் அனுமதி வழங்கக்கூடாது



(கரணவாய்)

பாடசாலை முடிவடையும் வேளையில் நெல்லியடி- மத்திய கல்லூரி வீதியில் கனரக வாகனங்கள் நிறுத்துவதற்கு பொலிஸார் அனுமதி வழங்கக் கூடாது என பொதுமக்களால் கோரப்பட்டுள்ளது.

மேற்படி வீதியில் பாடசாலை முடிவடையும் நேரங்களில் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக நிறுத்தப்படும் வாகனங்களால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது.

இதனால் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லும் மாணவர்கள் காலதாமதமாகச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எனவே பாடசாலை முடிவடையும் 1.30 மணியில் இருந்து இரண்டு மணி வரையான நேரப் பகுதியில் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அப் பகுதியில் கனரக வாகனங்களை நிறுத்தாமல் செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் கோருகின்றனர். (2-60)

## அரசிடமிருந்து நிதியைப் பெற்று அபிவிருத்திப் பணியை முன்னெடுக்கலாம்

### பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் ஆலோசனை

(கரணவாய்)

அரசிடமிருந்து நிதியைப் பெற்று அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கு நிதியின்மையே காரணம் என பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் இளையதம்பி நாகேந்திரராஜா யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் இரண்டாவது அமர்வு அண்மையில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றப்படுவதனால் பல பிரச்சினைகள் உள்ளன. அவர்களை பொலிஸார் துரத்திச் செல்லும் போது அவர்கள் வேகமாகச் செல்வதால் விபத்துக்கள், உயிர் இழப்புக்கள், பொருட் சேதங்கள் என்பன ஏற்பட சந்தர்ப்பம் உள்ளது. எனவே எமது பிரதேசசபை மணல் வீநியோகத்தை மேற்கொள்ளலாம். அதன் மூலமும் வருமானம் ஈட்டலாம். துன்னாலைப் பகுதியில் உள்ள பற்றைக் காட்டில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அப்பற்றைகளை அழிப்பதன் ஊடாக சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியும்.

விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். இதன்மூலம் தேவையற்ற விதத்தில் நடமாடுவோரைக் கண்காணிக்க முடியும் என அவர் தெரிவித்தார். (2-60)

## கடலட்டை பிடித்த 14 பேர் கைதாகினர்

(குரணவாய்)

பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடலட்டை பிடித்த 14 பேரை கைது செய்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.


நேற்று வியாழக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் பருத்தித்துறை கடற் பரப்பில் நுழைந்த 5 படகுகளை கடற்படையினர் சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது பருத்தித்துறை கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதியின்றி அவர்கள் நுழைந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து ஐந்து படகுகளையும் கைப்பற்றிய கடற்படையினர் அதில் பயணித்த 14 பேரையும் கைது செய்து பருத்தித்துறை கடற்படை முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கற்பிட்டி, மன்னார், நாச்சிக்குடா ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் எனக் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர். (2-60)

# தூத்துக்குடி படுகொலையைக் கண்டித்து கிளிநொச்சியில் மெழுகுவர்த்திகள் ஏற்றி நேற்று போராட்டம்







தமிழகம் தூத்துக்குடியில் ஸ்டெரலைட் ஆலை அமைப்பதற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது தமிழகப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

தூத்துக்குடி படுகொலையைக் கண்டித்து நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி பேருந்து நிலையம் முன்பாக வடகிழக்கு புரட்சிகர இளையோர் பேரவையினால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தூத்துக்குடி பகுதியில் உயிரிழந்த மக்களின் நினைவாக மெழுகு வர்த்திகள் ஏற்றப்பட்டு குறித்த போராட்டம் நடைபெற்றது.

குறித்த போராட்டத்தை கிளிநொச்சி மாவட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தளம் ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது குறித்த சம்பவத்தை கண்டிக்கும் வகையில் ஈழதேசம் சொல்கிறது ஸ்டெர்லைட்டை நிறுத்து, சொந்த மக்களைக் கொன்றொழிக்கும் உன் அராஜகத்தை நிறுத்து, முள்ளிவாய்க்கால் இனவழிப்பும் தூத்துக்குடி படுகொலையும் ஒரே மாதத்தில், உலகத் தமிழரே ஒன்றுபடுங்கள், உன் இனம் அழிக்கப்படுகின்றது போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தி இருந்தனர். (2-312-315)

## மாற்றுத்திறனாளி இளைஞர், யுவதிகளுக்கான கலாசாரப் போட்டி திகதி மாற்றம்

(கிளிநொச்சி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகமும் இணைந்து எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடத்த இருந்த மாற்றுத்திறனாளி இளைஞர், யுவதிகளுக்கான கலாசாரப் போட்டிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மாற்றப்பட்டுள்ளது.

மாவட்ட கூட்டுறவாளர் மண்டப ஒழுங்கையில் அமைந்துள்ள மாவட்ட சமூக சேவைகள் அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளில் 13 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டோர் கலந்து கொள்ள முடியும்.

மாவட்ட மட்டப் போட்டிகளில் பரிசு பெறுவோர் தேசிய மட்டப் போட்டிகளுக்கு கொழும்புக்கு அழைத்துச் செல்லப் படவுள்ளனர்.

புத்தாக்க நடனம் தனி நபர் நடனமாக நடைபெறும். ஆண், பெண் பிரிவாக தனித்தனியாக நடைபெறும். ஒலிப்பதிவு நாடாக்களைப் பயன்படுத்தியோ பயன்படுத்தாமலோ நடைபெறும்.

அறிவிப்பாளர், பேச்சு, இளம்பாடகர், கிராமியப் பாடல் ஆகிய போட்டிகளும் நடைபெற உள்ளன. பேசுவதில் சிரமம் இல்லாத மாற்றுத்திறனாளிகள் இப் போட்டிகளில் பங்குபெறலாம்.

மேலதிக விபரங்களுக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் 021 228 5547, கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் 021 228 3363 ஆகியவற்றுடன் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)




## கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் இளைஞன் சடலமாக மீட்பு

### செல்வபுரம் பனங்கூடலில் சம்பவம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு செல்வபுரம் பனங்கூடல் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கள்ளப்பாடு வடக்கு முல்லைத்தீவைச் சேர்ந்த வரதராஜா சதாநிகன் (வயது-28) என்ற இளைஞனை நேற்று முன்தினம் மாலைவரை காணாத நிலையில் தந்தையார் தேடியுள்ளார்.

இதேவேளை செல்வபுரம் கள்ளுத்தவறணை பகுதியில் உள்ள பனங்கூடலுக்குள் உந்துருளி ஒன்று மாலை வரை நிறுத்தி வைக்கப்பட்டதை அவதானித்த அயலவர்கள் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பொலிஸார் குறித்த பகுதிக்கு விரைந்து சென்று உந்துருளியை பார்வையிட்டதோடு அருகிலுள்ள பனங்கூடலுக்குள் சென்றும் தேடினர்.

இதன்போது கழுத்து வெட்டப்பட்ட நிலையில் வெட்டுக் காயங்களுடன் இளைஞனின் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்துள்ளார்கள்.

இதேவேளை குறித்த இளைஞனின் தந்தையாரும் கிராமமக்கள் கொடுத்த தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்திருந்தார்.

தந்தையார் உந்துருளியின் இலக்கத்தை வைத்து தனது மகனின் உந்துருளி என உறுதிப்படுத்தியுள்ளார். இதனையடுத்து தனது மகன் என தந்தையார் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் குறித்த பகுதிக்கு நேற்றுக் காலை சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எஸ்.லெனின் குமார் நிலைமைகளை நேரில் பார்வையிட்டு சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் குற்றத்தடுப்பு பொலிஸார் இணைந்து பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். கழுத்து பகுதியில் பாரிய வெட்டுக்காயம் இருப்பதால் இது திட்டமிட்ட கொலையாக இருக்குமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (2-281)

## வைகாசி விசாகப்பொங்கல் திருத்தல யாத்திரை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வைகாசி விசாகப்பொங்கல் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை வைகாசி விசாகத்தன்று நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு யாழ்.சின்மயா மிஷன் வற்றாப்பளை கோவிலுக்கு திருத்தல யாத்திரையை அன்றைய தினம் பிறபகல் 3.30 இற்கு மேற்கொள்ளவுள்ளது.

எனவே ஆலயத்திற்குச் செல்ல விரும்பும் பக்தர்கள் தங்கள் விபரங்களை அலுவலகத்தில் முற்கூட்டியே பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, 021222 3447, 077 857 3447 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## குடிநீர் விநியோகத்திட்ட 60 வீதமான கட்டுமானப் பணிகள் நிறைவு

(கண்டாவளை)

கிளிநொச்சி தட்டுவன் கொட்டி பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகத்திட்டக் கட்டுமானப்பணிகளின் 60 வீதமான வேலைகள் நிறைவடைந்துள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் தெரிவித்துள்ளனர்.

கண்டாவளைப் பிரதேசத்தின் வருடம் முழுவதும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டிய பிரதேசங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற தட்டுவன்கொட்டிக் கிராமத்திற்கான குடிநீர் விநியோகத்திட்டத்தை மேற்கொள்ளும் பொருட்டு கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நீர் வழங்கல் மற்றும் கழிவுகள் சுத்திகரிப்புத்திட்டத்தின் கீழ் தட்டுவன்கொட்டி கிராமத்தில் 400 பயனாளிகளுக்கான குடிநீரை வழங்கும் பொருட்டு இதற்கான கட்டுமானப்பணிகள் 76 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது பரந்தன் பகுதியிலிருந்து தட்டுவன் கொட்டிக்கான நீரைக்கொண்டு செல்லும் குழாய்கள் பொருத்தும் பணிகள் மற்றும் ஏனைய கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்பிரதேசத்தின் குடிநீர விநியோகத்திற்கான கட்டுமானப்பணிகள் 60 வீதம் நிறைவு பெற்றிருப்பதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (2-315)

## ஒரு இலட்சம் மரநடுகைத்திட்டம்



(கிளிநொச்சி)

தாதிய உதவியாளர் பயிற்சி கற்கும் பிள்ளைகள் அங்கம் வகிக்கும் LAVA CARE அமைப்பின் மூலம் வடக்கு மாகாணத்தில் ஒரு இலட்சம் மர நடுகைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தீவுப் பகுதி வன்னி மாவட்டங்களில் இவ்வாறு மரங்கள் தொடர்ச்சியாக நடப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் அண்மையில் மர நடுகை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கான அனுசரணையை சிட்னி அவுஸ்ரேலியாவில் வசிக்கும் கனீசியஸ் அமிர்தநாதன் வழங்கி இருந்தார். (2)

## கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலை 1சி தரப் பாடசாலையாக தரமுயர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கடந்த 22 ஆம் திகதி வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் 1சி தர பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

மாயபுர என்ற சிங்கள குடியேற்றத்தினால் நாள் தோறும் பல்வேறு அச்சுறுத் தல்களின் மத்தியில் இந்தப் பகுதி மக்கள் வாழ்ந்துவரும் நிலையில் தமது பிள்ளைகளின் மேற்படிப்புக்காக பல குடும்பங்கள் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கரு நாட்டுக்கேணி உள்ளிட்ட கிராமங்களில் இருந்து கடந்த ஆண்டுகளில் வெளியேறி யிருந்தனர்.

இந்த நிலையில் அப் பகுதியில் இருந்து கல்விக்காக இடம்பெயரும் குடும்பங்களை தடுக்கவும் அந்தப் பகுதிகளுக்கு வேண்டிய அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டும் மேற்குறிப்பிட்ட பாடசாலை 1சி தரத்திற்கு தரமுயர்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 95% அதிகமான மாணவர்கள் சித்தியடைந்து உயர்தரத் திற்கு தெரிவாகியிருந்தனர்.

உயர் தரத்திற்கு தெரிவாகியிருந்த மாணவர்கள் இப்போது தங்களது சொந்தக் கிராமத்திலேயே தமது உயர் கல்வியை தொடர்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-9)

# இலங்கைப் படைகளுக்கு பிரிட்டன் உதவி;

# ஆவணங்கள் திட்டமிட்டு அழிப்பு!

## 'தி கார்டியன்' சுட்டிக்காட்டு

(லண்டன்)

இலங்கையில் தமிழ் அமைப்புக்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த 1970களின் இறுதிக் காலகட்டத்தில், பிரித்தானியாவின் புலனாய்வு அமைப்புகள் இலங்கைப் படையினருக்கு அளித்த உதவிகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய ஆவணங்களை பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் அழித்து விட்டதாக குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது. லண்டனில் இருந்து வெளியாகும் 'தி கார்டியன்' நாளிதழ் இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

இந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டதால், இலங்கையில் நடந்த கொடூரமான போரின் ஆரம்ப கரலத்தில், பிரித்தானிய அரசு இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றியமை தொடர்பான, எந்தப் பதிவுகளும் இல்லாமல் போயுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

1978 தொடக்கம் 1980 வரையான காலப்பகுதிகளில் ஆவணப்படுத்தப்பட்ட சுமார் 200 கோப்புகள் அழிக்கப்பட்டுள்ளன.

எனினும், இவை எப்போது- எங்கு- யாரால் அழிக்கப்பட்டன என்ற விபரங்களை பிரித்தா னிய வெளிவிவகாரப்பணியகம் வெளியிடவில்லை.

பிரித்தானியாவின் பொது ஆவணங்கள் சட்டத்தின்படி, அரச திணைக்களங்கள், வரலாற்று ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருந்த போதும், இந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளன. எனினும் இவை பாதுகாக்கத் தேவையற்றவை என்று பிரித்தானிய வெளிவிவகாரப் பணிகம் நியாயப்படுத்தியுள்ளது.

1978இற்கும் 1980இற்கும் இடைப்பட்ட காலத்தில் தொகுக்கப்பட்ட இலங்கை தொடர்பான 158 ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்பதை வெளிவிவகாரப் பணியகம் உறுதிப்படுத்தியுள்ளது. இதனால், இலங்கையின் பாதுகாப்பு நடைமுறைகளில் பிரித்தானியாவின் தொடர்புகள் பற்றிய தகவல்கள் பொதுமக்களுக்கு கிடைக்கும் வாய்ப்பு இல்லாமல் போயுள்ளதாக பிரிட் டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இலங்கை தொடர்பான நிபுணரும், குற்றவியல் நிபுணருமான Rachel Seoighe தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர், உலகப் பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் யுனெஸ்கோவிடமும் முறைப்பாடு செய்துள்ளார்.

கென்யா போன்ற பல இடங்களில் நடந்த தவறுகளை மறைப்பதற்காக, அதிகார பூர்வ ஆவணங்களை அதிகாரிகள் திட்டமிட்டு அழித்து விட்டனர் என்பது தெரியும். காணாமல் ஆக்கப்படுதல்கள் பாரிய கொடூரங்கள் நிகழ்த்தப்பட்ட இலங்கையின் போரில், பிரித்தானியா எவ்வாறு உதவியது என்பது பற்றிய தகவல்களை அறியும் உரிமை பொதுமக்களுக்கு உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

அழிக்கப்பட்ட ஆவணங்களின் தலைப்புகளை வெளிவிவகாரப் பணியகம் பாதுகாக்கின்றது.

அதன்படி, பாது காப்பு ஒத்துழைப்பு, ஆயு தங்கள் விற்பனை, வெளி நாட்டு உதவி, அரசியல் புக லிடக் கோரிக்கைகள் என் பன போன்ற முக்கியமான விடயங்களை உள்ளடக்கிய விரிவான ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

அதேவேளை, பிரித்தானிய பாதுகாப்பு திணைக்களத்தின் ஆவணக் காப்பகத்தில் உள்ள சில ஆவணங்களின் படி, இலங்கையின் தமிழ் அமைப்புகளின் ஆயுதக் கிளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்கு, பிரித்தானியாவின் எம்.ஐ 5 மற்றும் எஸ்.ஏ.எஸ் அமைப்புகள், நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்காக அனுப்பப்பட்டமை குறித்த தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

இவர்கள் இலங்கை கொமாண்டோக்களுக்கு பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர்.

எனினும், இவை தொடர்பான விரிவான விபரங்களை உள்ளடக்கிய பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகத்தின் ஆவணங்கள் அழிக்கபட்டு விட்டதாகவும், 'தி கார்டியன்' சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)



ஹற்றன் நஷனல் வங்கி புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள ஆரோக்கியமான ஆற்றல் தரும் வாழ்க்கைப் பயணத்திற்கு வாடிக்கையாளரை அழைத்துச் செல்லும் HNB FIT கணக்கினை அறிமுகப்படுத்துவதற்காக ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்ப்பாணம் மெற்றோ கிளையினால் நேற்று காலை 6.15 மணிக்கு HNB யாழ். மெற்றோ கிளையில் இருந்து ஆரம்பமாகிய நடைபயணம் பண்ணைப்பாலம் ஊடாக மண்டைதீவு சந்தி வரை பயணித்து மீண்டும் யாழ். மெற்றோ கிளையினை காலை 7.30 மணிக்கு வந்தடைந்தது. (படங்கள்: உ.சாளின்)

## போலிக் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்தக் கோரிக்கை

(ஏறாவூர்)

மட்டக்களப்பு, வாகரை வடக்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது தன் மீது சுமத்தப்பட்ட போலி குற்றச்சாட்டு தொடர்பில் உரிய விசாரணை நடத்துமாறு நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் இணைத் தலைமையில் இடம்பெற்ற வாகரை வடக்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த ஒருவரால் இராஜாங்க அமைச்சருக்கு சொந்தமான இடத்தில் 'வடி சாராயம்' உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக தனியார் தொலைக்காட்சி ஒன்றின் இரவு நேர செய்தியில் உரிய ஆதாரமின்றி ஒளிபரப்பு செய்யப்பட்டிருந்தது.

இந்த விடயம் சம்பந்தமாக உடனடி விசாரணை நடத்துமாறு ஹிஸ்புல்லாஹ் கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"வாகரையில் சட்ட விரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும், 'வடி சாராயம்' தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும் அதனால் பலர் அப்பகுதியில் இறந்துள்ளதாகவும் அண்மையில் இடம்பெற்ற வாகரை வடக்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான எந்த சட்ட விரோத நடவடிக்கைகளும், இடம்பெறவில்லை. மக்கள் மத்தியில் எனக்குள்ள நற்பெயரைக் கெடுப்பதற்காக இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட போலி பிரசாரமாகும். முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு எதிராக பொய்யான தகவல்களையும் - விசமக் கருத்துக்களையும் பரப்பி வருகின்ற ஒரு ஊடகம் இந்த விடயத்துக்கு உடந்தையாக இருந்துள்ளது. குறித்த ஊடகம் அந்த செய்தியை உறுதிப்படுத்தாமல் வெளியிட்டுள்ளது எனவும் அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

## நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருப்புகழ்திலகம், திருப்புகழ் மணி இணுவில் தியாகராஜ சுவாமிகள் நூற்றாண்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் திருமண மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக ஆங்கிலமொழிக் கற்பித்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். இ.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட முன்னாள் பீடாதிபதி க.தேவராஜா, இந்து சமய விவகார அமைச்சின் முன்னாள் பணிப்பாளர் கலாபூஷணம் மகாலிங்கம் இளவாலை மெய்கண்டான் வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் சைவப் புலவர் க.செல்லத்துரை ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## விடுதிகள் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்.நகரில் இன்று அமைதிப் பேரணி

(யாழ்ப்பாணம்)

மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களில் விடுதிகள் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று யாழ்.நகர் பகுதியில் அமைதிப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் ஜின்னாஹ் வீதியில் அமைந்துள்ள கலீமா ஒழுங்கையில் தனியார் நிறுவனம் ஒன்று விடுதி அமைப்பதற்கு எதிராக அப்பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டமொன்றினை அண்மையில் முன்னெடுத்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து குறித்த வர்த்தகக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. குறித்த நிறுவனம் சட்ட ரீதியான அனைத்து அனுமதிகளையும் பெற்றிருக்கின்ற காரணத்தினால் பொதுமக்களின் எதிர்ப்பினைப் பொருட்படுத்தாது நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்கு முயற்சித்துவருவதாக தெரிவித்து தமிழ் முஸ்லிம் மக்கள் என்ற அமைப்பு குறித்த பேரணியை மேற்கொள்ளவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1:30 மணிக்கு குறித்த பேரணி யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரம். ஜின்னா வீதியின், கலீமா ஒழுங்கை சந்திக்கு அருகாமையில் நடத்தவுள்ளதாகவும் இவ்வமைதிப் பேரணிக்கு மக்கள் நலன் விரும்பும் அரசியல் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

# புதிய மாகாண சபை தேர்தல் முறையில் எல்லை நிர்ணயம்



கலாநிதி
க.தவலிங்கம்,
தவிசாளர்,
எல்லை நிர்ணய ஆணைக்குழு.

(நேற்றைய தொடர்ச்சி)...

இச் சட்டத்தினூடாக தேர்தல் இடப்பரப்பாக இனங்காணப்பட்டுள்ள மாகாண சபை அதிகார எல்லைகளுக்குள் அமையப் பெற்றுள்ள நிர்வாக மாவட்டங்களிலிருந்து உறுப்பினர்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இவ்வாறு நிருவாக மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் அதாவது 50% விகிதாசார முறையிலும், ஏனைய உறுப்பினர்களில் மாவட்டங்களை வேறு பிரித்துக்காட்டுகின்ற தேர்தல் தொகுதிகளின் கீழ் எளிய பெரும்பான்மை முறையிலான தேர்தலின் அடிப்படையிலும் தேர்ந்தெடுப்பதற்கு இடமளிக்கின்ற கலப்புத் தேர்தல் முறையொன்றிலான ஒரு தேர்தல் முறை 2017ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் (திருத்தச்) சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டது.

மாகாண சபைகளுக்கு உரிய மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களில் ஐம்பது சதவீதத்திற்கும் (50%) நேரொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையொன்றை தேர்தல் தொகுதிகளுக்கமைய தேர்ந்தெடுக்கும் விதத்தில் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தையும் தேர்தல் தொகுதிகளாகப் பிரிப்பதற்காக முதன்மை சட்டவாக்கமான 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்திற்கு மேற்குறித்த திருத்தச்சட்டத்தினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 3 அ (1) ஆம் உட்பிரிவுக்கமைய தேர்தல் தொகுதி எல்லைநிர்ணயக்குழுவொன்றை அதிமேதகு சனாதிபதி 2017 ஒக்டோபர் மாதம் 04 ஆம் திகதி 2039/29 இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி நியமனம் செய்தார். அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய நியமனம் செய்யப்பட்டுள்ள எல்லைநிர்ணயஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அங்கத்தினர்கள் இருவரையும் உள்ளடக்கியவாறு அக்குழு நியமிக்கப்பட்டது.

உரிய சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கமைய குழுவின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கென ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தினதும் மாவட்ட செயலாளரின் தலைமையிலான ஒர் உபகுழுவீதம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமிக்கப்பட்டது.

**புதிய எல்லை நிர்ணயத்தின்பால் செல்வாக்குச் செலுத்துகின்ற சட்டம்**

1988 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்திற்கு (முதன்மை சட்டவாக்கத்திற்கு) 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 3அ(1) முதல் 3அ(11) வரையிலான உட்பிரிவுகளில் உள்ள சட்ட ஏற்பாடுகளுக்கமையவும் அதிமேதகு சனாதிபதியினால் குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அங்கத்தினர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள நியமனக் கடிதங்களுக்கமைய இவ்வெல்லை நிர்ணயக் குழுவிற்குரிய பணிகளை ஆற்றுவதற்காக கையளிக்கப்பட்ட தத்துவங்களையும் பொறுப்புக்களையும் கீழ்வருமாறு விளக்க முடியும்.

(i) 2004ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவுக்கமைய மாகாண சபை அதிகார எல்லைகளுக்குள் அமையப் பெற்றுள்ள ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலிருந்தும் மாகாணசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேர்தல்கள் ஆணையாளரினால் தீர்மானிக் கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஐம்பது சதவீதத்தை (50%) நேரொத்த உறுப்பினர் தொகையொன்றை தேர்ந்தெடுக்கத்தக்கவாறு மாகாணசபைத் தேர்தல்சட்டத்தின் 3அ (4) ஆம் உட்பிரிவில் காட்டப்பட்டுள்ள விடயங்களை கருத்திலெடுத்து, தேர்தல் தொகுதிகளாகப் பிரித்தொதுக்குதல் இக்குழுவின் பிரதான பணியாக இருந்தது. அதற்கமைய ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தேர்தல் மாவட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர் எண்ணிக்கையில் 50% உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் பொறுப்பும் குழுவுக்குக் கையளிக்கப்பட்டது. குழுவின் பணிகளிலும் தேர்தல் தொகுதிகளை பிரிப்பதிலும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்களைக் காட்டுகின்ற சட்டத்திற்குரிய 3 அ (4)ஆம் பிரிவின் பிரித்தெடுப் புகையொன்றும் ஏனைய முக்கிய மான விடயங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

"(4) நிர்வாக மாவட்டங்களைத் தேர்தற்றொகுதிகளாகப் பிரிப்பதில் பின்வரும் காரணிகள் குழுவினால் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்:

(அ) ஒரு நிர்வாக மாவட்டத்தின் ஏதேனும் பிரதேசத்தில், இன, மத அல்லது வேறுவகையான அக்கறைப்பிணைப்பினால் ஒன்று சேர்க்கப்பட்ட, ஆனால் அப்பிரதேசத்திலுள்ள பெரும்பான்மையினரான வாசிகளிலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இந்த அம்சங்களில் வேறுபடுகின்ற கணிசமான அளவினரான ஆட்கள் உள்ளனரெனக் குழுவுக்குத் தோன்றுமிடத்து, குழுவானது, அத்தகைய நிர்வாக மாவட்டங்களைத் தேர்தற்றொகுதிகளாகப் பிரிவிடலாம்.

(ஆ) அத்தகைய பிரிவிடுகையைச் செய்வதில், ஆணைக்குழு, பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்:

(i) மாகாணத்திற்குள்ளான நிர்வாகமாவட்டங்களின் பல்வேறு தேர்தல் தொகுதிகளில் வதிகின்ற ஆட்களின் எண்ணிக்கையிலான அளவொவ்வாமையை மிகக் குறைவானதாக்குவதன் விருப்புத்தன்மை அத்துடன்,

(ii) தேர்தற்றொகுதிகளின் புவியியல்சார் மற்றும் பௌதீகச் சிறப்புக்கூறுகள்."

(ii)மேற்குறித்த 3அ(4)ஆம் உட்பிரிவில் குறிப்பாக காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்பால் கவனம் செலுத்த ஏதேனுமொரு நிர்வாக மாவட்டத்திற்கு ஒர் உறுப்பினரிலும் பார்க்க அதிகமான எண்ணிக்கையினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தேர்தல் தொகுதிகளை உருவாக்குதல் பொருத்தமென குழு கருதுகின்றவிடத்து, குழு பல் அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளையும் குறித்தொதுக்குதல் வேண்டும்.

(iii) நிர்வாக மாவட்டமொன்றில் வேறுபிரிக்கப்படுகின்ற ஒவ்வொரு தேர்தல் தொகுதியையும் இனங்காண்பதற்காக அவையொவ்வொன்றிற்கும் இலக்கமொன்றையும் பெயரொன்றையும் குறித்தொதுக்கவும். அவ்வொவ்வொரு தேர்தல் தொகுதியிலுமிருந்து தேர்ந்தெடுக்கப் படுவதற்கு உரித்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதும் குழுவின் பொறுப்பாகும்.

(iv) குழுவினால் அதன் பொறுப்புக்கள் ஆற்றப்படுகையில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறையை தீர்மானிப்பதற்கும் பொறுப்புக்களை ஆற்றுகையில் தேவையான அலுவலர்கள், நிபுணர்கள், நுட்பக்குழுக்கள் மற்றும் உபகுழுக்களை நியமனம் செய் வதற்கும் குழுவிற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

(v) குழு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 4 மாதத்திற்குள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கையை மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு கையளித்தல் வேண்டும்.

குழுவின் அறிக்கை அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், இரண்டு வாரங்களுக்குள் அதனை அமைச்சர் பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 2/3 இற்கு குறையா எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களின் வாக்கினால் நிறைவேற்றிக்கொள்வதற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்ததன்பின் 2/3 வாக்குகளால் அங்கீகரிக்கப்படாவிடத்து அவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தேர்தல் தொகுதிகளின் இலக்கங்கள், அவற்றின்பெயர்கள், எல்லைகள் தொடர்பாக மீளாய்வு செய்வதற்காக 2017 ஆம்ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தின் 4(12) முதல் 4(14) வரையிலான உட்பிரிவுகளில் காட்டப்பட்டுள்ளவாறு மீளாய்வுக் குழுவொன்று பிரதமர் தலைமையில் பாராளுமன்றத்தின் சபாநாயகரினால் நியமனம் செய்யப்படும்.

சபாநாயகரினால் நியமனம் செய்யப்படுகின்ற இம் மீளாய்வுக் குழு பிரதமர் தலைமையிலான பிரதான இனக் குழுமங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐவரை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். அக்குழுவின் அறிக்கையை இரண்டு மாதங்களுக்குள் அதிமேதகுசனாதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டுமென சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளது.

உரிய மீளாய்வுக்குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர், உடனடியாக அதிமேதகு சனாதிபதியினால் தேர்தல் தொகுதிகளின் பெயர்களும் எல்லைகளும் பிரகடனம் செய்யப்படல் வேண்டும்.

2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின் 3(3) ஆம் உட்பிரிவின்கீழ் காட்டப்பட்டுள்ளவாறு 2012 ஆம் ஆண்டில் அதற்கு முந்திய சனத் தொகைக் கணிப்பீட்டிற்கமைய ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திற்கும் இனங்க தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேர்தல் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை, தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரால்எல்லைநிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அறிவிக்கப்பட்டது. அதற்கமைய அவ்வுறுப்பினர்களின் எண்ணிக்கையானது (2 போனஸ் உறுப்பினர்கள் உட்பட) மேல் மாகாணம் -104, மத்திய மாகாணம்-58, தென் மாகாணம்-55, வட மாகாணம் -38, கிழக்கு மாகாணம்- 37, வடமேல் மாகாணம் - 52, வடமத்திய மாகாணம்- 33, ஊவா மாகாணம்- 34, சப்பிரகமுவ மாகாணம் -44, ஆகும். இவ்வெண்ணிக்கை எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என்பதை வேறொரு கட்டுரையில் பார்ப்போம்.

மாகாணங்களுக்கு தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையிலிருந்து, 2012 ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணிப்பீட்டுக்கு அமைவான சனத்தொகையை அடிப்படையாகக்கொண்டு தற்போது ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையானது கொழும்பு-40, கம்பஹா-40, களுத்துறை-22, கண்டி-29, மாத்தளை-11, நுவரெலியா-16, காலி-22, மாத்தறை-17, அம்பாந்தோட்டை-14, யாழ்ப்பாணம்-16, கிளிநொச்சி-4, மன்னார்-5, வவுனியா-6, முல்லைத்தீவு-5, மட்டக்களப்பு-11, அம்பாறை-14, திருகோணமலை-10, குருநாகல்-34, புத்தளம்-16, அநுராதபுரம்-21,பொலன்னறுவை-10,பதுளை-18, மொனராகலை-14, இரத்தினபுரி-24, கேகாலை-18 ஆகும்.

(தொடரும்)

# பாரதம்

## தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் வருத்தம் அளிப்பதாக உள்ளது
### துணை சபாநாயகர் தம்பிதுரை கவலை



(கிருஸ்ணகிரி)

தூத்துக்குடியில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் வருத்தம் அளிப்பதாக உள்ளது என்று கிருஷ்ணகிரியில் மக்களவை துணை சபாநாயகர் தம்பிதுரை தெரிவித்துள்ளார்.

துணை சபாநாயகர் தம்பிதுரை நேற்று கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில் நிருபரிடம் தெரிவித்ததாவது.

ஜெயலலிதா ஆட்சி காலத்தில் இந்த ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டது. ஆனால் அவர்கள் உச்சநீதிமன்றத்திற்கு சென்று ஆலையை திறக்க அனுமதி பெற்றனர். மக்களுக்கும், விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டதால் தான் இந்த ஆலையை மூட உத்தரவிட்டதாக அப்போது முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா தெரிவித்தார்.

அவரது வழியில் விவசாயிகளுக்கும்பொது மக்களுக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் மக்கள் நலனுக்காக மட்டும் இந்த அரசு செயற்பட்டு வருகிறது. மக்கள் நலன் பாதிக்கும் எந்த திட்டத்தையும் செயற்படுத்தாது என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெளிவாக கூறி உள்ளார். தூத்துக்குடியில் நடந்த சம்பவம் வேறு மாதிரியான ஒன்று. ஆகவேதான் தமிழக முதலமைச்சர் அதற்கு உரிய நிவாரணம் வழங்கவும் வருத்தத்தையும் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடிக்கு அதிகாரிகள் முதலில் செல்வார்கள். அங்கு உள்ள நிலவரங்கள் குறித்து ஆய்வு செய்த பின்பு அமைச்சர்கள் சென்று அங்குள்ள மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப நிவாரணப் பணிகளை மேற்கொள்வார்கள்.

தூத்துக்குடியில் 144 தடை உத்தரவு போடப்பட்டது குறித்து எனக்கு தெரியாது. இந்த துயர சம்பவம் எங்கள் எல்லோருக்கும் வருத்தமளிப்பதாக உள்ளது.

எனவே தான் அதற்கு ஒரு நிவாரணம் தேடும் விதமாக அவர்களுக்கு உரிய உதவிகளை வழங்குவதாகவும், வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தருவதாகவும் தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்த சம்பவம் எங்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

காவிரி பிரச்சினையில் ஒத்துழைக்க தயார் என்று குமாரசாமி கூறிவிட்டார். நீதிமன்றம் கூறியுள்ளபடி செயற்பட தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். உச்ச நீதிமன்றம் தண்ணீரை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளது. அதன்படி அவர் செயற்படுவார் என்று நம்புகிறோம்.

கர்நாடகாவில் ஒரு மாநில கட்சியின் தலைவர் தான் முதலமைச்சர் ஆகி உள்ளார். அங்கு மாநில கட்சியின் ஆட்சிதான் நடைபெறுகிறது. இந்தியாவில் அந்தந்த மாநில உணர்வுகளுக்கு ஏற்ப தான் தலைவர்கள் உருவாகி வருகிறார்கள். அதேபோல் தமிழகத்தை பொறுத்தவரையில் எந்த தேசியக்கட்சிக்கும் வாய்ப்பு கிடையாது. அ.தி.மு.க தொடர்ச்சியாக ஆட்சி செய்யும். (7)

## தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் பலியானோர் எண்ணிக்கை 13 ஆக உயர்வு

(தூத்துக்குடி)

தூத்துக்குடி ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த செல்வசேகர் என்பவர் நேற்று பரிதாபமாக உயிரிழந்தார்.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நேற்று முன்தினம் மக்கள் பெருமளவில் திரண்டு ஆடசியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இந்த போராட்டத்தில் வன்முறை வெடித்தது. பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 10 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதேசமயம் தூத்துக்குடியிலும் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொது மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் தடியடி நடத்தி கலைத்தனர்.

இதையடுத்து தூத்துக்குடி பகுதியில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டது. பொலிஸ் வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்டது. இதையடுத்து அனைத்து பகுதிகளிலும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் தீவிரமாக ரோந்து சுற்றி வருகின்றனர்.

தூத்துக்குடி அண்ணா நகர் பகுதியில் நேற்று பிற்பகலில் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அப்போது போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் முயன்றனர். ஆனால் வாக்குவாதம் முற்றிய நிலையில், பொதுமக்கள் கற்களை வீசி தாக்கினர். பொலிஸாரும் தடியடி நடத்தினர்.

ஒரு கட்டத்தில் பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதனால் போராட்டக்காரர்கள் சிதறி ஓடினர். இதில் காளியப்பன் (வயது 22) என்ற இளைஞர் உயிரிழந்தார். மேலும் 4 பேர் பலத்த காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த உசிலம்பட்டியை சேர்ந்த ஜெயராமன் என்பவர் உயிரிழந்தார்.

நேற்று செல்வசேகர் என்பவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனால், பலி எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது. (7)

## பக்தாத்தில் தற்கொலை
## ஏழு பேர் பரிதாப

(பக்தாத்)

ஈராக்கின் தலைநகராக பக்தாதில் மக்கள் அதிகம் கூடும் பூங்காவொன்றில் நேற்று முன்தினம் இரவு தற்கொலைப்படை நடத்தி தாக்குதலில் 7 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் ஈராக் நாட்டின் பக்தாத் நகரில், தற்போது இஸ்லாமியர்களின் புனித மாதமான ரம்ழான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.



இந்நிலையில் நேற்று இரவு மக்கள் அதிகம் கூடும் பூங்கா ஒன்றில் தற்கொலைப் படை மூலம் வெடிகுண்டு தாக்குதல்

## தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு குறித்து மத்திய உள்துறை அறிக்கை கோரல்

(டில்லி)

தூத்துக்குடியில் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் தமிழக அரசிடம் அறிக்கை கோரியுள்ளது.



தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்கள் போராட்டம் தீவிரமடைந்த நிலையில், போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். போராட்டக்காரர்களை கலைக்க எவ்வளவோ யுக்திகள் இருந்தும், தேச விரோதிகளை சுடுவது போன்று சரமாரியாக சுட்டது நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. சாதாரண உடை அணிந்த காவலர்பொலிஸ் வானில் அமர்ந்தபடி போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கியால் குறிபார்த்து சுடும் காட்சி அடங்கிய புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

இதனைப்பார்த்த பலரும் பொலிஸாரின் அடக்குமுறையை கண்டித்து கருத்துக்களை பதிவு செய்துள்ளனர். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து தூத்துக்குடியில் பதற்றம் நீடித்து வரும் நிலையில், துப்பாக்கிச்சூடு தொடர்பாக தமிழக அரசிடம் மத்திய உள்துறை அமைச்சகம் அறிக்கை கேட்டுள்ளது. தமிழக அரசு உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பொலிஸாரிடம் உரிய விளக்கம் பெறப்பட்டு, மத்திய அரசுக்கு தமிழக அரசு அறிக்கை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

## தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு
## லண்டனில் ஸ்டெர்லைட் ஆலை உரிமையாளர் வீட்டின் முன்னால் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

வருகின்றனர். போராட்டத்தின் 100ஆவது நாளான நேற்று ஆயிரக்கணக்கான மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி ஊர்வலமாக சென்றனர். அவர்களை தடுத்து நிறுத்தும் போது போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்தது. மோதல் கலவரமாக மாறிய சூழலில் ஆட்சியர் அலுவலக வளாகத்தில்இருந்த வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டதுடன் தீக்கிரையாக்கப்பட்டது. இதையடுத்து, போராட்டக்காரர்களை நோக்கி பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 11 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில், தூத்துக்குடியில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்தை கண்டித்து லண்டனில் உள்ள உரிமையாளர் வீட்டில் தமிழர்கள் போராட்டம் நடத்தினர். லண்டனில் ஸ்டெர்லைட் ஆலை உரிமை

(லண்டன்)

ஸ்டெர்லைட் போராட்டக்காரருக்கு நிறுவனத்துக்கு எதிராக நடந்த துப்பாக்கிச் சூட்டை கண்டித்து, லண்டனில் உள்ள உரிமையாளர் வீட்டின் முன் போராட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும் என அப்பகுதி மக்கள் போராடி

# வெளிநாடு

# ...லைப் படைத் தாக்குதல்

## ...பமாக உயிரிழப்பு



நடத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பொலிஸார் கூறுகையில், சந்தேகத்துக்கு உரிய நபர் நுழையும் போதே பொலிஸார் அவரை தடுக்க முயன்றுள்ளனர். இருப்பினும் அவர்களை மீறி உள்ளே சென்ற அந்த நபர் தன் உடலில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்க செய்துள்ளான் என தெரிவித்துள்ளனர்.

மேலும், பூங்காவின் முன்பகுதியிலேயே அவன் வெடிகுண்டை வெடிக்கச்செய்த தால் பாதிப்புகள் குறைவு என வும்பொலிஸார் தெரிவித்தனர். இந்த வெடிகுண்டு தாக்குதலில் சுமார் 7 பேர் இது வரை உயிரிழந்துள்ளதாக வும், 16 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இச்சம்ப வத்துக்கு இதுவரை எந்த பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பினர் வடக்கு மற்றும் தெற்கு ஈராக் பகுதி களில் பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் நடத்தி வரு வது குறிப்பிடத்தக்கது. (7)

# அமெரிக்காவிடம் பேச்சுவார்த்தைக்கு வருமாறு நாம் கெஞ்சவில்லை

## வடகொரிய மூத்த அதிகாரி மறுப்பு

(பியாங்யாங்)

அமெரிக்காவிடம் பேச்சு வார்த்தைக்கு வருமாறு கெஞ்சவில்லை என வட கொரியாவின் மூத்த அதி காரி Choe Son-hui தெரி வித்துள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் இடம்பெறவுள்ள அமெரிக்க-வடகொரிய ஜனாதிபதிகளுக்கு இடையிலான பேச்சுவார்த் தைக்கு இருதரப்பும் சந்தே கம் வெளியிட்டுள்ளன.

இந்நிலையில்வட கொரியா முற்றுமுழுதாக அணுசக்தித் திட்டத்தினைக் கைவிட வேண்டும் எனவும் பேச்சு வார்த்தை என்ற பெயரில் டொனால்ட் ட்ரம்புடன் கிம் ஜாங் உன் விளையாடக் கூடாது என்றும் அமெரிக்கா வின் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் நேற்று முன் தினம் புதன்கிழமை ஊடக வியலாளர் சந்திப்பின் போது தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அவரது இந்த அறிவிப்பு முட்டாள் தனமானது எனவும் அணு சக்தித் திட்டத்தினை ஒரு தலைப்பட்சமாக வடகொரியா மட்டுமே கைவிடவேண்டு மென அமெரிக்கா விரும் பினால் அது தொடர்பாக மறு பரிசீலனை செய்யவேண்டு மெனவும் Choe Son-hui தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வட கொரியா அணுசக்தித் திட் டத்தினை நிறுத்த உடன் படவில்லை என்றால் பேச்சு வார்த்தையினை விட்டு விலகுவதாகத் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக் கது. (7)

# எரிமலையினால் பிளவடைந்த ஹவாய் வீதிகள்

(லிலாணி எஸ்டேட்)

பேராபத்தை ஏற்படுத்தி வரும் ஹவாய் தீவின் கிலா யூயா எரிமலையின் தாக்க மானது அனைவரையும்வாய் பிளக்க செய்துள்ள நிலையில், தற்போது நிலத்தையும் பிளவடையச் செய்துள்ளது. கிலாயூயா எரிமலையை



அண்மித்த லிலாணி எஸ் டேட் பகுதியில் தார் வீதிகள் உட்பட பெரும்பாலான பகுதி களில் ஏற்பட்டுள்ள பாரிய பிளவுகள், அப்பகுதியின் குடி யிருப்பாளர் ஒருவரினால் படமாக்கப்பட்டுள்ளது.

நிலத்தில் இவ்வாறு பிளவு கள் ஏற்பட்டிருப்பது மாத்திர மன்றி, பிளவுகளுக்கு உள் ளிருந்து அவை புகையை கக்கி வருவதும் கமராவில் பதிவாகியுள்ளது. (7)


# தூத்துக்குடியில் முக்கிய அதிகாரிகளுக்கு இடமாற்றம் - தமிழக அரசு உத்தரவு

(தூத்துக்குடி)

தூத்துக்குடியில் இடம்பெற்ற கல வரத்தினையடுத்து தூத்துக்குடியின் மாவட்டஆட்சியாளருக்கும் பொலிஸ் கண்காணிப்பாளருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட் டத்தில் ஸ்டெர்லைட் ஆலையை மூடக் கோரி மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் போது பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் உயிரிழந் துள்ளனர்.

இதனையடுத்து குறித்த துப்பாக்கி சூடு தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மற்றும் பொலிஸ் கண்காணிப்பாளர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்நிலையில் மாவட்ட ஆட்சியளர்



வெங்கடேஷ் மற்றும் பொலிஸ் கண்காணிப் பாளர் மகேந்திரன் ஆகி யோரை இடமாற்றம் செய்ய தமிழக அரசு உத்தரவிட் டுள்ளது.

அந்த வகையில் திரு நெல்வேலி மாவட்ட ஆட்சியர் சந்தீப் நந்தூரி தூத்துக்குடி யின் புதிய ஆட்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளதோடு புதிய பொலிஸ் கண்காணிப் பாளராக நீலகிரி மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் முரளி ரம்பா, நியமிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# போலியோ நோயைக் குணப்படுத்த ஒரே ஊசிமருந்து கண்டுபிடிப்பு

(நியூயோர்க்)

ஒரே ஊசி மருந்து மூலம் போலியோ நோயை குணப் படுத்தக்கூடிய மருந்தை அமெ ரிக்காவின்மசாசுசெட்ஸ் தொழில் நுட்ப நிறுவனம் கண்டுபிடித் துள்ளது.

போலியோ என்னும் இளம் பிள்ளைவாதம் நோயை உல கில் இருந்து அறவே ஒழிக்க தீவிர நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. 5 வயதுக்கு உட்பட்ட குழந்தை களுக்கு ஆண்டுக்கு 2 தடவை போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது.

முதல் தடவை போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்ட 25 நாள் கழித்து மீண்டும் கொடுக்கப்படுகிறது. இருந் தும் பாகிஸ்தான் போன்ற நாடு களில் போலியோ நோய் முற் றிலுமாக ஒழிக்கப்படவில்லை.

அங்கு மிகவும் உள்ளடங்கிய கிராமம் மற்றும் மலைப் பகுதியில் வாழும் குழந்தைகளுக்கு போலியோ நோய் தடுப்பு சொட்டு மருந்து வழங்க முடியவில்லை. அங்கு பயங்கரவாதிகளின் அச்சுறுத் தல் உள்ளது. எனவே ஒரே ஊசி மருந்து மூலம் போலியோ நோய் தடுப்பு வழங்க முடிவு செய்யப்பட்டது. அத்தகைய மருந்தை அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் தயாரித்துள்ளது.

ஊசி மருந்தில் பல 'டோஸ்' கள் கலக்கப்பட்டுள்ளன. எனவே அதை ஒரு தடவை பயன்படுத்தினால் போதும். இந்த தகவலை அந்த நிறு வனத்தின் விஞ்ஞானி அனா ஜேக்லெனக் தெரிவித்தார். இந்த போலியோ ஊசி மருந்து எலிகளின் உடலில் செலுத்தப்பட்டு இரத்த பரிசோதனை நடத்தப்பட் டது. அதில் போலியோ வைரஸ் கள் அழிக்கப்பட்டிருந்தன. எனவே, இதை குழந்தைகளுக் கும்பயன்படுத்தமுடியும்என விஞ் ஞானிகள் தெரிவித்தனர். (7)

# ட்ரம்புடனான சந்திப்பில் விளையாட்டுத்தனம் வேண்டாம்

## வடகொரிய ஜனாதிபதிக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

சிங்கப்பூரில் ட்ரம்பை சந்திக்கும் போது விளையாட்டுத்தனம் வேண் டாம் என்று வடகொரியா ஜனாதிபதிக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத் துள்ளது.

வடகொரியாவின் எதிரி நாடான தென்கொரியாவுக்கு அமெரிக்கா உதவி வருவதால் அமெரிக்காவை மிரட்டும் நடவடிக்கைகளில் வடகொரியா ஈடுபட்டு வந் தது.

அமெரிக்காவை அணு குண்டு வீசி தாக்கப்போவ தாகவும் ஏவுகணைகளை வீசப் போவதாகவும் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் அடிக்கடி எச்சரித்து வந் தார்.

மேலும் அணுகுண்டு சோதனை, ஏவுகணை சோத னையும் அடிக்கடி நடத்தப் பட்டு வந்தன. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றநிலை நிலவி வந்தது.

பதற்றத்தை தணிக்கும் வகையில் சீனா வடகொரியா



வுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. இதையடுத்து வடகொரியா இறங்கி வந் தது. தென் கொரிய, வட கொரிய அதிகாரிகள் மட்டத் தில் பேச்சுவார்த்தை நடை பெற்றது.

பின்னர் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தென் கொரியாவில் சுற்றுப் பயணம் செய்து அந்த நாட்டு ஜனாதிபதியை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார்.

இதைத்தொடர்ந்து அமெ ரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னும் சந்தித்து பேச ஏற்பாடு செய்யப்பட்டது. அவர் கள் இருவரும் எதிர்வரும் 12-ஆம் திகதி சிங்கப்பூரில் சந்தித்து பேசுவதாக உள் ளது.

இந்த நிலையில் இந்த பேச்சுவார்த்தைக்கு எதிராக கிம் ஜாங் உன் கருத்து தெரிவித்து இருந்தார். இத னால் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடக்குமா? என்ற கேள்வி எழுந்துள் ளது.

இதற்கிடையே அமெ ரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் ஒரு அறி விப்பு வெளியிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்திருப்ப தாவது.

வட கொரியா ஜனாதிபதி டன் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பேச்சுவார்த்தை நடத் தும் போது, பேச்சுவார்த்தை யின் விதிமுறைகள், விதி முறைகளுக்கு ஏற்றார் போல் கிம் ஜாங் உன் நடந்து கொள்ள வேண்டும்.

பேச்சுவார்த்தையின் போது கிம் ஜாங் உன் விளையாட்டுத்தனமாக நடந்துகொண்டால் டொனால்ட் ட்ரம்ப் பேச்சுவார்த்தை நடக் கும் இடத்தில் இருந்து வெளி யேறி விடுவார். பேச்சுவார் த்தை தடைப்படும். இது, இரு நாட்டு உறவை மேலும் பாதிக்க செய்து விடுமென அவர் மேலும் தெரிவித் துள்ளார். (7)



யாளர் அனில் அகர்வால் வீடு அமைந்துள்ளது. தூத் துக்குடியில் நேற்று நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து லண்டன் வாழ்தமிழர்கள்ஒன்று திரண்ட னர். அவர்கள் அனில் அகர் வால் வீட்டின் முன்பு திரண்ட னர். அங்கு ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர். கைகளில் பதாகைகளை ஏந்தி போராட்டம் நடத்தினர். இதனால் அப்பகுதியில் சிறிது பரபரப்பு ஏற்பட்டது. (7)

# இலங்கையில் இராணுவத் தளத்தை அமைக்கவில்லை-சீனா நிராகரிப்பு

(கொழும்பு)

**அம்பாந்தோட்டையில் துறைமுக அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் வலயம் என்ற பெயரில் சீனா இராணுவத் தளத்தை அமைத்து வருவதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை சீனத் தூதுவர் செங் ஷியுவான் நிராகரித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றின் பின்னர் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், "இலங்கையில் சீனாவின் திட்டங்கள் தொடர்பாக பெருமளவில் ஊகங்கள் வெளியாகின்றன. ஆனால் அவற்றில் உண்மையில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்புத் தொடர்பான விவகாரங்கள் அனைத்தும், உள்ளூர் அதிகாரிகளினாலேயே கையாளப்படும் என்று உடன்பாடு செய்து கொள்ளப் பட்டிருக்கிறது.

இது ஒரு கூட்டு முயற்சி. இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்கு 30 வீத பங்குகள் உள்ளன. இது ஒன்றும் சீனாவின் தனிப்பட்ட முதலீட்டு வலயம் அல்ல. ஏனைய நாடுகளும் முதலீடு செய்ய முடியும். நான் கூறுவதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இராணுவத் தளபதிகளும் உறுதிப்படுத்துவார்கள்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கட்சித் தலைமைத்துவத்தில் மாற்றம் அவசியம்-மாயந்த

(கொழும்பு)

கட்சி தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியமாகும். மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் எதிர்பார்த்த மாற்றம் ஏற்படவில்லை. பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் எமது போராட்டத்தை இன்னும் முடிக்கவில்லை.

உண்மையான மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படும் வரை எமது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மாயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன் பிரதி சபா நாயகர் பதவிக்கு அனைத்து கட்சிகளின் இணக்கத்தின் பால் ஒருவரை தெரிவு செய்ய வேண்டும். முழு பாராளுமன்றத்தின் இணக்கம் ஏற்பட வேண்டும்.


ஆகவே கட்சித் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து இணக்கத்திற்கு வந்து சிறந்த ஒருவரை தெரிவு செய்ய வேண்டும். பிரதி சபாநாயகர் நியமனம் தொடர்பில் பிரதமர் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு இன்னும் எதனையும் கூறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு செய்தியாளரின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பேய், பிசாசுகளைப்போல கத்துகின்றனர்; மகிந்த அணி மீது சீறிச்சினந்த மன்னப்பெரும

(கொழும்பு)

கடந்த ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில், நாய்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட உணவுகளின் விலைகள் குறைக்கப்பட்டதே ஒழிய, கர்ப்பிணிப் பெண்களின் உணவுப் பொதியின் விலையைக் குறைக்கவில்லை என குற்றஞ்சாட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும இன்று நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள ஒரு நாய் கூட வரவில்லை என பொய் அறிக்கைகளை முன்வைப்பதாக குற்றஞ்சாட்டினார்.



நாடாளுமன்றத்தில் கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டமூலம்.. மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த ஆட்சிக்காலத்தில் மத்தளைக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் மக்கள் பிரதிநிதிகளை அவமானப்படுத்தினார்கள். துப்பாக்கியை காட்டி எம்மை அச்சுறுத்தினார்கள். வரலாற்றை மறந்து கதைக்க வேண்டாம்.

இந்த நாட்டில், முதலீடுகளை மேற்கொள்ள ஒருநாய் கூட வரவில்லை எனக் கூறுகிறார்கள். நாயைப் பற்றி இவர்களுக்கு பேச அருகதை இல்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில், நாய்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட உணவுகளின் விலைகள் குறைக்கப்பட்டதே ஒழிய, கர்ப்பிணிப் பெண்களின் உணவுப் பொதியின் விலையைக்குறைக்கவில்லை. இப்படிப்பட்டவர்கள், தற்போது ஒரு நாய்கூட வரவில்லை எனக் கூறுகின்றனர்.

ஒன்றிணைந்த எதிரணியினர் தமது மேசையிலுள்ள அறிக்கைகளைப் பார்க்காது பேய், பிசாசுகளைப் போல கத்துகின்றனர். இவர்களால் நேரம் வீணடிக்கப்படுகிறது" எனவும் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார். (இ-7)



# பிரதி சபாநாயகராக அங்கஜன் கூட்டு எதிரணி எதிர்க்காது

## கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதி சபாநாயகராக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவு செய்யப்படுவதற்கு எவ்வித எதிர்ப்புக்களையும் தெரிவிக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால பதவி நீங்கிய பின்னர் அந்தப் பதவிக்கு இதுவரை காலமும் யாரும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் பதவிக்கு அங்கஜன் இராமநாதனின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதியே இவரை பரிந்துரை செய்துள்ளதாக சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். இதனை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எதிர்த்துள்ளதுடன் மீள் பரிசீலனை செய்யுமாறும் கோரியுள்ளது.

ஜனாதிபதியின் பரிந்துரைக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கட்சி ரீதியில் இதுவரை எவ்வித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் இவரை இப்பதவிக்கு நியமிப்பது பொருத்தமாகவே காணப்படும். இவை எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகவே காணப்படுகின்றது.

இதுவரை காலமும் இவரது பெயர் மாத்திரமே பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. பிற உறுப்பினர்களின் பெயர்கள் பரிந்துரை செய்யப்படவில்லை. ஆகவே வெகுவிரைவில் ஏனைய பரிந்துரைகளையும் முன்னிலைப்படுத்தி செயற்படுத்த வேண்டும். இவ்விடயத்தில் எவரும் இனங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண்டாம். தகுதிகளை மையப்படுத்தியே ஆதரவினை வழங்க வேண்டும். இவ்விடயத்தில் கூட்டு எதிரணி பொதுவான தீர்மானத்தினையே மேற்கொள்ளும் எனத் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## பழகத் தெரியாதவர்கள்!

உம்மணா மூஞ்சிகள் வாழ்க்கையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லுங்கள் பார்ப்போம்! மிகக்குறைவு.

கலகலப்பாகப் பழகாதவர்கள்; சாமானியத்தில் சிரிக்காதவர்கள் எப்போது பார்த்தாலும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்கிறவர்கள்; தனிமையை மட்டுமே விரும்புகிறவர்கள். இவர்களெல்லாம் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர்களே.

கலகலப்பாகப் பழகுகிறவர்களுக்கு நன்கு, சிரித்துப் பேசுகிறவர்களுக்கு அந்நியர்கள் கூட வேண்டியவர்களாகி விடுகிறார்கள். முன்பின் தெரியாத இடங்களில் கூட இவர்கள் காரியங்களைச் சாதிக்கிறார்கள்.

நம்மிடம் உள்ள குறைகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது பிரிவில் சோம்பல்; முயற்சியின்மை; திறமையின்மை ஆகியவை அடங்கும். இவை நம்மை மட்டும் பாதிக்கும் விடயங்கள்.

இரண்டாவது பிரிவு இருக்கிறதே, அது அப்படி அல்ல. உதாரணமாகக் கோபம்; அன்பின்மை; மற்றவர்களை மதியாமை ஆகியவை நம்மையும் பாதித்து நம்மைச் சுற்றியிருப்பவர்கள் மூலமும் பாதிப்பு ஏற்படச் செய்யும் இயல்புகள் இவை.

எனவே முதலாவது பரிவினரைக்கூட கொஞ்சமாவது கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். இன்னும் சொல்லப் போனால் இக்குறைகளுக்காக மற்றவர்கள் இவர்கள் மீது அனுதாபம் கூடச் செலுத்தக் கூடும்.

இரண்டாவது பிரிவினர் அப்படி அல்லர். இந்த இயல்புகள் இவர்களைக் கீழே தள்ளிக் கொண்டிருக்கும் வேளையில் நல்லா வேணும் உனக்கு! என்று இவர்கள் வேறு தங்கள் பங்கிற்குக் கல்லைத் தூக்கித் தலையில் போடுவார்கள்.

ஒருவன் எவ்வளவு செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்தாலும் சரி அவனுக்குப் பழகத் தெரியாவிட்டால் இந்த இரண்டிற்கும் மதிப்பும் அங்கீகாரமும் கிடைக்காமலேயே போய்விடும்.

குணம் போதவில்லை என்பதற்காக நல்ல வாய்ப்புகளை இழந்தவர்கள் எத்தனையோ பேர்.

ஆணவம் காட்டுவது; அடக்கமில்லாமல் பேசுவது; மற்றவர்களின் துன்பத்தில் சந்தோசப்படுவது ஆகியவையெல்லாம் பழகத் தெரியாதவர்களின் குணங்கள். பிறரைக் காயப்படுத்தாத தன்மை; எல்லோரும் வேண்டும் என்கின்ற நினைப்பு; உள்ளங்களை நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்கிற முனைப்பு இவையெல்லாம் இருந்தால் மனத்தில் நல்ல இயல்புகள் தாமாகப் படிந்துவிடும். இதற்கு எவரும் டியூஷன் எடுக்க வேண்டும் என்பதே இல்லை.

வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் பலரும் நன்கு பழகத் தெரிந்தவர்களே!

**லேனா தமிழ்வாணன்**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# காலநிலை மாற்றமும் உயிர் பல்வகைமையும்

உயிரியற் பல்வகைமை என்பதற்கு மிகவும் நேரடியான வரைவிலக்கணம் "உயிரினங்கள் அவற்றின் வடிவம், நிறம், பருமன், நடத்தை, உண்ணும் உணவு வகை, உணவூட்டல் முறை என்பவற்றில் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டிருத்தல்", என்பதாகும். இது உயிரியல் ஒழுங்கமைப்பின் எல்லா மட்டங்களிலுமான வேறுபாடுகளைக் குறிக்கும்.

### உயிர் பல்வகைமையின் முக்கியத்துவம்

நாம் உண்ணும் உணவில் 80 சதவீதம் இந்த உலகில் வாழும் தாவரங்களையும், விலங்குகளையும் சார்ந்து தான் இருக்கின்றன. நோய்களின் தாக்கத்தில் இருந்து நம்மை காக்கும் மருந்துகளில் முக்கிய பங்கு வகிப்பது இந்த உயிரினங்களில் இருந்து பெறப்படும் பொருட்கள் தான். இருப்பிடங்கள் மற்றும் ஆடைகள் உருவாக்குவதற்கும் தாவரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ்வாறு நமக்கு இன்றியமையாத பொருட்களான உணவு, உடை, உறைவிடம் என்ற காரணிகளுக்கு நாம் பல்லுயிர்களைச் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது.

பல்வேறு ஆய்வுகளின் படி இப்படிப்பட்ட இயற்கையான சூழ்நிலையை நம்முடைய அறிவியல் வளர்ச்சியின் மூலம் அமைத்துக் கொள்ள முடியாது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள். பூக்களில் பூச்சிகள் மூலம் நடக்கும் மகரந்தச்சேர்க்கையை மனிதர்களான நம்மால் நடத்த முடியாது. தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்கள் பெரும்பாலும் உயிரியல் ஆதாரங்களில் இருந்தே எடுக்கப்படுகிறது.

### உயிர் பல்வகைமையை அழிக்கும் காரணிகள்


- வாழிடம் அழித்தல் (H-Habitat destruction)
- அறிமுகப்படுத்தப்படும் சிற்றினங்கள் (I-Invasive species)
- மாசுபாடு (P-Pollution)
- மனித மக்கள் தொகை அதிகரிப்பு (P-human over population)
- அதிகமான அறுவடை (O-Overharvesting)

E.O.Wilson மேற்குறிக்கப்பட்ட ஐந்து காரணிகளால் உயிர் பல்வகைமை அழிவை எதிர் நோக்குகின்றது என தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### காலநிலை மாற்றம்

குறித்தவொரு காலப்பகுதியில் அதாவது பத்துவருடம் அல்லது அதற்கும் அதிகமாக, புள்ளிவிபர ரீதியில் காலநிலை மூலக் கூறுகளின் அளவீடுகளில் ஏற்படும் மாற்றங்கள் காலநிலை மாற்றம் எனப்படும். காலநிலை மூலகங்களான, மழைவீழ்ச்சி, வெப்பநிலை, காற்று, முதலியவற்றில் உலகரீதியாகவோ அல்லது பிரதேச ரீதியாகவோ வழமைக்கு மாறாக ஏற்படுகின்ற மாற்றம் காலநிலை மாற்றம் எனப்படுகின்றது.

காலநிலை மாற்றம் என்பது புவியின் பனிக்கட்டியாற்றுக் காலத்திலிருந்து இன்று வரையில் நிகழ்ந்து வருகின்ற ஒரு நிகழ்வாகும். ஆரம்ப காலங்களில் காலநிலை மாற்றத்திற்கு இயற்கைக் காரணிகளே காரணமாக விருந்ததுடன் காலநிலை மாற்றம் மிகவும் மெதுவானதாகவே காணப்பட்டது. இன்று இயற்கைக் காரணிகளுடன் மானிடச் செற்பாடுகளும் காலநிலை மாற்றத்தில் பெரும்பங்கை செலுத்தி வருகின்றன. புவியினுடைய வெப்பம் தொடர்ச்சியாக அதிகரித்து வருதல், மழை வீழ்ச்சியில் சில பகுதிகளில் குறைவு. அதே வேளை குறைந்த மழை வீழ்ச்சியை பெற்ற ஒரு சில இடை வெப்ப முனைவு பிரதேசங்களில் அதிகரித்து செல்லும் மழைவீழ்ச்சி, காற்றுக்கோலங்கள் மாறுபடுதல், காலநிலை சார்த்த அனர்த்தங்களின் நிகழ்வுகள் அதிகரிப்பு என பலவிதமான காலநிலையினுடைய மாற்றத்தை சுட்டிநிற்கும் நிகழ்வுகள் தோற்றம்பெற்று வருகின்றன. காலநிலை மாற்றம் பற்றி பார்க்கும்போது பச்சைவீட்டு விளைவு, புவிவெப்பமடைதல் போன்ற விடயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும் .ஏனெனில் பச்சைவீட்டு விளைவு புவிவெப்பமடைவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற நேரடி நிகழ்வாக உள்ளதுடன், காலநிலை மாற்றத்தில் இன்று மிகவும் தெளிவாகத் தெரிகின்ற வேறுபாடுகளுக்குரிய முக்கிய காரணியாக புவிவெப்பம் அதிகரித்தல் காணப்படுகின்றது.




### பச்சைவீட்டு விளைவு

காபனீரொட்சைட்டு , காபனோரோரொட்சைட்டு, குளோரோ புளோரோ காபன், நைதரசன் ஒட்சைட்டு, கந்தகவீரொட்சைட்டு, மெதேன் வாயு, ஐதரோகாபன், நீராவி முதலிய வாயுக்கள் புவிக்கு கிடைக்கும் சூரியக் கதிர்வீச்சின் மூலமான வெப்பத்தை உறிஞ்சிக் கொண்டு புவிக்குத் தேவையான வெப்பத்தை தொடர்ந்தும் பேணுதல் பச்சை வீட்டு விளைவு (Green House Effect) எனப்படுகின்றது. அண்மைக் காலமாக பச்சை வீட்டு வாயுக்களின் அளவு மனிதர்களால் அதிகளவில் சேர்க்கப்படுவதனால் பச்சை வீட்டு விளைவு வழமை யான நிலையைவிட அதிகரித்துச் செல்கின்றது. இதனையே பச்சை வீட்டு விளைவின் தாக்கம் என் கின்றனர். இதனால் பூகோள வெப்பநிலை அதிகரிப்பதுடன், காலநிலை மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றது.

### புவி வெப்பமடைதல்

புவியினுடைய வளிமண்டலத்தின் வெப்பநிலை அதிகரித்தல் புவி வெப்பமடைதல் எனப்படும். அதாவது இயற்கையான காரணிகளினாலும் மனித நடவடிக்கைகளினாலும் வளிமண்டலத்தின் வெப்பம் அதிகரிப்பதனால் புவியின் வெப்பநிலை அதிகரித்தல் புவி வெப்பமடைதல் எனப்படுகின்றது. பச்சைவீட்டு விளைவில் செல்வாக்குச் செலுத்தும் வாயுக்களின் செறிவு வளிமண்டலத்தில் அதிகரித்தல் இந்தப் புவிவெப்பமடைவதற்கு பிரதான காரணமாகும். காபனீரொட்சைட்டின் செறிவு வருடமொன்றிற்கு ஏறக்குறைய 0.2 சதவீதத்தினால் அதிகரித்து வருகின்றது. காபனீரொட்சைட்டில் ஏற்படுகின்ற 10 சதவீதமான அதிகரிப்பு உலகின் சராசரி மேற்பரப்பு வெப்பநிலையின் 0.03 சதவீதமான அதிகரிப்பினை ஏற்படுத்தும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

### காலநிலை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் மானிடக் காரணிகள்

1. குளோரோ புளோரோ காபன் வளிமண்டலத்தில் சேர்தல்

குளோரோ புளோரோ காபன் ஒரு பச்சைவீட்டு வாயுவாக இருப்பதுடன் அது ஓசோன் படையில் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு முக்கியமான வாயுவாகும். இந்த CFC வாயுவானது பல்வேறு விதத்தில் வளிமண்டலத்தில் சேர்க்கப்படுகின்றது.

1.1. ஓசோன் அழிவடைதலும் மனிதனுக்கு ஏற்படும் தீங்குகளும்

ஓசோன் படலம் (**Ozone layer**) என்பது ஒப்பீட்டளவில் உயர் செறிவுகளையுடைய ஓசோனைக் ($O_3$) கொண்ட பூமியின் வளி மண்டலத்தில் உள்ள ஒரு படலம் ஆகும். பூமியில் வாழ்பவர்களுக்கு ஆற்றல் மிக்க சேதாரத்தை ஏற்படுத்தக் கூடிய சூரியனின் உயர் அதிர் வெண்புறஊதா ஒளியினை 93% முதல் 99% வரை இப்படலம் உட்கிரகிக்கிறது. 1913 ஆம் ஆண்டு பிரஞ்சு இயற்பியல் வல்லுநர்கள் சார்லஸ் ஃபேப்ரி (Charles Fabry) மற்றும் ஹென்றி புய்சன் (Henri Buisson) ஆகியோரால் ஓசோன் படலம் கண்டறியப்பட்டது. இதன் பண்புகள் பிரிட்டிஷ் வானியல் நிபுணர் ஜி. எம். பி. டோப்சனால் (G. M. B. Dobson) விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இவர் எளிமையான ஸ்பெக்ட்ரோபோட்டோமீட்டரை (டோப்சோன்மீட்டர்) உருவாக்கினார். அதனை நிலத்தில் இருந்து வளிமண்டல ஓசோனை அளவிடுவதற்குப் பயன்படுத்தலாம். பூமியின் வளிமண்டலத்தில் ஓசோனின் 91வீதத்திற்கும் மேல் இங்கு இருக்கிறது. இதில் பெருமளவு பூமிக்கு மேல் தோராயமாக 10 கிமீ முதல் 50 கிமீ வரையுள்ள தொலைவில் உள்ள ஸ்ட்ரேடோஸ்பியரின் கீழ்ப் பகுதியில் இருக்கிறது. எனினும் பருவநிலை மற்றும் புவியியல் சார்ந்து அதன் அடர்த்தி மாறுபடுகிறது.

நமது வளி மண்டலத்தில் உள்ள ஓசோனில் சுமார் 90 வீதம் ஸ்ட்ரேடோஸ்பியர் கொண்டுள்ளது. ஓசோன் செறிவுகள் சுமார் 20 முதல் 40 கிமீ வரையுள்ள தொலைவில் மிகவும் அதிகளவில் காணப்படுகின்றன. ஓசோன் படலத்தில் ஓசோனின் செறிவு மிகவும் சிறியதாக இருக்கிற போதும் இது வாழ்க்கைக்கு இன்றியமையாத முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ஏனெனில் இது சூரியனில் இருந்து வரும் உயிரியல் ரீதியாகத் தீங்கு விளைவிக்கும் புறஊதாக் (UV) கதிர்களை உட்கிரகிக்கிறது.

ஓசோன் படலத்தில் ஓசோனின் செறிவு மிகவும் சிறியதாக இருக்கிற போதும் இது வாழ்க்கைக்கு இன்றியமையாத முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ஏனெனில் இது சூரிய னில் இருந்து வரும் உயிரியல் ரீதியாகத் தீங்கு விளைவிக்கும் புறஊதாக் (UV) கதிர்களை உட் கிரகிக்கிறது.

மொத்த ஓசோன் உலகளாவிய அளவில் பல்வேறு காரணிகளால் வேறுபடுகிறது. பொதுவாக நிலநடுக் கோட்டுக்கு அருகில் குறைவாகவும் மற்றும் துருவப்பகுதிகளை நோக்கிச் செல்லும் போது அதிகமாகவும் இருக்கும்.

மேலும் இது பருவநிலைக்கு ஏற்றவாறு மாறுபடும். வடக்கு அரைக் கோளத்தில் பொதுவாக வசந்த காலத்தில் அடர்த்தி அதிகமாகவும் மற்றும் இலையுதிர் காலத்தில் அடர்த்தி குறைவாகவும் இருக்கும்.

1.2 ஓசோன் துளை

ஓசோன் படலத்தில் நைட்ரிக் ஆக்சைடு (NO), நைட்ரியஸ் ஆக்சைடு (N2O), ஹைட்ராக்சி (OH), அணு குளோரின் (Cl) மற்றும் அணு ப்ரோமைன் (Br) உள்ளிட்ட கட்டற்றமுழுமையான வினையூக்கிகளால் துளையேற்படலாம். மனிதனால் உருவாக்கப்பட்ட கரிம உலோக ஹாலோஜன் சேர்மங்களின் அதிக அளவு வெளியீட்டால், குறிப்பாக குளோரோ புளோரோ கார்பன்கள் (CFCs) மற்றும் ப்ரோமோபுளோரோகார்பன்கள் ஆகியவற்றின் காரணமாக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருக்கின்றன.


இந்த அதிகளவு நிலையான சேர்மங்கள் ஸ்ட்ரேடோஸ்பியருக்கு உயர்ந்து நீடித்திருக்கும் திறன் கொண்டிருக்கின்றன. அங்கு Cl மற்றும் Br வாயுக்கள் புற ஊதா ஒளியின் செயற்பாட்டால் விடுவிக்கப்படுகின்றன. அண்டார்க்டிக்கில் ஓசோன் ஓட்டை இருப்பது அமெரிக்காவில் 1985 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது வரை குளோரோ புளோரோகார்பன்கள் குளிர்ப்பதனம் மற்றும் தொழிலகத் தூய்மை செய்தல் போன்ற மற்ற பயன்பாடுகளில் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டன. ஒரு சர்வதேச உடன்பாட்டின் (த மோண்ட்ரியல் புரோட்டோக்கால்) ஒப்பந்தத்திற்குப் பிறகு, 1987 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் CFC உற்பத்தி கடுமையாகக் குறைக்கப்பட்டு 1996 ஆம் ஆண்டு முழுவது மாக நிறுத்தப்பட்டது.

(தொடரும்)


ம. ஜோண் பிரியந்த்
விலங்கியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்.


**HIPPO**

Habitat destruction
Invasive species
Pollution
Human population
Overexploitation



E.O.Wilson
(b.1929)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 207

உலக உயிர்ப் பல்வகைமை (International Day of Biodiversity) எப்போது கொண்டாடப்படுகிறது?

புதிர் 207 இற்கான விடைகளை 04.06.2018 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி வி.சா. ஜூனித்தா
ஆசிரியர்,
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்-பிரிவு A,
84, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக்கொள்ளலாம்.

# ரணில் எதிர்ப்பு அணி மகிந்த அணியில்

## சு.க.சுசில் தகவல்

(கொழும்பு)

**தேசிய அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பாராளுமன்ற உறுப்பினர்களும் (ரணில் எதிர்ப்பு அணி) கூட்டு எதிரணியுடன் (மகிந்த அணியில்) இணைந்து எதிர்வரும் காலங்களில் செயற்படுவதற்கு முடிவெடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.**



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

* நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நாம் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டோம். இதன் பின்னர் நாம் கூட்டு எதிரணியுடன் எதிர்வரும் காலங்களில் நாட்டின் அபிவிருத்தி குறித்து ஒரு பொது இலக்குடன் ஒன்றிணைந்து பயணிப்பதற்கு இணக்கம் தெரிவித்தோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 722 வீடுகள் ஜனாதிபதியால் மக்களிடம் கையளிப்பு



(கொழும்பு)

கொழும்பு நகரிலுள்ள குறைந்த வசதிகளையுடைய வீடுகளில் வாழ்ந்த மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட "மெத்சந்த செவன" மாடி வீடமைப்புத் தொகுதியின் 722 வீடுகளை ஜனாதிபதி மக்களிடம் நேற்று முன்தினம் பிற்பகல் கையளித்தார்.

கொழும்பு நகரிலுள்ள குறைந்த வசதிகளையுடைய பின்தங்கிய நகர் பிரதேசங்களான பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் நெறிப்படுத்தலில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் நகர புனர்வாழ்வு செயற்றிட்டத்தின் கீழ் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இரண்டு படுக்கை அறைகளையும் ஏனைய அடிப்படை வசதிகளையும் கொண்ட ஒரு வீட்டிற்கான நிர்மாணிப்பு மற்றும் சேவை வழங்கல்களுக்கான செலவு 4 மில்லியன் ரூபாவாகும். அத்துடன் 15 மாடிகளைக் கொண்ட இந்த வீடமைப்பு தொகுதியின் மொத்தச் செலவு ரூபா 28,880 இலட்சங்களாகும்.

குடியிருப்பாளர்களின் வசதிக்காக மின்னுயர்த்தி, சனசமூக நிலையம் உள்ளிட்ட சகல வசதிகளையும் கொண்டதாக இந்த வீடமைப்பு தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் குறைந்த வசதிகளையுடைய பிரதேசங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு நவீன வசதிகளையுடைய நிரந்தர வீடுகளை வழங்கி, அவர்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதனை நோக்காகக் கொண்டு நகர் புனர்வாழ்வு செயற்றிட்டத்தினூடாக 50,000 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனையில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

குறித்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, மனோ கணேசன், இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சுமேத ரத்நாயக்க உள்ளிட்டோர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

# இல்மனைட் அகழ்வை உடன் தடுத்து நிறுத்தவும்

## கோடீஸ்வரன் எம்.பி. வலியுறுத்து!

(கொழும்பு)

வெளிநாட்டு நிறுவனமொன்று திருக்கோவில், பொத்துவில் ஆகிய பகுதிகளில் இல்மனைட் கனிய வளங்களை சூறையாடி வருகின்றது. இதன் காரணமாக பாரிய அழிவுகள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை தேசிய சூழல் சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டத்தில் வெளிநாட்டு நிறுவனமொன்று திருக்கோவில், பொத்துவில் பகுதிகளில் இல்மனைட் போன்ற கனிய வளங்களை சூறையாடி வருகின்றது.

இதனால் அப் பகுதிகளில் பாரிய அனர்த்தங்கள் உருவாகும் நிலைமை உருவாகியுள்ளது. கடலோர கனிய வளங்களை அகழும் போது இன்னுமொரு சுனாமி ஏற்படுமாயின் பாரிய அழிவுகளை சந்திக்க நேரிடும்.

அத்துடன் இவ்வாறான நடவடிக்கையின் காரணமாக மீன்பிடி, சுற்றுலாத்துறைகள் பாதிக்கப்படுவதுடன் மரம், செடி, கொடிகளும் இதனால் அழிந்து போகும்.

ஆகவே இது தொடர்பில் ஜனாதிபதி உரிய அவதானம் செலுத்தி இந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-7)

# சகல பரீட்சைகளும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நேற்று முதல் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி வரை நடத்த விருந்த சகல பரீட்சைகளும் மறு அறிவித்தல் வரும் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளரினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை மத்திய வங்கி பயிலுநர் உதவிப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இணைத்துக் கொள்ளும் பரீட்சை, இறக்குமதி விவசாய திணைக்களத்தின் தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தின் விவசாய பண்ணை அதிகாரி, திட்ட அலுவலர் மற்றும் தொழில்நுட்ப அதிகாரி பதவிக்கு இணைத்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை, இலங்கை மத்திய வங்கிப் பயிலுநர்களை இணைத்துக் கொள்ளும் பரீட்சை என சகலவித பரீட்சைகளும் மறு அறிவித்தல் வரும் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக பீ.சனத் பூஜித் தெரிவித்துள்ளார். (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 54 பரமசாமி பஞ்சாட்சரம்

கயிலாசத்திலிருந்து தென் பகுதிக்கு வந்த முதற் சிவலிங்கம் கோகர்ணத்தில் இருக்கின்ற படியாலும்,

இங்குள்ள மாதுமை அம்மன் மகா சக்தி பீடங்களில் ஒன்றாக விளங்குகின்றபடியாலும்,


இந்த இடத்தில் இராவணனுக்கு மகா விஷ்ணு விஸ்வரூபமெடுத்துக் காட்டியபடியாலும்,

திருகோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயம், தெட்சண கயிலாயம் என்று அழைக்கப்படுகிறது. இதுபற்றி திருமந்திரம், கந்தபுராணம், பெரியபுராணம் ஆகிய நூல்களிலே கூறப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காரணங்களாலும், பெரியார்கள் பலர் தென் கைலாசமென்று குறிப்பிட்டபடியாலும், திருக்கோணேஸ்வரா ஆலயம் தென் கைலாசமாக விளங்குகின்றது.

திருக்கைலாசப் புனித யாத்திரை செல்ல இயலாதவர்கள் திருக்கோணேஸ்வர ஆலயம் தென் கைலாசமாக விளங்குகின்றபடியால் ஒருமுறை திருக்கோணேஸ்வர ஆலயத்திற்குச் சென்று வருவது சாலச் சிறந்தது என்று தெட்சண கைலாசபுராணம் கூறுகின்றது என்பதை நினைவுகூருகின்றேன்.

திருக்கயிலாசப் புனித யாத்திரையும் அதன் நிறைவும் வெள்ளிக்கிழமை 12.09.14 அன்று அவுஸ்திரேலியா வந்து சேர்ந்தோம். மானசரோவர் ஏரி,



கௌரிக்குண்டு தீர்த்தங்களைக் ஸ்ரீவெங்கடேஸ்வரர் ஆலயம் (ஹெலன்ஸ்பேர்க்), சிட்னி முருகன் கோயில், ஸ்ரீ துர்க்கை அம்மன் கோயில் (குயின்ஸ் பார்க்), பிலமிங்ரன் கற்பக விநாயகர் கோயில் ஆகிய கோயில்களில் கொடுத்து அபிஷேகம் செய்வித்தோம்.

"கயிலாச யாத்திரையும் எனது அனுபவங்களும்" என்னும் பொருள் பற்றி என்னைப் பேசும்படி சில அமைப்புகள் அழைத்ததற்கிணங்க அங்கெல்லாம் சொற்பொழிவாற்றியுள்ளேன்.

இவ் வகையில் எல்லா நிலைகளிலும் என் கூடவே இறையருள் துணை நின்றதை நினைக்க எனது நெஞ்சம் பூரிப்படைகின்றது.

சிட்னியில் கயிலையையும் புனித பயணத்தையும் பற்றிச் சொற்பொழிவு செய்து முடிந்ததும் பலர் என்னை உற்சாகப்படுத்தி யாத்திரை அனுபவங்களை ஒரு புத்தகமாக வெளியிட வேண்டும் என்று விரும்பியதோடு ஆங்கிலத்திலும் சில குறிப்புகள் இருந்தால் நல்லது என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

ஆங்கிலத்தில் கயிலாசம் பற்றி அதிக தகவல்கள் இணையத்தளத்தில் இருக்கின்றபடியால் ஆங்கிலத்திலே சுருக்கமாக இப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.

அவனின்றி அணுவும் அசையாது என்பதற்கிணங்க இறை அருளால் எமது யாத்திரை நிறைவுபெற்றதை நினைத்து இறைவனை வணங்குகிறோம்.

(முற்றும்)



# நாடாளுமன்றம் நாடக மேடையல்ல

## விமலை எச்சரித்தார் சபாநாயகர்



(கொழும்பு)

நாடாளுமன்றத்தை நாடக மேடையாக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டாம் என்று விமல் வீரவன்சவை சபாநாயகர் கருஜெயசூரிய கடுமையாக எச்சரித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை நாடாளுமன்ற அமர்வின் போது இவ்வாறு எச்சரித்தார்.

குறித்த அமர்வில் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்புவதற்காக விமல் வீரவன்ச பல தடவைகள் முயற்சித்த போதிலும் அவரது ஒலிவாங்கி செயற்பட வில்லை. இதனையடுத்து அவர் உரத்த குரலில் "சபாநாயகரே" என்று அழைத்தார்.

விமலின் அழைப்பு சபாநாயகர். கருஜெயசூரியவுக்கு கடுமையான எரிச்சலை ஏற்படுத்திய நிலையில், அவர் விமலின் ஒழுங்குப்பிரச்சினைக்கு இடமளித்தார்.

எனினும் விமல் முன்வைத்த விடயம் ஒழுங்குப் பிரச்சினை சாராது என்று தள்ளுபடி செய்யப்பட்டது.

இதனையடுத்து விமல் வீரவன்சவை நோக்கி கடுமையான எச்சரிக்கை விடுத்த சபாநாயகர், "நாடாளுமன்றத்தை நாடக மேடையாக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டாம். இதற்கென்று ஒரு பாரம்பரியம் உள்ளது.

அந்த மரியாதை கெட இடமளிக்க முடியாது. அத்துடன், சபாநாயகரை அழைப்பதற்கும் ஒரு முறை இருக்கின்றது. என்னை மீறி நீங்கள் செயற்பட முடியாது" என்று கடுந்தொனியில் எச்சரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து விமல் வீரவன்ச மௌனமாக உட்கார்ந்து கொண்டார். (இ-7)

# வெளிநாட்டு சிகரெட்டுகளை கடத்த முயற்சித்தவர் கைது

(கொழும்பு)

குவைத் நாட்டிலிருந்து சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் நேற்று முன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சந்தேகநபர் ஒருவர் சுங்கத்துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து சுங்கப் பிரிவின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவிக்கையில்,

குவைத்திலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 1.00 மணியளவில் இலங்கை வந்த குறித்த சந்தேகநபர் வெளிநாட்டு சிகரெட்டுகளை தனது கைப்பையில் சட்டவிரோதமான முறையில் மறைத்து வைத்து கடத்த முயற்சிக்கையிலேயே இவ்வாறு சுங்கப் பிரிவின் பரிசோதனை அதிகாரிகளால் தடுத்து பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த 35 வயதுடைய ஆணொருவரே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு சந்தேக நபரை கைது செய்யும் வேளையில் அவரிடமிருந்து 30.000 சிகரெட்டுகளுடன் 150 சிகரெட் அட்டைப் பெட்டிகள் கைப்பற்றப் பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளின் இலங்கைப் பெறுமதி 1,500.000 ரூபாவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நபரை கைதுசெய்து மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தியுள்ளதோடு, இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்கப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர் என தெரிவித்துள்ளார். (இ-7)

# பதில் நீதியரசராக ஈவா வனசுந்தர



உயர் நீதிமன்ற நீதிபதி திருமதி ஈவா வனசுந்தர பதில் நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி முன்னிலையில் அவர் நேற்று முன்தினம் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவும் இதன்போது பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1422

Search for people, places and things | Nagendram Home

### அகிலேஷ்

ஒருவரை இறுதிவரை முழுமையாக நம்பும் போது..



மிகச்சிறந்த நண்பரோ அல்லது மிகச்சிறந்த பாடமோ கிடைக்கின்றது

### அங்கீதா

நன்றாகப் பழகும் அனைவரும் நண்பர்கள் இல்லை என்ற சிறுதெளிவு இருந்தால் போதும்...



சில ஏமாற்றங்களும் பல துரோகங்களும் வராது தவிர்க்கலாம்...!

### அக்ஷயா

பிறருக்குப் பிடிக்க வேண்டும் என்று நம் சுயம் இழந்து வாழ்வதைவிட



எமக்கு பிடித்தது போல் திமிருடன் வாழ்ந்துவிட்டு போகலாம்...!

### அகிலன்

வானில் பறந்த விமானங்களை அதிசயமாகப் பார்த்த காலம் போய்



வானில் பறக்கின்ற பறவைகளை அதிசயமாக பார்க்கும் காலம் வந்துவிட்டது...

### ராகுலன்

சோதனைக் காலங்களில் பொறுமையாக இருக்கக் கற்றுக்கொள்



மேகங்கள் மூடிக்கொண்டால் சூரியனால் கூடப் பிரகாசிக்க முடியாது! நாம் எம்மாத்திரம்....!

### ராதா

ஆசைகள் நிராசையாகிப் போகலாம்...



ஆனால் எப்போதும் உயர்ந்த இலக்குகளையே குறி வையுங்கள்...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்- 2018 முஸ்லிம் பிரதிநிதித்துவம்

2012 இல் எடுத்த தேசிய குடிசனக் கணிப்புப்படி இலங்கையில் இருந்த இஸ்லாமிய மதத்தவர் எண்ணிக்கை 1967227 பேராக இருந்தது. இத் தொகை நாட்டின் மொத்த குடித்தொகையில் 9.7%மாகும். இஸ்லாமிய மதத்தவர்கள் முஸ்லிம்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். மொத்த முஸ்லிம் குடித்தொகையில் இலங்கைச் சோனகர் 95% மாகும். மிகுதி 5% வீதத்தினர் ஏனைய முஸ்லிம் பிரிவினராவர்.

கிழக்கு மாகாணம் மொத்த முஸ்லிம் குடித்தொகையில் 28.5%த்தைக் கொண்டுள்ளது. முஸ்லிம்கள் பொதுவில் நாடு தழுவிய நிலையில் பரவலாக வாழும் பொழுது நகரப்பகுதிகளில் இவர்களின் செறிவு கூடுதலாக இருக்கின்றது. கொழும்பு நகரம், தெஹிவளை, பேருவல, அக்குரணை, தெற்கு உடுநுவர, காலிநகரம், அம்பாந்தோட்டை நகரம், முசலிப் பிரதேசம், கல்முனை மாநகரம், அக்கரைப்பற்று மாநகரம், நிந்தவூர் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பொத்துவில், சம்மாந்துறை, காத்தான்குடி, ஏறாவூர், கோறளை மேற்கு, மூதூர், கிண்ணியா, புல்மோட்டை, புத்தளம், கற்பிட்டி, மாவனெல்லை ஆகிய இடங்களில் முஸ்லிம்கள் செறிவாக வாழ்கின்றனர். மேலும், நாட்டின் பல பகுதிகளில் முஸ்லிம் குடியிருப்புகள் தனித்துவமான பண்பாட்டு குடியிருப்புப் பின்புலத்தில் சிங்கள, தமிழ்ப் பிரதேசங்களில் காணப்படுகின்றன.

மாவட்ட அடிப்படையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை, மாவட்ட குடித்தொகையில் முஸ்லிம்களின் விகிதம், நாட்டின் முஸ்லிம் குடித்தொகையில் மாவட்டங்களின் பங்கு விகிதம் அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ளன.

| மாவட்டம் | மாவட்ட முஸ்லிம் குடித்தொகை | மாவட்டத்தில் முஸ்லிம்களின் வீதம் | மொத்த முஸ்லிம் குடித்தொகையில் மாவட்டத்தின் பங்கு விகிதம் |
|---|---|---|---|
| கொழும்பு | 271,719 | 11.8 | 13.8 |
| கம்பஹா | 114,851 | 5.0 | 5.8 |
| களுத்துறை | 114,422 | 9.4 | 5.8 |
| கண்டி | 196,347 | 14.3 | 10.0 |
| மாத்தளை | 44,721 | 9.3 | 2.3 |
| நுவரெலியா | 21,457 | 3.0 | 1.1 |
| காலி | 39,255 | 3.7 | 2.0 |
| மாத்தறை | 25,546 | 3.2 | 1.3 |
| அம்பாந்தோட்டை | 15,163 | 2.5 | 0.8 |
| *யாழ்ப்பாணம் | 2,455 | 0.4 | 0.1 |
| *கிளிநொச்சி | 678 | 0.6 | .03 |
| *மன்னார் | 16,553 | 16.7 | .8 |
| *வவுனியா | 12,341 | 7.2 | .6 |
| *முல்லைத்தீவு | 2013 | 2.2 | .1 |
| மட்டக்களப்பு | 133,939 | 25.5 | 6.8 |
| அம்பாறை | 282,746 | 43.6 | 14.4 |
| திருகோணமலை | 159,251 | 42.1 | 8.1 |
| குருநாகல் | 117,697 | 7.3 | 6.0 |
| புத்தளம் | 152,280 | 20.0 | 7.7 |
| அநுராதபுரம் | 71,386 | 8.3 | 3.0 |
| பொலநறுவை | 30,427 | 7.5 | 1.6 |
| பதுளை | 47,172 | 5.3 | 2.4 |
| மொனறாகலை | 9762 | 2.2 | 0.5 |
| இரத்தினபுரி | 24,446 | 2.3 | 1.2 |
| கேகாலை | 60578 | 7.2 | 3.1 |
| மொத்தம் | 1967,227 | 9.7 | 100 |

*2012 இம் மீள்குடியேற்றம் முற்றுப்பெறவில்லை.

தேர்தல் நடைபெற்ற 340 சபைகளில் மொத்தமாக 699 முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவாகியுள்ளனர். இறுதிப் பிரதிநிதிகள் பட்டியல் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாததால் முஸ்லிம் அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் மிகச்சிறு மாற்றம் ஏற்படலாம். நாடளாவிய நிலையில் மொத்தமாகத் தெரிவு செய்யப்பட்ட 699 முஸ்லிம் பிரதிநிதிகளில் 434 பேர் வட்டார அடிப்படையிலும் 265 பேர் விகிதாசாரப்பட்டியல் வழியாக தெரிவாகியுள்ளனர்.

மாவட்ட அடிப்படையில், வட்டார ரீதியிலும் விகிதாசாரப் பட்டியலில் இருந்து தெரிவாகியவர்களின் புள்ளி விபரம் பின்வருமாறு,

| மாவட்டம் | வட்டார மூலம் | விகிதாசார பட்டியல் மூலம் | மொத்த அங்கத்தவர்கள் |
|---|---|---|---|
| கொழும்பு | 22 | 11 | 33 |
| கம்பஹா | 13 | 11 | 24 |
| களுத்துறை | 27 | 08 | 35 |
| கண்டி | 43 | 28 | 71 |
| மாத்தளை | 11 | 05 | 06 |
| நுவரெலியா | 02 | 01 | 03 |
| காலி | 08 | 03 | 11 |
| மாத்தறை | 07 | 03 | 10 |
| அம்பாந்தோட்டை | 07 | 01 | 08 |
| யாழ்ப்பாணம் | 02 | 0 | 02 |
| கிளிநொச்சி | 0 | 1 | 01 |
| மன்னார் | 18 | 12 | 30 |
| வவுனியா | 06 | 01 | 07 |
| முல்லைத்தீவு | 01 | - | 01 |
| மட்டக்களப்பு | 37 | 28 | 68 |
| அம்பாறை | 82 | 56 | 138 |
| திருகோணமலை | 46 | 34 | 80 |
| குருநாகல் | 14 | 17 | 31 |
| புத்தளம் | 31 | 13 | 44 |
| அநுராதபுரம் | 16 | 12 | 28 |
| பொலநறுவை | 10 | 07 | 17 |
| பதுளை | 12 | 02 | 14 |
| மொனறாகலை | 05 | 01 | 06 |
| இரத்தினபுரி | 05 | 02 | 07 |
| கேகாலை | 09 | 08 | 17 |

சிங்களவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் எந்தவொரு உள்ளூராட்சி சபைகளிலும் பிரதிநிதித்துவம் பெறவில்லை. தமிழர் காலி, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் எந்தவொரு உள்ளூராட்சிச் சபைகளில் பிரதிநிதித்துவம் பெறவில்லை. ஆனால், முஸ்லிம்கள் இலங்கையில் இருக்கும் 25 மாவட்டங்களிலும் பிரதிநிதித்துவத் தைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் நடைபெற்ற 340 உள்ளூராட்சி சபைகளில் 166 சபைகளில் முஸ்லிம்கள் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர். முஸ்லிம்கள் மாத்திரம் பிரதிநிதித்துவம் கொண்ட சபைகள் இருக்கின்றன. அக்கரைப்பற்று மாநகர சபை, காத்தான்குடி நகரசபை, அக்கரைப்பற்று பிரதேச சபை, நிந்தவூர் பிரதேச சபை, கிண்ணியா பிரதேச சபை ஆகியன முழு முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட சபைகள். முஸ்லிம் அங்கத்தவர்களைக் பெரும்பான்மையாகக் கொண்ட உள்ளூராட்சிச் சபைகள் பின்வருமாறு,

பேருவல நகர சபை, அக்குரண பிரதேசசபை, முசலி பிரதேச, நகரசபை, ஏறாவூர் நகரசபை, கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை, கல்முனை மாநகரசபை, அட்டாளைச் சேனை பிரதேச சபை, சம்மாந்துறை பிரதேசசபை, பொத்துவில் பிரதேச சபை, இறக்காமம் பிரதேச சபை, மூதூர் பிரதேச சபை, கிண்ணியா நகரசபை, குச்சவெளி பிரதேசசபை, தம்பலகாமம் பிரதேசசபை, புத்தளம் நகரசபை, கற்பிட்டி பிரதேச சபை, புத்தளம் நகரசபை ஆகிய சபைகளில் முஸ்லிம் அங்கத்தவர்கள் பெரும்பான்மையாக இருக்கின்றார்கள்.

கொழும்பு மாநகரசபை, காலி மாநகர சபை, நீர்கொழும்பு மாநகர சபை, உடுநுவர பிரதேச சபை, லங்காபுர பிரதேச சபை, வெலிமட பிரதேச சபை, மாவனெல்ல பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சிச் சபைகளில் முஸ்லிம்கள் குறிப்பிடத்தக்க பிரதிநிதிகளை பெற்றார்கள்.

பின்வரும் 64 உள்ளூராட்சி சபைகளில் முஸ்லிம்கள் ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளனர். ஸ்ரீஜெயவர்த்தனபுர மா.ந., மொரட்டுவ மா.ந., மினுவாங்கொட ந.ச., வத்தளை பி.ச, மீரிகம பி.ச மினுவாங்கொட பி.ச., மகர பி.ச., களனி பி.ச., புளத்சிங்கள பி.ச., மத்துகம பி.ச., பன்வில பி.ச., குண்டசாலை பி.ச., தம்புள்ள பி.ச., மாத்தளை பி.ச., யட்டவத்த பி.ச., ஹற்றன் ந.ச., தலவாக்கலை ந.ச., கொத்மலை பி.ச., அக்மீமன பி.ச., ஹோப்லே பொட்டலே பி.ச., மாத்தறை மா.ச., அத்துரலிய பி.ச., ஹக்மன பி.ச., டிக்வெல்ல பி.ச., பூநகரி மா.ச., கரைதுறைப்பற்று பி.ச., நானாட்டான் பி.ச., குளியாப்பிட்டிய ந.ச., நிக்கவரெட்டிய பி.ச., கொபியன்ன பி.ச., மகோ பி.ச. பண்வஸ்நுவர பி.ச. , பிங்கிரிய பி.ச. நாரம்பல பி.ச, மவத்தகம பி.ச, ஆனமடு பி.ச, ஆராய்சிக்கட்டு பி.ச. சிலாபம் பி.ச., நாத்தான்டியா பி.ச., மதவாச்சி பி.ச., ரம்பேவா பி.ச., கெப்பற்றிக்பொலாவ பி.ச. மிகிந்தலை பி.ச., ஹப்புத்தளை ந.ச.பண்டாரவள மா.ச, மகியங்கனை பி.ச, பசற பி.ச., லுணுகலை பி.ச, வெல்லவாயா பி.ச., பலாங்கொடை ந.ச. எகலியகொடை பி.ச, பெல்மதுளை பி.ச.,கொடக்கவெல பி.ச., வறக்கஸ்பொல பி.ச, கேகாலை பி.ச., ரம்புக்கன பி.ச., அரநாயக்க பி.ச., புளத்கோப்பிட்டிய பி.ச.

பின்வரும் 28 சபைகளில் முஸ்லிம்கள் தலா இரண்டு அங்கத்தவர்களைப் பெற்றுஉள்ளனர். தும்பனை பி.ச., மதத்தும்பற பி.ச., உடப்பலாகத்த பி.ச. , வெலிகம பி.ச., யாழ்ப்பாணம் மா.ச., செட்டிக்குளம் பி.ச., வவுனியா பி.ச., மன்னார் ந.ச., குருநாகல் மா.ச. கல்கமுவ பி.ச, இப்பாக முவ பி.ச, பொல்காவெல பி.ச. குருநாகலை பி.ச.,அநுராதபுரம் மா.ந. காட்டுகஸ்கிலிய பி.ச. கல்னெவா பி.ச, திறப்பனை பி.ச., மெதிரிகிரிய பி.ச, வெலிகந்த பி.ச., பதுளை மா.ந., ஹாலி-எல பி.ச, படல்கும்புற பி.ச.,ருவான்வெல பி.ச., ஹெகியோவிட்ட பி.ச.

பின்வரும் 17 சபைகளில் மூன்று முஸ்லிம் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளனர். தெஹிவளை மா.ந, கொடிக்காவத்தை பி.ச, வத்தளை-மாபோல ந.ச, பிலகம பி.ச, பண்டார கம பி.ச, பூஜாப்பிட்டிய பிசபாத்த ஹேவா கெற்ற பி.ச, உக்குவெல பி.ச,நுவர கம்பலாத்த மத்தி பி.ச.,மெடகம பி.ச, இரத்தினபுரி மா.ந. மொறவேவா பி.ச, கந்தளாய் பி.ச, உப்புவெளி பி.ச.

பின்வரும் 11 சபைகளில் முஸ்லிம்கள் தலா நான்கு பிரதிநிதிகளைக் கொண்டுள்ளனர். ஹாரிஸ்பற்று பி.ச., வெலிகம ந.ச., பன்னல பி.ச., குளியாப்பிட்டி பி.ச., ஹொரவப்பொத்தானை பி.ச., கெக்கிராவ பி.ச., பொலநறுவை மா.ந., நாவிதன்வெளி பி.ச., ஏறாவூர்பற்று பி.ச., திருகோணமலை ந.ச., ரிதிகம பி.ச..

பின்வரும் 12 சபைகளில் முஸ்லிம்களை தலா 5 பிரதிநிதிகளைக் கொண்டுள்ளனர். நீர்கொழும் மா.ச., களுத்துறை ந.ச., நாவலப்பிட்டிய ந.ச., பாத்தஹும்பற பி.ச., மாத்தளை மா.ந., கலேவெல பி.ச., அம்பாந்தோட்டை மா.ந., புத்தளம் பி.ச., வனத்தவில்லு பி.ச., வெலிமட பி.ச. காரை தீவு பி.ச., மண்முனைப்பற்று பி.ச.

பாணாந்துறை பி.ச. கண்டி மா.ச, கடுகண்ணாவ ந.ச, கோறளைப்பற்று பி.ச முறையே ஆறு முஸ்லிம் பிரதிநிதிகளும் அத்தனகல பி.ச, லங்காபுர பி.ச, மன்னார் பி.ச, மாத்தறை பி. சபைகளில் முறையே ஏழு முஸ்லிம் பிரதிநிதிகளும், வேருவல பி.ச, அக்கரைப்பற்று பி.ச, மாவனல்ல பி.ச, சபைகளில் தலா எட்டு முஸ்லிம் பிரதிநிதிகளும் இருக்கின்றனர். உடுநுவர பி.ச. காலி மா.சயில் முறையே ஒன்பது அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள்.

தம்பலகாம் பி.ச, 10 அங்கத்தவர்களும் இறக்காமம் பி.ச. வேருவெல ந.சபை தலா 11 அங்கத்தவர்களும் புத்தளம் நகர சபை, நிந்தவூர் பி.ச., குச்சவெளி பி.ச, கிண்ணியா ந.சபைகளில் தலா 12 அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள்.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

முசலி பிரதேச சபையில் 13 பேரும் ஏறாவூர் நகர சபை 14 பேரும் கோறளை மேற்கு பி.சபையும் மூதூர் பி.சபையும் 15 அங்கத்தவர்களும் சம்மாந்துறை பி.ச., பொத்துவில் பி.ச., கிண்ணியா பி.ச. ஆகியவற்றில் தலா 16 அங்கத்தவர்களும் காத்தான்குடி நகரசபை அட்டாளைச் சேனை பி.ச, கற்பிட்டி பிரதேச சபை தலா 17 முஸ்லிம் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளன.

அக்குரண பிரதேச சபையில் 19 முஸ்லிம் அங்கத்தவர்கள் இருக்கின்றனர். அக்கரைப்பற்று மாநகர சபையில் 20 முஸ்லிம் அங்கத்தவர்களும், கொழும்பு மாநகர சபையில் 25 முஸ்லிம் அங்கத்தவர்களும் கல்முனை மாநகர சபையில் 29 முஸ்லிம் அங்கத்தவர்களும் இருக் கின்றனர்.

உள்ளூராட்சி சபைகளில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் ஏற்றுக் கொள்ளக்கூடிய பிரதிநிதித்துவமாகக் காணப்படுகின்றது. வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இவர்களின் பிரதிநிதித்துவம் உயர்வாக இருக்கும் பொழுது ஏனைய ஏழு மாகாண்ங்களில் இவர்களது குடித்தொகைக்குரிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை எனத் தெரிகின்றது.

மன்னார் வவுனியாவில் நான்கு பட்டானிச்சி புளியங்குளம், சாளம்பைக்குளம், உப்புக்குளம், விடத்தல்தீவு ஆகிய நான்கு இரட்டை அங்கத்தவர் வட்டாரங்கள் இருக்கின்றன.

இங்கு 4 முஸ்லிம்களும் 4 தமிழரும் தெரிவு செய்ய எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எட்டு முஸ்லிம்களே தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம்கள் வாக்களிக்கும் திறமையினால் கூடிய பிரதிநிதித்து வத்தைப் பெற்றுள்ளார்கள் என கொள்ள முடியும்.

தொகுத்து நோக்குகையில் முஸ்லிம்கள் தங்களது நாடு தழுவிய பரம்பலுக்கேற்ப பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளார்கள். எனினும் சிங்களப் பிரதேசங்களில் இவர்களது பிரதிநிதித்துவம் ஓரளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகிறது.

தேர்தல்களில் முழுமையாகப் பங்குகொள்ளும் மக்களாக இருப்பதால் தங்களது பிரதிநிதித்துவத்தை உறுதி செய்துள்ளார்கள்.

# அனர்த்தத்தில் பலியானவர்கள் தொடர்பில் தவறான எண்ணிக்கையை வெளியிடாதீர்

## அனர்த்த மத்திய நிலையம் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டோர் தொடர்பில் சில ஊடகங்கள் தவறான தகவல்களை வழங்கி வருவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையப் பணிப்பாளர் நாயகம் எஸ்.அமலநாதன் தெரிவித்தார்.

மின்னல் தாக்கம், மரம் முறிந்து வீழ்ந்தமை, வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு அல்லது நீரில் மூழ்கி மற்றும் மண்சரிவு என்பவற்றின் காரணமாக இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆகும்.

எனினும் இவ்வாறு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை சில ஊடகங்களில் தவறாகக் காட்டுகின்றனர். இவை தொடர்பில் அனைத்து ஊடகங்களும் மிகுந்த அவதானத்துடன்செயற்படவேண்டும்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு அறிவிக்கப்படுகின்ற எண்ணிக்கையை ஊடகங்கள் சரியாக அறிவிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# 250 மெற்றிக்தொன் பேரீச்சம்பழம் இறக்குமதி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பங்களிப்புடன் 8.5 கோடி ரூபாய் பெறுமதியான 250 மெற்றிக்தொன் பேரீச்சம்பழம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

புனித நோன்பை முன்னிட்டு முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் பள்ளிவாசல்களுக்கு பேரீச்சம்பழங்களை வழங்கியது.



தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் அலுவல்கள் அமைச்சர் எம்.எச். அப்துல் ஹலீம் தலைமையில் சதொச மொத்த பொருட்கள் களஞ்சிய கட்டடத்தொகுதியில் இது தொடர்பான நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எம்.எச். பௌசி, பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமசந்திர, முஸ்லிம் மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-7)

# கொழும்பில் செப்டெம்பர் மாதம் மதிப்பீடுகள் தொடர்பான மாநாடு

(கொழும்பு)

"இவால்கொழும்பு" (Eval Colombo) என்ற மதிப்பீடுகள் தொடர்பான சர்வதேச மாநாடு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரையில் கொழும்பு ஹில்டன் ஹோட்டல் மற்றும் பாராளுமன்றக்கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

மதிப்பீடுகள் தொடர்பான உலக பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் 100இற்கும் அதிகமான பிரதிநிதிகள் மதிப்பீடுகள் குறித்த துறைசார் நிபுணத்துவம் பெற்றோர் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இது தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு பாராளுமன்றக்கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் உலக பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்மேளனத்தின் தலைவர் ஆனந்த குமாரசிறி கருத்துத்தெரிவிக்கையில்,

பாரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது போதிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாமையால் பொதுமக்களின் பணம் வீண்விரயமாகிறது. எனவேதான், மதிப்பீடுகள் குறித்து நாடு முழுவதிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இது தொடர்பில் தேசிய கொள்கைத் திட்டமொன்றைத் தயாரிக்கும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மதிப்பீட்டுக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்தக் குழு மாவட்டங்கள் தோறும் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் மத்தியில் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருப்பதுடன், மதிப்பீடுகள் குறித்த தேசிய கொள்கைத் திட்டமொன்றை தயாரிக்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினார். எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் மதிப்பீடுகள் தொடர்பான தேசியக்கொள்கையை அமைச்சரவையில் சமர்ப்பித்து, செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் மதிப்பீடுகள் குறித்த சர்வதேச மாநாட்டுக்கு முன்னர் அதனை அங்கீகரிப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் கூறினார்.

மத்தள விமானநிலையம் மற்றும் உமா ஓயா போன்ற பாரிய வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனாலேயே திட்டங்களை அமைப்பதில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது என்றார்.

மதிப்பீடுகள் தொடர்பான பாராளுமன்ற குழுவின் தலைவர் ஆனந்த குமாரசிறி, அதன் உறுப்பினர்களான மயந்த திஸாநாயக்க, மயில்வாகனம் திலகராஜ், புத்திக பத்திரண, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி மற்றும் இலங்கை மதிப்பீட்டாளர் சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் சமன் பண்டார ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# பதவி விலகினார் ஐ.தே.க. எம்.பி.

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.எச்.எம்.நவவி பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

அவர் தமது பதவி விலகல் கடிதத்தை நாடாளுமன்ற செயலர் தம்மிக திசநாயக்கவிடம் கையளித்துள்ளார்.

றிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனத்தின் மூலம் நவவி, நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார்.

உள்கட்சி முரண்பாடுகளை அடுத்தே இவர் பதவி விலகியுள்ளார் என்று கூறப்படுகிறது. (இ-7)

# நிதி நிறுவனங்கள் நட்டமடைவது தொடர்பில் நாடாளுமன்றில் விவாதம் நடத்த வேண்டும்

## அநுரகுமார எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

நிதி நிறுவனங்கள் நட்டமடைவது குறித்து நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட வேண்டுமென ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கோரியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் இந்தக் கோரிக்கையை அவர் அதிகாரபூர்வமாக முன்வைத்துள்ளார்.

நிதி நிறுவனங்கள் அண்மைக்காலமாக நட்டமடையும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளதாகவும், இதனால் நிதி நிறுவனங்களில் பணம் வைப்பில் இட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிதியை வைப்பிலிட்டவர்களுக்கு அரசாங்கம் தலையீடு செய்து பணம் வழங்கும் போது 60 வீதமான பணமே வழங்கப்படுகின்றது என அவர் தெரிவித்தார். பிரமுக்க வங்கி வங்குரோத்து அடைந்த போது அதில் பணத்தை வைப்பிலிட்டவர்களுக்கு



எவ்வித பணமும் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## அலங்கார உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் கின்னர் ஒழுங்கை மகாமாரி அம்மன் திருக்கோவில் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 12 நாட்கள் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று எதிர்வரும் 7ஆம் திகதி தேர்த்திருவிழா இடம்பெறும். (இ)




## மிருகவேட்டைக்குச் சென்றவர் துப்பாக்கி வெடித்து மரணம்!

(கரடியனாறு)

மட்டக்களப்பு கித்துள் காட்டுக்குள் மிருக வேட்டைக்குச் சென்றவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அவர் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

கரடியனாறு கித்துள் பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது கருப்பையா ராமகிருஷ்ணன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் துப்பாக்கியுடன் மிருக வேட்டைக்குச் சென்றபோது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் தொடைப்பகுதியில் குண்டு பாய்ந்ததையடுத்து, குறித்த நபரை செங்கலடி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் சென்ற நிலையில் உயிரிழந்துள்ளதாகவும் சடலம் செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## அச்சக நிறுவனத்திற்கு நவீன தொழில்நுட்பம்

(கொழும்பு)

நாட்டில் பழைமையான திணைக்களமான அரசாங்க அச்சக நிறுவனம் நவீன தொழில்நுட்பத்துடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

உள்நாட்டலுவல்கள் வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி. நாவின்ன இதனை தெரிவித்தார்.

இதற்கு அமைய அச்சக திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனத்திற்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவது காலத்தின் தேவையாகும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## பண்டிதர் நாகலிங்கத்தின் பெயர் வீதிக்கு பரிந்துரை செய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மகாத்மா வீதியையும் பொன்னிப்புலம் சந்தியையும் இணைக்கும் களபாவோடை வீதியை பண்டிதர் நாகலிங்கம் வீதி எனப் பெயர் மாற்றம் செய்யுமாறு பிரதேச சபை உறுப்பினர் செ.விஜயராஜ் வலி.வடக்கு பிரதேச சபைக் கூட்டத்தில் முன்மொழிந்தார்.

பண்டிதர் நாகலிங்கம், அளவெட்டி மண்ணுக்கு பல பெருமைகளைத் தேடித் தந்தவர் என்பதால் அவரது பெயரை குறித்த வீதிக்கு பரிந்துரை செய்துள்ளார். (இ)

## கடுவெல பாலம் நிலத்துக்குள் அமிழும் அபாயம் இல்லை

(கொழும்பு)

புதிய கண்டி வீதியில் (கடுவெல பியகம நகரத்தின்) ஊடாக அமைந்துள்ள கடுவெல பாலம் நிலத்துக்குள் அமிழும் அபாயம் இல்லையென்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் கமல் அமரவீர தெரிவித்துள்ளார்.

பாலத்தின் ஒரு பகுதி சேதமடைந்திருந்தாலும் பாரிய அளவிலான சேதங்கள் ஏற்படும் அபாயம் இல்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)




# கடவுள் எங்கே?

நாமதேவருடைய குருகுலத்தில் பயின்ற மாணவர்களில் சைதன்யனும் ஒருவன். மற்ற மாணவர்களைக் காட்டிலும் மிகவும் புத்திசாலியாக இருந்த சைதன்யனை குருவுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆகவே, தனக்குத் தெரிந்த அனைத்தையும் நாமதேவன் சைதன்யனுக்குக் கற்றுக் கொடுத்தார். குருகுலத்தில் பல ஆண்டுகள் பயின்ற சைதன்யனுக்கு வயது பதினெட்டு.

ஒரு நாள் நாமதேவர் அவனை அழைத்து, "மகனே நீ கற்றுக் கொள்ள வேண்டிய அனைத்தையும் தெரிந்து கொண்டுவிட்டாய். இத்துடன் குருகுலவாசம் உனக்கு போதும். நீ இனி உன் பெற்றோரிடம் சென்று அவர்களுக்குத் தொண்டு செய்வாய். கடவுள் எப்போதும் உனக்குத் துணை இருப்பார்," என்று வாழ்த்தினார்.

தனது குருவை தரையில் விழுந்து வணங்கிய சைதன்யன் அவரிடம் பணிவாக, "குருவே எனக்கு எவ்வளவோ பாடங்கள் கற்றுக் கொடுத்தீர்கள். ஆனால், எந்தக் கடவுளைப் பற்றி இப்பொழுது குறிப்பிட்டீர்களோ அவரை மட்டும் எனக்குக் காட்டவில்லையே! கண்ணால் காண முடியாத கடவுள் எவ்வாறு எனக்குத் துணை இருப்பார்?" என்று வினவினான்.

"சைதன்யா உன்னுடைய சந்தேகத்திற்கு பிறகு ஒரு நாள் விடை அளிக்கிறேன். நீ இப்போது வடக்கு திசையில் உள்ள காட்டின் வழியே சுசந்த நகர் எனும் நகரத்தைத் தாண்டி பவானிபுரத்திற்கு சென்று அங்குள்ள என் சகோதரனை சந்தித்து அவனுடைய சேமலாபங்களை விசாரித்துக் கொண்டு வா?" என்றார்.

"அப்படியே செய்கிறேன் குருவே", என்று பதிலளித்தான் சைதன்யன். குருவின் மனைவி கொடுத்த உணவுப் பொட்டலங்களுடன், மறுநாள் காலையில் கிளம்பினான் சைதன்யன்.

நண்பகல் நேரம், காட்டு வழியில் பாதியைக் கடந்து விட்டான். அப்போது அவனுக்கு மிகவும் தாகம் ஏற்பட்டது. இந்தக் காட்டில் குடிக்கத் தண்ணீர் எங்கே கிடைக்கும் என்று தேடிய அவன் கண்களில் ஒரு வயதான பார்வையற்ற மனிதன் தென்பட்டான். அவன் செடியிலுள்ள இலைகளைக் கைகளால் தடவிப் பார்த்துப் பின், அதை முகர்ந்து பார்த்து சில இலைகளை மட்டும் பையினுள் போட்டுக்கொண்டான்.

"ஐயா. தாங்கள் எதைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான் இந்தக் காட்டில் வசிப்பவன். நான் மூலிகைகளை சேகரித்து பிறருக்கு வழங்குகிறேன். குருடன் என்பதால், முகர்ந்து பார்த்து மூலிகைகளைக் கண்டுபிடிக்கிறேன்," என்றான்.

"இப்போது நீங்கள் பறித்துக் கொண்டிருப்பது என்ன மூலிகை?" என்றான்.

"இது பாம்புக் கடிக்கான மூலிகை. இந்த மூலிகையின் சாறை பாம்பு கடித்தவன் வாயில் விட்டால், விஷம் இறங்கிவிடும். நீ காட்டு வழியில் சுற்றுகிறாயே... இந்த மூலிகையை கொஞ்சம் வைத்துக்கொள்," என்று சில இலைகளைக் கொடுத்தான்.



அவற்றை பத்திரமாக வைத்துக் கொண்ட சைதன்யன், "ஐயா, குடிக்க தண்ணீர் கிடைக்குமா?" என்று கேட்டான்.

"அருகில் ஒரு கிணறு உள்ளது!" என்று கிணறு இருக்கும் இடத்தைக் காட்டினான்.

அந்தக் கிணற்றை அடைந்து தாகம் தீரத் தண்ணீர் குடித்தபின், ஒரு மரத்தடியில் அமர்ந்து உணவு உண்டுவிட்டு, அப்படியே உறங்கி விட்டான் சைதன்யன். அவன் மீது ஏதோ இடித்துவிட்டு ஓடுவது தெரிந்து திடீரெனக் கண் விழித்த சைதன்யன் கண்களில் வேகமாக ஓடும் ஒரு முயல் தென்பட்டது.

திடீரென மரத்தில் ஏதோ சத்தம் கேட்க, நிமிர்ந்து பார்த்தால் ஒரு பெரிய கிளை ஒடிந்து கீழே விழ இருந்தது. உடனே நகர்ந்து விட தற்செயலாக உயிர் தப்பினான் சைதன்யன்.

அங்கிருந்து பயணத்தைத் தொடர்ந்த சைதன்யன், இருட்டும் நேரத்தில் சுசாந்த நகரை அடைந்தான். அங்கு பசியால் வாடிய ஒரு பிச்சைக்காரக் குடும்பத்திற்கு எஞ்சிய உணவுகளை கொடுத்துவிட்டு அன்று இரவு ஒரு சத்திரத்தில் தங்கினான்.

நடு இரவில் ஏதோ சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்த சைதன்யன் தன் அருகில் உறங்கிக் கொண்டிருந்த மனிதனின் வாயில் நுரைதள்ள முனகிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

கொஞ்ச தூரத்தில் ஒரு விஷப் பாம்பு ஓடிக்கொண்டிருப்பதை பார்த்தான். அந்த மனிதனின் அபாய நிலையை உணர்ந்த சைதன்யன் உடனே தன்னிடமிருந்த விஷக்கடி மூலிகைகளை எடுத்து சாறு பிழிந்து அந்த மனிதனின் வாயில் விட்டான். சற்று நேரத்திற்கெல்லாம் அவன் சாதாரண நிலையை அடைந்தான்.

அந்த நபர் யாருமல்ல! குடிமக்களின் குறைகளை அறிய மாறுவேடம் பூண்டு இரவில் திரிந்த அந்த நாட்டு மந்திரி.

சைதன்யனுக்குத் தன் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்த மந்திரி, "நீ என் உயிரைக் காப்பாற்றினாய். அதற்கு செய் நன்றியாக உனக்கு மன்னரிடம் வேலை வாங்கித் தருகிறேன்," என்றார்.

"மிகவும் நன்றி ஐயா. ஆனால், நான் முக்கிய அலுவலகமாக பவானிபுரம் சென்று கொண்டிருக்கிறேன். சில தினங்கள் கழித்து உங்களை சந்திக்கிறேன்" என்று கூறி மந்திரியிடமிருந்து விடைப்பெற்றுக்கொண்டான்.

மறுநாள் காலை பவானிபுரத்தை அடைந்து குருவின் சகோதரரை சந்தித்து சேமலாபங்களை விசாரித்து அறிந்து, பிறகு தன் குருவிடம் திரும்பினான் தான் சென்று வந்த விவரங்களையும், அவரது சகோதரனைப் பற்றியும் விளக்கிக் கூறினான்.

"மகனே, நினைவிருக்கிறதா? கண்ணால் காண முடியாத கடவுள் எங்கே என்று வினவினாய் அல்லவா? அந்த சந்தேகத்திற்கு நான் ஏதும் விளக்கம் கூறாமல் உனக்கு விடை கிடைத்து விட்டது. கடவுளைப் பார்த்து விட்டாய் அல்லவா?" என்றார்.

"நானா! நான் எங்கே கடவுளைப் பார்த்தேன்? பார்க்கவில்லையே!" என்றான் ஆச்சரியத்துடன் சைதன்யன். "மகனே கடவுள் எப்போதும் எல்லா இடங்களிலும் காணப்படுகிறார். ஆனால், ஒரே உருவத்தில் அவர் உனக்குத் தோன்றவில்லை," என்றார்.

"எந்த குருட்டு முதியவர் உனக்கு பாம்பின் விஷக்கடிக்கான மூலிகை தந்தாரோ, அவர் கடவுள். காட்டிலும் கூட கிணற்றின் தேவை ஏற்படும் என்று எண்ணி, யாரோ ஒருவன் கிணறு தோண்டி இருந்தானே, அவனும் கடவுள் தான். உன்னுடைய உயிரைக் காப்பற்றிய முயலும் கடவுள் தான். எந்த மந்திரியை பாம்புக் கடியிலிருந்து நீ பிழைக்க வைத்தாயோ, அவருக்கு நீ கடவுள். இவ்வளவு உருவங்களில் கடவுளைக் கண்ட பிறகுமா கடவுளை நான் காணவில்லை என்று நீ கூறுகிறாய்?" என்றார்.

குருவின் வார்த்தைகளில் இருந்த உண்மையை அறிந்து உணர்ந்ததும் சைதன்யனுக்கு ஞானோதயம் உண்டாயிற்று. தனக்கு ஞானோதயம் உண்டு பண்ணிய குருவை விழுந்து வணங்கி விட்டு, அவரிடமிருந்து விடை பெற்றான்.

இதற்குப் பிறகு சைதன்யன் தன் பெற்றோரை அழைத்துக்கொண்டு சுசாந்த நகரை அடைந்து மந்திரியை சந்தித்தான். மந்திரியின் உதவியால் அவனுக்கு அரசாங்கத்தில் நல்ல வேலையும் கிடைத்தது.




- 1810-ஆர்ஜெண்டினாவில் இடம்பெற்ற புரட்சியின் போது ஆயுதம் தரித்த பியூனஸ் அயரஸ் மக்கள் ஸ்பெயின் ஆளுநரை வெளியேற்றினார்கள்.
- 1953-நெவாடாவில் ஐக்கிய அமெரிக்கா தனது முதலாவதும் கடைசியுமான அணு ஆற்றலினாலான பீரங்கியைச் சோதித்தது.
- 1961-அப்பல்லோ திட்டம்: பத்தாண்டுகளின் இறுதிக்குள் சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் ஐக்கிய அமெரிக்காவின் திட்டத்தை ஜனாதிபதி ஜோன் எஃப். கென்னடி அமெரிக்கக் காங்கிரசில் அறிவித்தார்.
- 1977-ஸ்டார் வோர்ஸ் திரைப்படம் வெளிவந்தது.
- 1985-வங்காள தேசத்தில் இடம்பெற்ற சூறாவளியில் 10,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 2001-அமெரிக்காவைச் சேர்ந்த 32 வயது எரிக் வைஹென்மாயர் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதலாவது கண் பார்வை இழந்த மனிதர் என்ற பெருமையைப் பெற்றார்.
- 2002-மொசாம்பிக்கில் தொடருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 197 பேர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1855-வி. கனகசபைப் பிள்ளை, ஈழத்துத் தமிழறிஞர் (இ. 1906)
- 1878-சோமசுந்தரப் புலவர், ஈழத்துப் புலவர் (இ. 1953)
- 1935-ஆர்.சிவலிங்கம், ஈழத்து எழுத்தாளர்
- 1936-இரா.பாலகிருஷ்ணன், மலேசியத் தமிழ் வானொலி ஒலிபரப்பாளர், ஊடகவியலாளர்
- 1939-கவுண்டமணி, தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகர்
- 1954-முரளி, இந்திய நடிகர், அரசியல்வாதி (இ. 2009)
- 1933-அநு.வை.நாகராஜன், ஈழத்து எழுத்தாளர்
- 1977-கார்த்தி, தமிழகத் திரைப்பட நடிகர்

**இறப்புகள்**

- 1595-பிலிப்பு நேரி, இத்தாலிய மதகுரு, புனிதர் (பி. 1515)
- 2012-திலீப், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்
- 1939-பிராங்க் வாட்சன் டைசன், ஆங்கிலேய வானியலாளர் (பி. 1868)
- 1988-ஏர்ணஸ்ட் ருஸ்கா, செருமானிய இயற்பியலாளர் (பி. 1906)
- 2013-டி.எம்.சௌந்தரராஜன் தமிழ்த் திரைப்படப் பாடகர். (பி. 1923)

**சிறப்பு நாள்**

- ஆபிரிக்க நாள் (ஆப்பிரிக்க ஒன்றியம்)
- ஆப்பிரிக்க விடுதலை நாள் (ஆபிரிக்க ஒன்றியம், ராஸ்தஃபாரை)
- விடுதலை நாள் (ஜோர்தான், 1946)
- விடுதலை நாள் (லெபனான்)
- சர்வதேச காணாமல் போன குழந்தைகள் தினம்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 70 | 60 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 95 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 70 | 70 | 100 | 60 |
| தக்காளி | 200 | 200 | 200 | 180 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 35 | 40 | 40 |
| கோவா | 100 | 120 | 80 | 50 | 100 | 300 |
| கரட் | 180 | 250 | 180 | 180 | 300 | 100 |
| பூசணி | 40 | 25 | 30 | 20 | 40 | 50 |
| புடோல் | 100 | 60 | 80 | 55 | 120 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 35 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 160 | 140 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 85 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 120 | 120 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 80 | 100 | — | 60 | 160 | 100 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | — | — | — | 70 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 70 | 120 | 200 |
| லீக்ஸ் | 150 | 300 | 200 | 160 | 300 | 200 |
| பீற்றூட் | 80 | 100 | 50 | 35 | 100 | 60 |
| கறிமிளகாய் | 150 | 200 | 100 | 60 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 200 | 190 | 240 | 250 |
| போஞ்சி | 200 | 200 | 120 | — | 240 | 200 |
| கத்தரி[illegible] | 70 | 100 | — | — | 80 | 70 |
| கீரை-1பிடி | 40 | 30 | 40 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 250 | 200 | 120 | 200 | 300 | 180 |
| தேங்காய்(ஒன்று) | 70 | 80 | 70 | 30-60 | 50-75 | 80 |
| இராசவள்ளி | 150 | 200 | 200 | — | 160 | 170 |
| [illegible] | 320 | – | – | – | – | – |
| முள்ளங்கி | 100 | 120 | — | 30 | 120 | 40 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 | 10 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 30 | 30 |
| ஈரப்பலா | – | – | – | – | 80 | – |

மனிதனே உயிரினங்களுக்குள் சிறந்தவன். அந்தச் சிறப்பை அவனுக்குத் தருவது அவனது சிந்தனைத் திறன். ~ அரிஸ்ரோட்டில்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வாக்காளர் பதிவை உதாசீனம் செய்யாதீர்கள்

வாக்காளப் பதிவுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் தேர்தல்களின்போது வாக்களிப்பதற்கு வாக்காளர் பதிவு அவசியமானதாகும்.

பொதுவில் வாக்காளராகப் பதிவு செய்வதென்பது தேர்தலில் வாக்களிப்பதற்கு மட்டுமே தேவையானதென யாரும் கருதி விடக்கூடாது.

மாறாக வதிவிடத்தை உறுதி செய்வதற்கான ஒரு முக்கிய ஆவணப் பதிவாகவும் வாக்காளர் பதிவு அமைகிறது.

தவிர, வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் தீர்மானிக்கப்படுவதால் வாக்காளர்களாகப் பதிவு செய்வது எங்கள் இனத்துக்கு நாம் செய்கின்ற நன்மையாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை வாக்காளர்களைப் பதிவு செய்வதில் சிங்கள, முஸ்லிம் மக்கள் மிகுந்த கருசனை கொண்டுள்ளனர்.

வாக்காளராகத் தங்களை பதிவு செய்வது கட்டாயமானது என்ற உணர்வுநிலை இந்த மக்களிடம் இருப்பதைக் காணமுடியும்.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அரசியலில் உள்ள வெறுப்பை மையப்படுத்தி வாக்காளராகத் தங்களைப் பதிவு செய்வதைத் தவிர்த்துக் கொள்வது அவதானிக்கப்படுகிறது.

வாக்காளர் பதிவு மேற்கொள்வதில் கிராம உத்தியோகத்தர்கள் கடுமையாகப் பாடுபடுவதால் வாக்காளர் பதிவு வெற்றி தருகின்ற போதிலும், சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வாக்காளர்களாகப் பதிவு செய்வதில் அசமந்தம் இருப்பதாகவும் அரசியல் கட்சிகளின் செல்வாக்குகள் காரணமாக சிலரை வாக்காளராகப் பதிவு செய்யாமல் விடப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன.

எதுஎவ்வாறாயினும் வாக்காளர்களாகப் பதிவதைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்ற மன உணர்வு பொதுமக்களிடம் ஏற்பட வேண்டும்.

கூடவே பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி அமைப்புக்கள் மற்றும் அரச, தனியார் அமைப்புக்களும் வாக்காளர் பதிவை தத்தம் அங்கத்தினரிடம் ஞாபகமூட்டச் செய்வது நல்லது.

இதற்கு மேலாக மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகம், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள் என பல தரப்பும் வாக்காளர் பதிவில் அதீத கருசனை கொண்டால்,

வாக்காளர்களைப் பதிவு செய்கின்ற பணி பரிபூரணத்துவம் நிறைந்ததாக அமையும்.

எதுவாயினும் கட்சிச் சார்பின் அடிப்படையில் ஒரு பகுதியினரைப் பதிவு செய்தல் மற்றைய பகுதியினரை பதியாமல் தவிர்த்தல் என்ற மிகமோசமான சூழ்நிலை எந்தக் கட்டத்திலும் மேலோங்காமல் இருப்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் உறுதி செய்வது கட்டாயமானதாகும்.

## பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு விரைவில் பதிலடி கொடுக்கப்படும்

### பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா

தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 16 உறுப்பினர்களை பழிவாங்கும் முயற்சிகளை அரசாங்கம் மேறகொண்டு வருகின்றது.

எனவே இவ்வாறான பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு விரைவில் பதிலடி கொடுப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறிய சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்கள் மீது அரசியல் பழிவாங்கல்கள் முயற்சிகளை தற்போது அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

டி.பி.ஏகநாயக்க பதவியில் இருக்கும்போது பௌத்த மத வழிபாட்டு தேவைக்காக அரச வாகனங்களை, குறித்த விகாரைக்கு வழங்கியுள்ளதாக குறிப்பிட்டு குற்றவாளியாக பாவித்து விசாரணைக்குட்படுத்த அழைக்கப்பட்டுள்ளார்.

எனவே அரசாங்கத்தின் இவ்வாறான பழிவாங்கலுக்கு தகுந்த பதிலடியினை விரைவில் கொடுப்போம் என்றார். (ம)

## அர்ஜூன மகேந்திரன் சிங்கப்பூரில் இன்டர்போல் பொலிஸார் தெரிவிப்பு

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் சிங்கப்பூரில் வசித்து வருவதாக இன்டர்போல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்டர்போல் பொலிஸாரின் சிங்கப்பூர் கிளை அதிகாரிகள், இலங்கை குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு அறிவித்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் கோட்டை நீதவான் நீதிமன்றில் நேற்று தெரிவித்துள்ளது.

மதத்திய வங்கியின்பிணை முறி மோசடி தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே அர்ஜுன மகேந்திரன் சிங்கப்பூரில் வசித்து வருவதாக சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோரை ஜூன் மாதம் 7ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம)

## கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் நுழைவாயில் வளைவு திறப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டட நுழைவாயில் வளைவு இன்று காலை 9.00 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

பாடசாலை அதிபர் தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிரேஷ்ட சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம் கலந்து கொள்வார். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.மாவட்டம் முழுவதும் கிளிநொச்சி மாவட்டம முழுவதும், முல்லைத்தீவு மாவட்டம முழுவதும் வவுனியா மாவட்டம் முழுவதும், மன்னார் மாவட்டம முழுவதும் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### சகிப்புத் தன்மையும் உள்ளதை உள்ளவாறே ஏற்றுக்கொள்ளுதலும் நற்குணங்கள் அல்ல

பலர் சகிப்புத் தன்மையை ஒரு நல்ல குணம் என எண்ணுகிறார்கள். சகித்தல் என்பது எதிர்மறையான சொல்லே. ஆழ்ந்த ஒரு வெறுப்புணர்வைச் சுட்டுவதே சகபபுத தனமையாகும. நஙகள ஏதாவதொனறை விரும்புகின்றீர்கள் என்றால் அதை நீங்கள் சகிக்கின்றீர்கள் என்பது பற்றி கேள்வியே இல்லை.

நீங்கள் எதையாவது சகித்துக்கொண்டிருக்கிறீர்கள் எனும போது தறகாலிகமாக அதை நஙகள பொறுததுக கொணடிருககினறாகள எனபதுதான ஆததம. சகபபுத தனமை உளளாாநத எரிமலை. நஙகள சகிததுக கொளகிறாகள எனறால நஙகள வேறு எதையோ இன்னும் பிடித்துக் கொண்டுள்ளீர்கள் என்றுதான் பொருள்.

எந்த நேரத்திலும் சகிப்புத்தன்மை வெறுப்பாக மாறககூடும. சகபபுத தனமையானது ஒரு பிரிவினை உணர்வு. குறுகிய மனம், ஒரு எல்லைக்குட்பட்ட விழிபபுணாவு ஆகியவறறைச சுட்டிக காட்டுகிறது.

உள்ளதை உள்ளவாறே ஏற்றலும் எதிர்மறையானதே. நேசிக்கமுடியாத ஒனறை மாததிரமே நஙகள ஏற்றுக்கொள்கிறீர்கள்.

கேள்வி: மக்களிடம் அன்பு செலுத்த தன்னம்பிக்கை தேவையா?

ஸ்ரீஸ்ரீ: எப்போதும் ஆன்மா மாத்திரம் தான் தன்னம்பிக்கையானது வேறெதுவுமில்லை. இது எங்களுடைய சங்கம்- தன்னைத்தானே நம்பும் சங்கம்.

கேளவி: மககள எவவாறு உளளாாகளோ அவாகளை அவ்வாறே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமல்லவா?

ஸ்ரீஸ்ரீ: நீங்கள் அவர்களை நேசிக்காத போது அவர்களை எவ்வாறுள்ளார்களோ அவ்வாறே ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

சகித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் இரண்டும் உடன்பாடானவை (Positive) என்று எண்ணப்படுகிறது. நான சகிததலும ஏறறுககொளளுதலும அவவிதமலல எனறு சொலகிறேன. (அவை) கணிபபு மறறும பிரிவினையினால் வருகின்றன.

மக்கள் எவ்வாறுள்ளார்களோ அவ்வாறே அவர்களை ஏற்றுக்கொள்ளவோ அல்லது சகித்துக்கொள்ளவோ வேண்டாம். அவர்கள் எவ்வாறு உள்ளார்களோ அவ்வாறே அவர்களை நேசியுங்கள்.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சித்தர்களால் சொல்லப்பட்ட பயனுள்ள பரிகார முறைகள்

வீட்டின் பின்புறம் வாடிய செடிகள் இருந்தால் அது பேய்,பிசாசு போன்ற துர்ச்சக்திகளை ஈர்க்கும்.இது பூமி தோஷததை உணடாககும.எனவே இதுபோனற பாதிபபு உள்ளவர்கள் வீட்டில் உள்ள வாடிய செடிகளை ஒரு செவ்வாய்க்கிழமை அன்று வேரடி மண்ணுடன் பிடுஙகி ஓடும நதில அலலது கடலில விடடு விட மேற்சொன்ன பாதிப்புகள் தீரும்.

உங்கள் வீட்டு பணப்பெட்டியில் மல்லிகைபூ ஏலககாய பசசைகறபு,ரம சநதனம வில்வ இலை இவைகளை வெள்ளிக்கிழமை களில் காலை சூரிய உதயத்தில் வைத்தால் பணவரவு ஏற்படும் .

சிறிது கல் உப்பை ஒருகின்னத்தில் போட்டு , கழிவறையில வைததால கெடடசகதிகளை இழுதது கொள்ளும் ஆனால் அடிக்கடி உப்பை மாற்ற வேண்டும்.

சுடுகாட்டுக்கு சமீபத்தில் வீடு உள்ளவர்கள் வீட்டில் இருநதபடி சுடுகாடடில பிணம எரிவதைப பாரககக கூடாது. இது அக்னி தோஷத்தை உண்டாக்கும். இதனால் வீட்டில் உள்ள சுப தெய்வங்களை வெளியேறும்.

வெள்ளை துணியை எடுத்து அதில் நான்கு பக்கங்களிலும் சிகப்பு ரோஜாவை வைத்து கட்டி, பின்பு நடுவிலும் ஒரு ரோஜாவை வைத்து அதை 3 நதிகள் சங்கமிக்கும் இடத்தில் விட, கடன்கள் அடியோடு அழியும்.

முழு மஞ்சள் 7, கொட்டை பாக்குகள் 7, சிறிய வெள்ளி தகடு,உலோகத்தால் ஆன நாகர்-2, இவற்றை எல்லாம் மூடியுடன் கூடிய வெண்கல கலசத்தில் இட்டு மேற்கு புறமாக வைத்திருக்க சகல நன்மைகளும் உண்டாகும்.

## இஸ்லாம் ஆன்மிக சிந்தனை

### இனிய பதில் கூறுங்கள்

✦ ஒருவர தரமம செயகிறாரெனறால அவர அல்லாஹவின மது கொணட நலலெணணததின காரணமே.

✦ ஒருவர கஞசததனம செயகிறார எனறால அவர அல்லாஹ்வின் மீது கொண்ட தவறான எண்ணத்தின் காரணமேயாகும்.

✦ வாழ்நாளெல்லாம் கஞ்சனாக இருந்து விட்டு மரண வேளையில் கொடை வள்ளலாக மாறும் மனிதனைப் பாரதது இறைவன கோபம அடைகினறான.

✦ நீங்கள் ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர. ஒருவர மது ஒருவர துவேசம கொளளாதீர.

✦ எவரிடமும் உங்கள் தேவைகளை மறைமுகமாகச் சொலலிககேளுஙகள. ஏனெனறால ஒவவொனறிறகும பொறாமைபபடுபவன இருநது கொணடே இருககிறான.

✦ வசதி இல்லாதவன் உங்களிடம் ஏதேனும் கேடடால கொஞசமேனும கொடுதது அனுபபுஙகள அல்லது இனிய வார்த்தைகளால் பதில் சொல்லுங்கள்.

✦ கஞ்சத்தனத்தைப் பற்றி பயந்து கொள்ளுங்கள். ஏனென்றால் உங்கள் முன்னோர்கள் கஞ்சத்தனத்தின் காரணமாகத் தான் அழிந்து போனார்கள்.



மாகாண மட்ட உதைபந்தாட்டப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் 20 வயது பெண்கள் பிரிவில் பண்டத்தரிப்புப் பெண்கள் உயர்தர பாடசாலை அணி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. வெற்றி பெற்ற அணி வீரர்களையும் பொறுப்பாசிரியர்களையும் படத்தில் காணலாம். (க)

# ஓட்டங்கள் முக்கியம் தான் அதைவிட நம்பிக்கை முக்கியம்

## வெற்றியின் பின் கார்த்திக்

ஐ.பி.எல் போட்டியில் ராஜஸ்தான் அணியை தோற்கடித்த பின்னர் அது குறித்து கொல்கத்தா அணியின் தலைவர் தினேஷ் கார்த்திக் பேசியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற எலிமினேட்டர் ஆட்டத்தில் கொல்கத்தா - ராஜஸ்தான் அணிகள் மோதிய நிலையில் கொல்கத்தா அணி வெற்றி பெற்று இரண்டாவது தகுதி சுற்றுக்கு முன்னேறியது.

இந்த தோல்வியின் மூலம் ராஜஸ்தான் அணி தொடரிலிருந்து வெளியேறியது.

வெற்றிக்கு பின்னர் பேசிய கொல்கத்தா அணித் தலைவர் தினேஷ் கார்த்திக். நாங்கள் ஆரம்பத்தில் தடுமாறினாலும் பின்னர் அதிலிருந்து மீண்டு வந்தோம்.

இந்த வகையான போட்டிகளில் ஓட்டங்கள் முக்கியம் என்பதை விட நம்பிக்கை தான் முக்கியம். எங்கள் அணியின் பந்து வீச்சாளர்கள் சிறப்பாக விளையாடியதோடு, நல்ல விதமாக பந்து வீசினார்கள் என கூறியுள்ளார். (க)



# ஒரு விக்கெட்டிற்கு ஒரு கோடி எதிர்பார்க்கப்பட்டவர் சொதப்பல்



கொல்கத்தா ஐ.பி.எல்.2018இல் அதிக ஏலத்தொகை கொடுத்து எடுக்கப்பட்ட இந்திய வீரர் என்ற பெருமையை ராஜஸ்தான் ராயல் அணியின் ஜய்தேவ் உனத்கட் பெற்றார். ஆனால் அவருக்கு வழங்கப்பட்ட தொகைக்கு ஏற்ப அவர் விளையாடவில்லை என்பது தான் நிதர்சனம் ஆகியுள்ளது.

ஐ.பி.எல். இந்த சீசனுக்கான போட்டிக்கு ராஜஸ்தான் அணிக்காக ரூ. 11.5 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டார். இந்நிலையில் ராஜஸ்தான் றோயல் அணிக்காக உனத்கட் 15 போட்டிகளில் விளையாடி 11 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

மேலும் அந்த அணியில் தலைவர் பொறுப்பேற்ற ரஹானேவுக்கு ரூ. 4 கோடி வழங்கப்பட்ட நிலையில் உனத்கட்டுக்கு ரூ. 11.5 கோடி கொடுத்து மிக எதிர்பார்ப்புடன் ஏலத்தில் எடுக்கப்பட்டார். ஆனாலும் அவர் நடப்புப் போட்டிகளில் சிறப்பாகச் செயற்படவில்லை. அவரின் 11 விக்கெட்டுக்களில் ஒரு விக்கெட்டுக்கு ஒரு கோடி வீதம் வழங்கப்பட்டுள்ளது என விமர்சகர்கள் விமர்சித்துள்ளார்கள். (க)

# மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள்

யாழ்ப்பாணம், அத்தியடி கலைமகள் சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நல்லூர். யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாணவர்களுக்கான சித்திரம் வரைதல், பொது அறிவு, கவிதைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

அந்த வகையில் சித்திரப்போட்டி ஜூன் 23 ஆம்திகதியும்பொது அறிவுப் போட்டி ஜூன் 24ஆம் திகதியும் கவிதைப்போட்டி ஜூன் 30ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாக நிலையத்தலைவர் அறிவித்துள்ளார்.

இப்போட்டி நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் தொடர்பில் 076 799 7059 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (க)

# யங்கம்பன்ஸ் உதைபந்தாட்டத்தொடர் குறிஞ்சிக்குமரன்-ஞானமுருகன் வெற்றி



கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடந்த ஆட்டமொன்றில்குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது. பரபரப்பான ஆட்டத்தில் குறிஞ்சிக் குமரன் அணி 02:01 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு நுழைந்தது.

நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் சென்.மேரிஸ் அணியினை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதியது. இப்போட்டியில் ஞானமுருகன் அணி 01:00 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றிற்கு நுழைந்தது.(க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

சங்கானை கிங்ஸ் நடத்தும் மாபெரும் மென்பந்துச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்த உள்ளது. போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது பதிவினை 077 960 0947 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பதிவு செய்ய முடியும். போட்டியானது 21 வயதிற்குற்பட்டவர்களுக்கானதும், சகல வயதினருக்குமாக என இரு சுற்றுப் போட்டிகளாக நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க)

# அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது
076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு
அனுப்பிவையுங்கள்.

## உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# கலைமகள் ச.ச.நிலையத்தின் விளையாட்டுப்போட்டிகள்

யாழ்ப்பாணம், அத்தியடி கலைமகள் சனசமூக நிலையம் நடத்தும் யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள் அணிக்கு ஆறு பேர் கொண்ட 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து, கிரிகெட்சுற்றுப்போட்டி, வலைப்பந்தாட்டம் (பெண்கள்), கரப்பந்தாட்டம்(ஆண்கள்), கரம் (பெண்கள்) ஆகிய போட்டிகள் நடைபெற உள்ளன.

பங்குபற்ற விரும்பும் அணிகள் ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பு கலைமகள் சனசமூக நிலையம், அத்தியடி, யாழ்ப்பாண மன்ற முகவரிக்கோ அல்லது 076 799 7059 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும். (க)



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் 2017ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிளிநொச்சி 73 கிராமசேவையாளர் பிரிவில் உள்ள ஜின்னா விளையாட்டுக்கழகத்திற்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன, அத்துடன், கிளிநொச்சி 71,72 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பல்லவராயன்கட்டு மாதர் அபிவிருத்தி சங்கம், கரியாலை நாகபடுவான் கிராம அபிவிருத்தி சங்கம், பல்லவன் முன்பள்ளி நிலையம் ஆகியவற்றிற்கு தளபாடங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வின் போது பூநகரி பிரதேச சபை உறுப்பினர் முகமெட் கபீர், வட்டார பிரதிநிதி இராசேந்திரம், காசித்தம்பி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்:கிளி.குமார்)

## ஞானசார தேரர் குற்றவாளி...

முறைப்பாட்டின் அடிப்படையிலும் நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டிலும் ஞானசார தேரர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட போதும் பின்னர் அந்த வழக்கிலிருந்து அவருக்கு பிணை வழங்கப்பட்டிருந்தது.

சாட்சிகளுக்கு அழுத்தம் மேற்கொள்வதையும், வெவ்வேறு இடங்களில் பல்வேறு அறிக்கைகளை விடுவதையும் நிறுத்திக் கொள்ளுமாறும் நீதவான் அவருக்கு கடும் நிபந்தனை விதித்தே பிணை வழங்கினார்.

இந்த நிலையில் ஹோமாகம நீதவான் நீதிமன்றில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வழக்கு விசாரணை இடம்பெற்று வந்தது.

ஹோமாகம நீதிவான் உதேஷ் ரண துங்க முன்னிலையில் வழக்கு தீர்ப்புக்காக நேற்று அழைக்கப்பட்டது.

சந்தியா எக்னெலிகொடவுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் எதிரியான ஞானசார தேரர் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு சாட்சியங்களின் ஊடாக நியாயமான சந்தேககங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால் அவரை குற்றவாளி என மன்று தீர்ப்பளிக்கிறது என்று நீதவான் அறிவித்தார்.

ஞானசார தேரரின் கைவிரல் ரேகையையும் பெற்றுக்கொள்ள உத்தரவிட்ட நீதவான், அவருக்கான தண்டனைத் தீர்ப்பை எதிர்வரும் ஜுன் 14ஆம் திகதி வழங்குவதாக வழக்கை ஒத்திவைத்தார். (ம)

## கேபிள் ரீவி இணைப்பை...

ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு நீதவான் எஸ்.சதீஸ்தரன் அனுமதியளித்து கட்டளை வழங்கினார்.

யாழ்ப்பாணத்தில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் சட்டவிரோதமாக கேபிள் ரீவி இணைப்புகள் வழங்கப்படுகின்றன. அவற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள கொழும்பிலிருந்து வந்து முன்னெடுக்கவுள்ளனர்.

ஆணைக்குழுவின் இந்த நடவடிக்கைக்கு யாழ்ப்பாணப் பொலிஸாரின் சேவையையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணப் பொலிஸாரின் உதவியைப் பெற்று இந்த சட்டவிரோத நடவடிக்கையைக் கட்டுப்படுத்த நீதிமன்று அனுமதி வழங்க வேண்டும் என தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் யாழ். நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் புதன் கிழமை விண்ணப்பம் செய்யப்பட்டது.

அதனை ஆராய்ந்த நீதிவான், சட்டவிரோத கேபிள் ரீவி இணைப்புக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்குவதாகக் கட்டளை வழங்கினார்.

இதன்மூலம் யாழ்ப்பாண மாநகரம் மற்றும் நல்லூர் பிரதேசம் உட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத கேபிள் இணைப்புக்கள் துண்டிக்கப்படும் என தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்தது.(ம-9)

## போதனாசிரியர்களை...

யர்கள் மூவரை பணியிலிருந்து நிறுத்த யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் இடைக் காலத் தடை விதித்துள்ளது.

பதவி நீக்கப்பட்ட தையல் போதனாசிரியர் மூவர் சார்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட உறுதிகேள் எழுத்தாணை மனு மீதான விசாரணைக்காக எதிர் மனுதாரர்களான வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர், திருமதி ந.இன்பராஜ், முதலமைச்சரின் அமைச்சு செயலாளர் திருமதி வி.கேதீஸ்வரன் மற்றும் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் சி. பத்மநாதன் ஆகியோரை எதிர்வரும் ஜுன் 21ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய தையல் போதனாசிரியர்களான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நடராசா புஸ்பரதி, மன்னாரைச் சேர்ந்த சியாமளா மவுன்லின் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த சுமர்டின் சுஜித்தா ஆகிய மூவர் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தனித் தனியே உறுதிகேள் எழுத்தாணை மனுவைத் தாக்கல் செய்தனர்.

மனுவில் எதிர்மனுதாரர்களாக வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர், திருமதி ந. இன்பராஜ், முதலமைச்சரின் அமைச்சு செயலாளர் திருமதி வி.கேதீஸ்வரன் மற்றும் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் சி. பத்மநாதன் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர்களை நிரந்தர நியமனத்துக்கு தகுதியற்றவர் என முடிவுறுத்தும் முதலாம் எதிர் மனுதாரரின் கடந்த ஏப்ரல் 11ஆம் திகதிய கடிதம் வெற்றும் வறிதானதும் என ஆணையிடவேண்டும், மனுதாரர்களை நிரந்தர தையல் போதனாசிரியர்களாக நியமிக்க ஆணையிடவேண்டும், 2016ஆம் ஆண்டு ஜுலை 15ஆம் திகதி மாகாண ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்டதும் 2013ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியை செல்லுபடியாகும் திகதியாகக் கொண்டதுமான தையல் போதனாசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பை மத்திய அரசின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இலக்கம் 28/2016, 01. 12.2016ஆம் திகதிய சுற்றறிக்கைக்கு அமைவாக திருத்தவேண்டும் என்று ஆணையிடவேண்டும்.

இந்த மனுக்களை விசாரித்துத் தீர்ப்பளிக்கும் வரை மனுத்தாரர்கள் வகிக்கும் பதவியிலிருந்து அவர்களை நீக்கக் கூடாது என்றதும் அவர்களுக்குப் பதிலாக வேறு எவரையும் நியமிக்கக் கூடாது என்றதுமான தடைக் கட்டளையிடவேண்டும் அத்துடன் வழக்குச் செலவும் மன்று நியாயமானவை எனக் கருதும் நிவாரணங்களுக்காகவும் என்று மனுதாரர்கள் எழுத்தாணை மீதான நிவாரணங்களைக் கோரியுள்ளனர்.

இந்த மனுக்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதன்போது மன்று இடைக்காலத் தடையுத்தரவை வழங்கி கட்டளை வழங்கியது.

மன்று மனுக்களை ஆய்வு செய்வதுடன் அவருடைய வாய்மூல விண்ணப்பத்தை பரிசீலனை செய்து முதற்றோற்றளவில் குறிககப்பட்ட மனுதாரர்களுக்கு நியாயமான எதிர்பார்ப்பு உள்ளது என்பதை மன்று ஏற்றுக் கொள்வதுடன் குறிக்கப்பட்ட மனுக்களில் கோரப்பட்ட இடைக்காலத் தடைக்கட்டளையை குறிக்கப்பட்ட எழுத்தாணை மனுக்கள் விசாரணை முடிவடையும் வரைக்கும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் எதிர்மனுதாரர்களுக்கு மன்று பிறப்பிக்கின்றது.

மனுதாரர்களால் நியாயமான எதிர்பார்ப்பு முன்வைக்கப்பட்டுள்ளது என மன்று திருப்தியடைவதனால் இடைக்கால தடைக் கட்டளையை பின்வருமாறு பிறப்பிக்கின்றது,

எழுத்தாணை மனுக்கள் விசாரணை விசாரித்து தீர்ப்பளிக்கும் வரை மனுதாரர்கள் வகித்த பதவியிலிருந்து மனுதாரர்களான நடராசா புஸ்பரதி, சியாமளா மவுன்லின், சுமர்டின் சுஜித்தா ஆகியோரை நீக்கக் கூடாது என முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் எதிர்மனுதாரர்களுக்கு மன்று இடைக் கால தடைக்கட்டளையை பிறப்பிக்கின்றது என நீதிபதி கட்டளை வழங்கினார். (ம-9)

## யாழில் இரு வாரங்களுக்குள்...

கொண்டுவரப்பட்டிருந்தது.

அண்மையில் தென்பகுதியில் குறித்த நோய்த்தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மீண்டும் யாழ்.மாவட்டத்துக்குள் இந்த நோயின் தாக்கம் இனங் காணப்பட்டுள்ளது.

அந்த வகையில் யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் இருந்து 10 பேர் வரையில் கடந்த இரு வாரங்களுக்குள் குறித்த நோய்த் தொற்று இருப்பதாக இனங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் பரிசோதனை செய்யப்பட்டு மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இன்னும் உறுதிப்படுத்தப் படவில்லை.

எனவே தற்போது மழை காலமாக இருப்பதாலும் தொற்றுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகவுள்ளது. அதாவது தொண்டை நோ, தடிமனுடன் கூடிய காய்ச்சல் ஏற்பட்டால் அல்லது அதற்கான அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள அரச மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெறவேண்டியது அவசியம் ஆகும்.

இது குறிப்பிட்ட சில தரப்பினரை உடனடியாக பாதிக்கின்றது. அதாவது 2 வயதுக்குட்பட்ட சிறு பிள்ளைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், தொற்றா நோய் உள்ளவர்கள் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் குறித்த தாக்கத்துக்கு இலகுவில் உள்ளாக்கப்படுகின்றனர்.

இது காற்றால் பரவும் நோயாக இருப்பதால் பொது இடங்களில் அநாவசியமாக செல்வதை தவிர்த்தல் அவசியம் எனவும் சனநெருக்கமான இடங்களுக்கு செல்வதை தவிர்ப்பதுடன், இதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மிக அவசியம் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## கேரளக் கஞ்சாவுடன்...

7.30மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை சென்ற பேருந்தில் கேரளா கஞ்சா கொண்டு செல்லப்படுவதாக போதை ஒழிப்புப் பிரிவினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதன் அடிப்படையில் சோதனை மேற்கொண்ட பொலிஸார் யாழ்ப்பாணம் தாளையடியைச் சேர்ந்த கணேசலிங்கம் கோகிலம் (வயது 44) என்ற பெண்மணி ஒருவரை சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

கைது செய்த நபரிடமிருந்து 4கிலோ 62 கிராம் கேரளா கஞ்சாவினை மீட்டுள்ளதாகவும், குறித்த கஞ்சாவினை ஹொறவப்பொத்தான பகுதியில் நபர் ஒருவருக்கு வழங்குவதற்கு எடுத்துச் சென்றுள்ளதாக விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.(ம-15.281)

## ஓர் இலட்சத்து 25...

கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள செய்திக்குறிப்பொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை தாழமுக்கமாக அதிகரிக்கின்றமையே இதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வங்கி உதவி முகாமை...

யப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் அமைந்துள்ள வங்கி ஒன்றில் கடந்த 18ஆம் திகதி அதிகாரிகளும் ஊழியர்களும் ஒன்று சேர்ந்து நினைவுச் சுடர் ஏற்றி வணக்க நிகழ்வில் ஈடுபட்டனர்.

இந்த நினைவேந்தல் தொடர்பான நிழற்படம் சமூகவலைத்தளத்தில் எங்கோ பதிவாகியதும் அதைக் கண்ட பேரினவாதிகள் குறித்த வங்கிக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

இதன் தொடர்ச்சியாக கொழும்பிலுள்ள குறித்த தனியார் வங்கியின் தலைமை அலுவலக உயர் அதிகாரிகள், வங்கியின் உதவி முகாமையாளரை விசாரணைக்கு உட்படுத்தினர்.

இறுதி யுத்தத்தில் தம் உயிர்களை அர்ப்பணித்த உறவினர்களை நினைவு கூருவது, அவர்களின் உரிமை என உதவி முகாமையாளர் தலைமை அலுவலக உயர் அதிகாரிகளுக்கு எடுத்துரைத்துள்ளார்.

ஆனால் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் போராளிகளை நினைவு கூர்ந்து வங்கியில் நினைவுச் சுடர் ஏற்றியமை தேசத்திற்கு விரோதமானது என்று குறித்த வங்கியின் கொழும்புத்தலைமை வாதிட்டிருக்கிறது.

அதுமட்டுமின்றி, உடனடியாக அந்த நிகழ்வை ஏற்பாடு செய்த உதவி முகாமையாளர், மற்றும் ஊழியர் ஒருவரையும் பணியில் இருந்து இடை நிறுத்துவதாகவும் அறிவித்துள்ளனர். (ம-9)

## மகிந்தவின் ஆசீர்வாதம்...

எம்.பி தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபாலவின் வீட்டில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார். (ம)

## இராணுவத்தின் காணி...

கையாக வேலி அமைக்கும் பணியை முன்னெடுத்தது.

நேற்று மாலை குறித்த காணியை சுவீகரிக்கும் முயற்சியில் இராணுவம் ஈடுபட்டதை அவதானித்த மக்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந்த் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் குறித்தபகுதியில் கூடி இராணுவ அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடியதோடு காணி சுவீகரிப்பை நிறுத்துமாறும் தொடர்ந்து இடம்பெறுமானால் மக்கள் போராட்டம் இடம்பெறும் எனவும் தெரிவித்தனர்.

எனினும் குறித்த முகாமில் உயர்நிலை அதிகாரி இல்லாத நிலையில் இரண்டாம் நிலை அதிகாரி மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களுடன் கலந்துரையாடி மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் தெரிவித்த விடயங்களை உயரதிகாரிக்கு தெரிவிப்பதாக தெரிவித்தார். இருப்பினும் காணி சுவீகரிப்பு நிறுத்த வேண்டும் எனவும் இல்லை யெனில் மக்கள் போராட்டம் இடம்பெறும் எனவும் குறித்த அதிகாரியிடம் தெரிவித்தனர். (ம-281)

## வடக்கு மாகாண...

கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் உறுதிகேள் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை ஏற்றுக்கொண்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம், எதிர் மனுதாரர்களுக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டதுடன் மனுதாரரால் கோரப்பட்ட நிவாரணங்களில் ஒன்றான இடைக்காலத் தடைக் கட்டளையை எதிர்வரும் 30ஆம் திகதி வழங்கப்படும் என மனுவை ஒத்திவைத்துள்ளது.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கு தகுதியானவர்களை விண்ணப்பிக்குமாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் அண்மையில் பத்திரிகை ஊடாக விண்ணப்பங் கோரல் விளம்பரத்தை வெளியிட்டார்.

பதில் அல்லது நிரந்தர கல்விப் பணிப்பாளராக தற்போது கடமையாற்றும் கல்வி வலயத்தில் 3 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்திருக்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது.

இந்த நிபந்தனை சேவைப் பிரமாணக் குறிப்புக்கு முரணானதெனக் குறிப்பிட்டு யாழ்.தீவகம் வலயக் கல்விப் பணிப்பாளர் இளங்கோ, சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிப் பேராணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

எதிர் மனுதாரர்களாக முறையே வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கோரலையும் அதனை மேற்கொண்டு செயற்படுத்துவதனையும் இடைநிறுத்திவைக்கும் இடைக்காலத் தடைக் கட்டளை வழங்கவேண்டும் எனவும் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பம் கோரலை விடுத்த முதலாவது எதிர்மனுதாரர் அவரது பொதுக் கடமையை மீறிய இந்த சட்டவிரோத விண்ணப்பங்கோரலை வெற்றும் வறிதானதுமாக உறுதிகேள் எழுத்தாணை கட்டளையை வழங்கவேண்டும்,

வழக்குச் செலவு மற்றும் மன்றால் நியாயமானது எனக் கருதும் பிற நிவாரணங்களும் என மனுதாரரால் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மனுவை ஏற்றுக்கொண்ட மன்று, பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்புமாறு பதிவாளருக்கு உத்தரவிட்டது.

அத்துடன், மனுதாரரின் முதலாவது நிவாரணமான இடைக்காலத் தடைக் கட்டளை தொடர்பான மன்றின் அறிவிப்பு எதிர்வரும் 30ஆம் திகதி வழங்கப்படும் எனக் குறிப்பிட்டு அன்றைய தினம் வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம-9)

## விசேட கருத்தரங்கு

ஆசிரியர் சேவை போட்டிப்பரீட்சை
26.05.2018 சனி 10Am-03Pm
29.05.2018 செவ்வாய் 09Am-02Pm
02.06.2018 சனி 9Am-02Pm
P.கமல்தாசன் - SLPS
எதிர்பார்க்கை விடயங்கள்
நாவலர் கல்வி நிறுவனம்.
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C-2707)
077 469 6695
விரைவில் » SLEAS


## மோட்டார் சைக்...

சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான சின்னத்துரை இராஜரட்ணம் (வயது 65) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

நேற்று காலை 7.30 மணிக்கு கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்காக வந்த குறித்த நபர், சிகிச்சை பெற்றுவிட்டு கோப்பாய் சந்தி வழியாக பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதியில் பயணித்துள்ளார்.

குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது, பின்புறமாக வந்த ஹன்டர் வாகனம் அவரை மோதியுள்ளது. அந்த இடத்திலே படுகாயமடைந்த நபர் மயக்கமடைந்துள்ளார்.

உடனடியாக ஹன்டர் வாகன சாரதி குறித்த நபரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளார். இருப்பினும் குறித்த நபர் இறந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## மின்னல் தாக்க...

அறிவித்துள்ளது.

இதனால் மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது. யாழ்ப்பாணம் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் இடி, மின்னல் தாக்கங்கள் தொடர்ச்சியாக பதிவாகிவரும் நிலையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இடி.மின்னல் தாக்கம் காரணமாக கடந்த ஒருவாரகாலத்திற்குள் இதுவரை ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கமைய இடிமின்னலுடன் கூடிய அடை மழை மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு, மண்சரிவு காரணமாக இதுவரை 13 பேர் உயிரிழந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பயங்கரவாத...

குற்றத்தடுப்பு பிரிவினரால் கொழும்பு 4 ஆம் மாடிக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ஜெயக்குமார் 2010 ஆம் ஆண்டு புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அத்துடன் கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)


# அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்

கடந்த 25.04.2018 புதன்கிழமை இறைபதம் அடைந்த
எமது அன்புத் தெய்வம்

தோற்றம் 16 . 05 . 1947



மறைவு 25 . 04 . 2018

## அமரர் Dr.சிவகுரு வேலாயுதம்

அவர்களின் இழப்பினால் நாம் துயருற்றிருந்த வேளையில் பல்வேறு வகைகளில் எம்முடன் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டு பல வழிகளில் எமக்கு உதவி நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் 27.05.2018 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும் (C-2709)

"நிமலகம்"
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்



## விற்பனைக்கு

* மீன்பிடி றோலருக்கான 30 அடி புதிய வள்ளம், யன்மார் 2 சிலிண்டர் (Full Recondition) எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.

வேம்படி வல்வெட்டித்துறை
தொடர்புகளுக்கு 077 357 3055

## விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## வெளிவந்து விற்பனையாகின்றது

பொது அறிவு -2018
-700ரூபாய்
பொது அறிவும் நுண்ணறிவும்
-650ரூபாய்
ஆசிரியர் போட்டி பரீட்சை வழிகாட்டி
-600ரூபாய்
IQ World -500ரூபாய்
P.Kamalthasan -SLPS
பூபாலசிங்கம்-யாழ்ப்பாணம். (C-2707)

## சவுதி அல்மராய் கம்பனிக்கு யாழிலிருந்து 9 பேர் தெரிவாகினர்!

நீங்களும் இந்த அரிய வாய்ப்பைப் பெற!

45,000 - 80,000/- உடன்
மெக்கானிக், A/C டெக்னீஷியன், வெல்டர், வீட்டு & வாகன மின் இணைப்பாளர், பிளம்பர், விற்பனை உதவியாளர், சாரதிகள், தொழிலாளர்

வாகன சாரதிகளுக்கு வாசியான வேலைவாய்ப்புக்கள்!

| | | | |
|---|---|---|---|
| கட்டார் | மோட்டார் சைக்கிள் | டெலிவரி றைடேர்ஸ் | 63,000/- + |
| கட்டார் | சிறிய ரக வாகனம் | டக்சி ட்றைவர் | 49,200/- + கமி |
| சவுதி | கன ரக வாகனம் | விற்பனை சாரதிகள் | 80,000/- + கமி |
| சவுதி | | ட்ரெய்லர் டிறைவர் | 70,000/- + OT |

அரச அங்கீகாரம் பெற்ற வடக்கின் ஒரே வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
பதிவுகளுக்கு 077 36 16 798
SIKARAM ACADEMY
FAST TRACK to CAREERS
221-1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்
021 - 222 00 11
www.sikaram.lk
TGL SINCE 1990
Trans Gulf (Pvt) Ltd.,
90, First Floor, Chatham Street, Colombo 1
www.tgl.lk

## Mobile Phone Repairing Course



(C-2708)
I Phones & Smart Phones
Hardware, Software and Unlocking
19th Batch start on 26.05.2018
* சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
* தனிப்பட்ட கவனிப்பு.
* சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
(Network Engineering கற்கைநெறி 26.05.2018 முதல் ஆரம்பம்)
iCS EDUCATION
77, மலிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம்
076-7013060, 021-7306000



# பகிரங்க விரிவுரை

"மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017 இல் பிரதிபலிக்கப்பட்டவாறு பொருளாதார நிலை"
(தமிழ் மொழியில்)

2018 மே 28 திங்கட்கிழமை
பி.ப. 2.00 மணி
இடம் :-
கேட்போர்கூடம்,
பொதுநூலகம்,
யாழ்ப்பாணம்.

அனுமதி இலவசம்!

அனைவரும் வருக !!!

பிரதேச அலுவலகம்,
இலங்கை மத்திய வங்கி,
அறிவியல்நகர், கிளிநொச்சி.



(4194)

பேச்சாளர்
திரு.பா.சிவதீபன்,
பிரதேச முகாமையாளர்,
பிரதேச அலுவலகம்,
இலங்கை மத்திய வங்கி,
கிளிநொச்சி.

தொலைபேசி : 021 228 5914
தொலைநகல் : 021 228 5911
மின்னஞ்சல் : rokn@cbsl.lk



## முழுநிலா கருத்தரங்கு

உயர்கலைக் கல்லூரி A9 வீதி, மீசாலை.
2018 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற உள்ள மாணவர்களுக்கானது.

27.05.2018 புவியியல்
V.செந்தூரன் -பகுதி I
V.மயூரன் -பகுதி II

29.05.2018 வரலாறு
S.Y.R.இரவீந்திரன்
S.S.Y.பிரதீபன்
(அரசியல் சீர்திருத்தங்கள்)

(இறுதிப் பரீட்சைக்கான எதிர்பார்க்கை விடயங்கள்)
077 236 7520 நிர்வாகி

## Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை-யாழ்)
A/L தொழில்நுட்பப் பிரிவு
A/L 2020,2019 மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா...
கண்டி நுவரெலியா
(ஆராய்ச்சி நிலையம், பண்ணை, *Tissue Culture lab* பார்வையிடப்படும்.)
A/L 2018 மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள்.
SFT - ICT பாடம் நடைபெறுகின்றது
E-Tec - இலத்திரனியல்
ICT - Paper class
Agri - Paper class
A/L 2020 புதிய பிரிவு ஆரம்பம்
26.05.2018, காலை 08.00
077 017 5346 (ரி-2710)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.